REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஏப்ரல் 13 செவ்வாய்க்கிழமை

# தினகரன்


THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 88 | April 13, Tuesday, 2021 | 16 பக்கங்கள் | 30/-

## இராணுவத்திற்கு எதிராக சிலர் பொய் பிரசாரம்

### யாழில் இராணுவ தளபதி



வெளிநாட்டில் இருப்பவர்கள் குழப்பத்தை ஏற்படுத்த இங்குள்ளவர்களுக்கு பணம் அனுப்புகின்றனர். அதனை பெற்றவர்கள், அல்லது வெளிநாட்டு தொடர்புடையவர்கள் இராணுவத்திற்கு எதிராக

06



சுபிட்சம் வேண்டி பிரார்த்திப்போம்! 05

சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர் 09-10



தமிழகத்தில் அதிகரிக்கும் கொரோனா 15



10 ஓட்டங்களால் கொல்கத்தா வெற்றி 16

## எதிர்பார்ப்புகளை அடைய உறுதியுடன் வரவேற்போம்



### ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

புத்தாண்டை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக்கூடிய வகையில் இந்த ஆண்டின் பின்னணியை நாம் அனைவரும் சேர்ந்து அமைத்திருக்கின்றோம். அது புத்தாண்டின் விடியலை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கும் சிறு பிள்ளைகளைப்

06





## அனைத்து இலங்கையரினதும் சகல எதிர்பார்ப்புகளும் நிறைவேறும்

### புதுவருட செய்தியில் பிரதமர் மஹிந்த



புதிய சிந்தனைகள் மற்றும் அபிலாஷைகளுடன் நாம் எதிர்கொள்ளும் சவால்களை கவனத்திற்கொண்டு, ஒரு வளமான நாட்டை நோக்கிய ஒரு புதிய பாதையில் பயணிக்க வேண்டிய நேரம் எழுந்துள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது, அனைத்து இலங்கையர்களினதும் புதிய

06

## சித்திரை புத்தாண்டின் புது வரவில் தேசமெங்கும் மகிழ்வு பூக்கட்டும்!

### சித்திரைப்புத்தாண்டு வாழ்த்து செய்தியில் டக்ளஸ்



பிறந்திருக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டின் வரவில் சகல மக்களின் மனங்கள் தோறும், வரலாற்று வாழ்விடங்கள் தோறும் புது மகிழ்வு பூக்கட்டும் என கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா சித்திரைப்புத்தாண்டு வாழ்த்து செய்தியில்

06

1000 ரூபா சம்பள அதிகரிப்புடன்

## இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கும் புதுவருடம்



### அமைச்சர் ஜீவன் தொண்டமான் வாழ்த்து

இலங்கை தேசத்து மக்களின் இல்லங்கள் தோறும் மகிழ்ச்சியும், உள்ளங்கள் தோறும் நிம்மதியும் நிலைபெறும் ஆண்டாகவும் இந்த பிலவ வருடமானது அனைத்து உள்ளங்களும், சந்தோஷமடைந்து இலங்கைத்தாய் மனம் திருப்தி கொள்ளும் இனிய வரத்தை இந்த சித்திரைப் புத்தாண்டு தந்தருளட்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தமது சித்திரைப்

06

முல்லைத்தீவில் அனுமதி பெறப்படாது கிராம அலுவலர் ஒருவரினால்

# சட்டவிரோதமாக அகழ்ந்து குவிக்கப்பட்ட கிரவல் மண்

### 750 டிப்பர் லோட் மணல் பொலிஸாரினால் கைப்பற்றல்



முல்லைத்தீவு விசேட நிருபர்

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் மானுருவி பகுதியில் அனுமதிப்பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் பாரிய அளவில் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ள போதும் இதற்கு எதிராக திணைக்களங்கள் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என

06



இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா யாழ்ப்பாணத்திற்கான திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். யாழின் பாதுகாப்பு மற்றும் கொவிட் நிலவரம் குறித்து ஆராய அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பிலவ வருஷம்



### வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 புதன்கிழமை
அதிகாலை 1.39

**விஷு புண்ணியகாலம்:**
13.04.2021, 9.30 பி. ப. முதல் 14.04.2021 5.39 காலை வரை

**ஆடை நிறம்** : நீலம், சிவப்பு நிற பட்டாடை/ நீலம், சிவப்பு கரை கொண்ட பட்டாடை

**ஆபரணம்** : நீலம், பவளம் இழைத்த ஆபரணங்கள்

### திருக்கணிதப் பஞ்சாங்கத்தின்படி

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 புதன்கிழமை
அதிகாலை 2.31

**விஷு புண்ணியகாலம்:**
13.04.2021, இரவு 10.33 முதல் 14.04.2021 5.39 காலை வரை

**ஆடை நிறம்** : செந்நிறப் பட்டாடை, சிவப்பு கரை கொண்ட வெள்ளை ஆடை

**ஆபரணம்** : பவளம் கொண்ட ஆபரணங்கள்



கலாநிதி சிவஸ்ரீ
**இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா**
சர்வதேச இந்து மத பீட செயலாளர்



ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் - குற்றவாளிகள்; எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன் கண்டறியப்படுதல் வேண்டும் 03



இரண்டாவது டோஸ் செலுத்த 2,30,000 தடுப்பூசிகள் கைவசம்
செலுத்தும் திகதியை நிபுணத்துவ குழு தீர்மானிக்கும் 03



அலுவலக ரயில் சேவைகள் இன்றும் நாளையும் ரத்து
புதுவருட விசேட சேவைகள் தொடரும் 03

## சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை

### கனவிலும் கிடையாது என்கிறார் சரத் வீரசேகர



புதிய அரசமைப்பிலும் ஒற்றையாட்சியே பேணப்படும். ஒற்றையாட்சியால் நாடு எந்தப் பேரழிவையும் சந்திக்கவில்லை. சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவிடம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யோசனைகளை அந்தக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் சமர்ப்பித்திருந்தார். அதில் ஒற்றையாட்சியால் தான் நாடு பேரழிவைச் சந்தித்தது என்றும், புதிய அரசமைப்பில் சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

06

## எவ்வித தடையுமின்றி 5000 ரூபா வழங்கப்படும்

### நேற்று ஆரம்பம்; இன்றும் தொடரும்

### இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற

லோரன்ஸ் செல்வநாயகம்



எவர் எத்தகைய விமர்சனங்களை முன்னெடுத்தாலும் அரசாங்கம் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்தார். தமிழ் சிங்கள

06

## மாகாண சபைத் தேர்தலில் சு.க தனித்தே போட்டியிடும்

### கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் தெரிவிப்பு



எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் தனிக் கட்சியாக போட்டியிட திட்டமிட்டுள்ளதாக சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார். ஸ்ரீ.ல.சு.க.வை

06

## சர்ச்சைக்குரிய எண்ணெய் மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதி

### ஏற்றிச்செல்ல கப்பல் இலங்கை வந்தது

லோரன்ஸ் செல்வநாயகம்



புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளதாக கூறப்படும் தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் நேற்றைய தினம் அதனை ஏற்றிச் செல்வதற்காக மலேசியாவிலிருந்து பார்பரா என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய தெரிவித்தார். 'எப்லடொக்சின்' இரசாயனம் கலந்துள்ளதாக இனங்காணப்பட்டுள்ள மூன்று கோடிக்கு மேல் பெறுமதியுள்ள 105.000 கிலோ தேங்காய் எண்ணெய் மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

06

## அனுமதியின்றி உம்ரா யாத்திரை; 10,000 ரியால் அபராதம்

### சவூதி அரசு எச்சரிக்கை



அனுமதி இல்லாமல் உம்ரா யாத்திரை செல்வோருக்கு 10,000 ரியால் அபராதம் (சுமார் 5 இலட்சம் இலங்கை ரூபா ) விதிக்கப்படும் என சவூதி அரேபியா அரசு எச்சரித்துள்ளது.

ரமழான் மாதத்தில் உம்ரா அல்லது வேறு ஏதேனும் யாத்திரைக்கு வருவோர் உரிய அனுமதி இல்லாமல் யாத்திரை மேற்கொள்ள முயற்சித்தால் 10,000 ரியால் அபராதம் விதிக்கப்படும் என சவூதி அரேபியா அரசு எச்சரித்துள்ளது. பெர்மிட் இல்லாமல் மக்கா மஸ்ஜிதுல்

06

### விக்கல் வீராச்சாமி



ஐயா, நீங்க நடத்தின 12 மணிநேர உண்ணாவிரதத்தை பத்திதான் ஊர் முழுக்க பேச்சா இருக்கு....

தம்பி, டாக்டர் ரத்தம் சோதிக்க 12 மணித்தியாலம் சாப்பிடாம இருந்துட்டு வரச்சொன்னார், அத நான் உண்ணா–விரதமா மாத்திட்டேன், ஒரு கல்லுல ரெண்டு மாங்கா...!!!

# சர்வதேச செய்திகள்

## ஈரானின் அணு உலை வெடிப்பை பயங்கரவாத செயலாக அறிவிப்பு

ஈரான் அணு உலை ஒன்றில் புதிய யுரேனிய செறிவூட்டல் உபகரணங்கள் பொருத்தப்பட்ட ஒரு தினத்தின் பின் அந்த நிலையத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை நாசகார தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டு முன்னணி அணு அதிகாரி அலி அக்பர் சலாஹி தெரிவித்துள்ளார்.

தலைநகர் டெஹ்ரானுக்கு தெற்கே உள்ள நடான்ஸ் வளாகத்தில் மின்சாரம் செயலிழந்த இந்தச் சம்பவத்தை 'பயங்கரவாதச் செயல்' என குறிப்பிட்ட அவர் இதன் பின்னணியில் இருப்பவர்கள் பற்றி எதுவும் கூறவில்லை.

எனினும் இஸ்ரேலிய உளவு பிரிவின் தரப்புகளை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய அரச ஊடகம் வெளியிட்ட செய்தியில், இது ஒரு இஸ்ரேலிய சைபர் தாக்குதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் நேரடியாக எந்த பதிலும் அளிக்கவில்லை.

எனினும் ஈரானின் அணு செயற்பாடுகள் குறித்து இஸ்ரேல் அண்மைக் காலத்தில் கடும் எச்சரிக்கைகளை விடுத்து வந்தது.



2018 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நிர்வாகத்தில் வெளியேறிய ஈரானுடனான 2015 அணு உடன்படிக்கையை புதுப்பிக்கும் இராஜதந்திர முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நடான்ஸ் தளத்தில் புதிய மையநீக்கிகளை ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி கடந்த சனிக்கிழமை திறந்து வைத்தார். இந்த நிகழ்வு ஈரான் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

யுரேனிய செறிவூட்டலுக்கு இந்த மையநீக்கி கருவிகள் அவசியமாகும். இந்த செறிவூட்டல் எரிசக்தி உருவாக்க பயன்படுவதோடு, அணு ஆயுதங்கள் உருவாக்கவும் தேவையாகும்.

எனினும் இந்த அமைப்பு ஈரான் செய்து கொண்ட 2015 அணு உடன்படிக்கையை மீறும் மற்றொரு செயலாக உள்ளது. இந்த உடன்படிக்கையின்படி வணிக மின் உற்பத்தி ஆலைகளுக்கு எரிசக்தி உற்பத்தி செய்வதற்கு செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை குறிப்பிட்ட அளவு மாத்திரமே உற்பத்தி செய்யவும் களஞ்சியப்படுத்தவும் முடியும் என்று ஈரானுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஞாயிறன்று நடந்த சம்பவத்தில் அணு நிலையத்தின் மின்சார வலையமைப்பு பாதிக்கப்பட்டதாக ஈரான் அணு சக்தி அமைப்பின் பேச்சாளர் பஹ்ரூஸ் கமல்வான்டி தெரிவித்திருந்தார்.

ஈரான் தலைநகர் டெஹ்ரானுக்குத் தெற்கே 200 கி.மீ. தொலைவில் பூமிக்கு அடியில் நடான்ஸ் அணு உலை மையம் அமைக்கப்பட்டுள்ளது. வானிலிருந்து ஏவுகணை தாக்குதல் நடத்தினாலும் பாதிப்பு ஏற்பட முடியாத வகையிலான பாதுகாப்பு வசதி கொண்டதாக இந்த மையம் உள்ளது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் இதே மையத்தில் மர்ம வெடிப்பு ஏற்பட்டு யுரேனியம் செறிவூட்டும் கருவிகள் பலத்த சேதமடைந்தன. அது தொடர்பான விசாரணை இன்னும் முடியாத நிலையில், தற்போது மர்மமான முறையில் மின்தடை ஏற்பட்டுள்ளது.

## கொவிட்–19 தடுப்பூசிகளை கலந்து பயன்படுத்த திட்டம்




சீனா வெவ்வேறு தொழில்நுட்பங்களைக் கொண்டு கொவிட்–19 தடுப்பூசிகளைக் கலந்து பயன்படுத்துவது குறித்துப் பரிசீலித்து வருகிறது.

அந்நாட்டின் நோய்க் கட்டுப்பாட்டுத், தடுப்பு நிலையம் ஏற்கனவே இருக்கும் தடுப்புமருந்துகளின் செயல்திறனை அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

செலுத்தப்படும் தடுப்பு மருந்தின் அளவை அதிகரிப்பது, தடுப்பூசி போடப்படும் இடைவெளியைச் சரிசெய்வது, இன்னும் அதிக முறை தடுப்பூசி போடுவது போன்ற தெரிவுகளை நிலையம் பரிசீலிக்கிறது.

தற்போதைக்கு வெவ்வேறு தடுப்பூசிகளைக் கலந்து பயன்படுத்துவதைச் சீனா பரிந்துரைக்கவில்லை.

பைசர்–பயோஎன்டெக், மொடர்னா ஆகிய நிறுவனங்கள் தயாரித்துள்ள 2 தடுப்பு மருந்துகளின் செயல்திறன் 90 வீதத்திற்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

தடுப்பூசிகளைக் கலந்து பயன்படுத்துவதால், நோய்ப்பரவலிலிருந்து இன்னும் அதிகமான பாதுகாப்புக் கிட்டுமா என்பது குறித்து பிரிட்டன் போன்ற நாடுகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொது மக்களின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட நான்கு உள்நாட்டு தடுப்பு மருந்துகளை சீனா மேம்படுத்தி இருப்பதோடு இந்த ஆண்டு இறுதிக்குள் 3 பில்லியன் டோஸ் தடுப்பு மருந்துகளை தயாரிக்க எதிர்பார்ப்பதாக சீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## யெமன் மாரிப் நகரில் மும்முனை மோதல்: இரு தரப்பிலும் 70 பேர் பலி



யெமனின் மூலோபாயம் மிக்க மாரிப் நகரில் மூன்று முனைகளில் வெடித்திருக்கும் கடும் மோதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் அரச ஆதரவுப் படை மற்றும் ஹூத்தி கிளர்ச்சியாளர்களில் 70 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவ ஆதரவு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் வடக்கில் அரசின் வசம் இருக்கும் முக்கிய பகுதியும் எண்ணெய் வளம் கொண்ட பிராந்தியத்தின் தலைநகருமான மாரிப்பை ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்ற முயல்கின்றனர்.

கிளர்ச்சியாளர்கள் ஒருங்கிணைந்து முன்னேற முயன்று வரும் நிலையில் 26 அரச ஆதரவுப் படையினர் மற்றும் 44 ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக இரு அரச தரப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். கிளர்ச்சியாளர்கள் தமது தரப்பு இழப்புகள் பற்றி மிக அரிதாகவே வெளிப்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முந்தைய 24 மணி நேரத்தில் 53 பேர் கொல்லப்பட்டதையும் இராணுவ ஆதரவு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

ஈரான் ஆதரவு ஹூத்திக்கள் 2014 பிற்பகுதியில் தலைநகரை கைப்பற்றியதை அடுத்தே யெமன் உள்நாட்டுப் போர் வெடித்தது.

இதனால் சவூதி அரேபிய ஆதரவு கொண்ட யெமன் அரசு தெற்கு நகரான அதேனை மையமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இந்நிலையில் மாரிப் நகரை அரச படை இழந்தால் அதற்கு பெரும் பின்னடைவாக அமையும்.

குறிப்பாக யெமன் போரினால் நாட்டின் பல பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் மாரிப் நகரில் அடைக்கலம் பெற்றிருக்கும் நிலையில் இங்கு இடம்பெறும் மோதல் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## பிரேசிலில் பிரமாண்டமான 'இயேசு' சிலை உருவாக்கம்



பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள புகழ்பெற்ற ரீடிமர் சிலையை காட்டிலும் உயரமான இயேசு கிறிஸ்து சிலை ஒன்று பிரேசிலில் உருவாக்கப்பட்டு வருகிறது.

பிரேசிலின் என்காண்டாடு நகரில் 140 அடியில் இந்த சிலை உருவாக்கப்படவுள்ளது. இது உலகின் மூன்றாவது உயரமான இயேசு கிறிஸ்து சிலையாக இருக்கும்.

இந்த சிலையின் நிர்மாணம் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் தலை மற்றும் விரிந்த கைகள் கடந்த வாரம் உருவாக்கப்பட்டது.

இந்த யோசனை அர்ரொல்டு கான் சாட்டி என்ற உள்ளூர் அரசியல்வாதி ஒருவரால் வழங்கப்பட்டது. அவர் கடந்த மார்ச் மாதம் கொவிட்–19 தொற்றால் உயிரிழந்தார்.

மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த சிலையின் நிர்மாணம் இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் நன்கொடை வழங்கி வருவதாகவும் இதனை நிர்மாணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. ஒரு கையிலிருந்து மற்றொரு கை வரை இந்த சிலை 36 மீற்றர் அகலம் கொண்டது. மேலும் மார்பு பகுதியில் பார்வையாளர்கள் காணும் பகுதி உருவாக்கப்படும். இது தரையிலிருந்து 40 மீற்றர் உயரம் கொண்டது.

இந்தோனேசியாவின் சுலவேசியில் உள்ள பண்ட்டு புராக்கே சிலை 52.55 மீற்றர் உயரம் கொண்டது. போலாந்தில் உள்ள `கிறிஸ்ட் த கிங்` சிலை 52.5 மீற்றர் உயரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற ரீடிமர் சிலையின் உயரம் 38 மீற்றர். இருப்பினும் உலகளவில் டஜன் கணக்கான உயரமான பல சிலைகள் உள்ளன. அதில் கன்னி மேரி மற்றும் புத்தர் சிலைகளும் அடக்கம்.

## அவுஸ்திரேலியாவில் பலத்த புயலால் வீடுகளுக்கு சேதம்



மேற்கு அவுஸ்திரேலியாவை தாக்கிய செரோஜா எனும் சக்தி வாய்ந்த புயலால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.

செரோஜா புயல் கரையைக் கடந்த போது, கல்பாரி, ஜெரால்டன் உள்ளிட்ட கடற்கரையோர ஊர்களில் மணிக்கு 170 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

கனமழைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல் பாதித்த பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு, மீட்பு நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, மேற்கு அவுஸ்திரேலியாவில் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

தென் கிழக்கு மாநிலங்களின் பல நகரங்களும் தொடர்ந்து சிவப்பு எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடத்தில் இருப்பதற்கு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். இந்த புயலால் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் பற்றி முழுமையான விபரங்களை பெறுவதற்கு காலம் எடுத்துக்கொள்ளும் என்று அவசர சேவை நிறுவனங்கள் நேற்றுக் காலை தெரிவித்தன.

கடந்த மாதம் ஆறுகள் மற்றும் அணைகள் நிரம்பி கடந்த தசாப்தங்களில் இல்லாத மோசமான வெள்ள நிலையால் கிழக்கு அவுஸ்திரேலியாவில் சுமார் 18,000 மக்கள் இடம்பெயர்ந்தனர்.

## தாய்வானுக்கு எதிரான சீனாவின் நடவடிக்கை: அமெரிக்கா அக்கறை



தாய்வானுக்கு எதிராக சீனா மேற்கொண்டுவரும் கடுமையான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா அக்கறை கொண்டிருப்பதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ட்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.

மேற்கு பசிபிக் வட்டாரத்தில், வன்முறையைப் பயன்படுத்தி, நிலைத்தன்மையைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் எவ்வித முயற்சியும் கடுமையானதாகக் கருதப்படும் என அவர் எச்சரித்தார்.

அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று தாய்வானுக்கு அருகே அண்மையில் சென்றதைத் தொடர்ந்து, பதற்றநிலை அதிகரிப்பதற்கு அமெரிக்காவே காரணம் என்று சீனா சாடியது.

அதைத் தொடர்ந்து, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இவ்வாறு கருத்துக் கூறினார்.

தாய்வான் தன்னைத் தற்காத்துக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருப்பதை உறுதிசெய்வதற்கான கடப்பாட்டை அமெரிக்கா கொண்டுள்ளதாக பிளிங்கன் கூறினார்.

அத்துடன், மேற்கு பசிபிக் வட்டாரத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் கட்டிக்காப்பதற்கு அமெரிக்கா கடப்பாடு கொண்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

"வலுக்கட்டாயமாக தற்போதுள்ள அந்தஸ்தை யாரேனும் மாற்ற முயற்சிப்பது மோசமான ஒரு தவறாக இருக்கும்" என்று பிளிங்கன் இதன் போது தெரிவித்தார்.

தாய்வானை பிரிந்து சென்ற ஒரு பகுதியாகக் கருதும் சீனா அதனை தனது ஆட்புலத்திற்குள் சேர்க்க இராணுவத்தை பயன்படுத்தும் வாய்ப்புப் பற்றியும் வலியுறுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடன் ஒத்துழைப்பு: நெதர்லாந்து பிரதமர் உறுதி



பிராந்திய மூலோபாயத்தில் இந்தியாவின் பங்கு தீர்க்கமாக அமையும் என்று தெரிவித்திருக்கும் நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட், இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவுடன் இணைந்து செயற்படும் விருப்பையும் வெளியிட்டார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நெதர்லாந்து பிரதமருக்கு இடையிலான மெய்நிகர் சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன் போதே நெதர்லாந்து பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்புப் பற்றி கூறிய இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர், சந்தீப் சகர்போட்டி, 'இந்தோ – பசிபிக் மீள் ஆற்றலுடைய விநியோகச் சங்கிலி மற்றும் சர்வதேச டிஜிட்டல் நிர்வாகம் போன்ற செயற்பாடு பற்றி இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்' என்று குறிப்பிட்டார்.

கடல்சார் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி, சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் கடல் போக்குவரத்துக்கான சுதந்திரம் தொடர்பில் பிராந்திய அமைப்புகளுடன் இணைந்து பணியாற்ற இரு தலைவர்களிடையே இணக்கம் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 9 ஆண்டுகளாக வீட்டில் இருந்த சடலம்: பொலிஸார் விசாரணை



நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் 9 ஆண்டுகளுக்குப் பின் ஓர் ஆடவரின் சடலம் அவருடைய வீட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பரில் அந்த ஆடவரது பராமரிப்பாளரால் அந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக அந்நாட்டு பொலிஸார் கூறினர்.

60 வயதுக்கு மேற்பட்ட அந்த ஆடவருக்கு, ஒரு முறைக்கு மேலாகத் திருமணமாகியுள்ளது என்றும் பிள்ளைகள் இருப்பதாகவும் 'தி கார்டியன்' பத்திரிகை தெரிவித்தது.

பராமரிப்புப் பணிக்காக வீட்டைத் திறந்து விடுமாறு அந்தப் பராமரிப்பாளர் காவல் அதிகாரிகளைக் கேட்டார். அப்போதுதான், அந்த ஆடவர் இறந்தது தெரியவந்தது.

அவர் 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இறந்ததாய் நம்புவதாகக் பொலிஸார் குறிப்பிட்டனர். வீட்டில் பிரிக்கப்படாமல் கிடந்த கடிதம், பால் பெட்டி ஆகியவற்றின் மூலம் அவ்வாறு ஊகிக்கப்படுகிறது. அவர் இயற்கையான காரணங்களால் மாண்டதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்ததாக தி கார்டியன் குறிப்பிட்டது.

அவர் அதிகம் பேசுபவர் கிடையாது என்பதால், அவர் வேறு இடத்திற்கு மாறிச் சென்றுவிட்டதாய் நினைத்ததாக அக்கம்பக்கத்தினர் கூறினர். அவருடைய மாதாந்திரக் கட்டணங்கள், அவருடைய வங்கிக் கணக்கிலிருந்து தொடர்ந்து தானாகவே செலுத்தப்பட்டு வந்தன.

ஒன்பது ஆண்டுகளாக ஒருவரை, யாருமே தேடாமல் இருந்தது எப்படி என்று பொலிஸார் வியப்புத் தெரிவித்தனர்.

30 ஆண்டுகளுக்கு முன் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று, பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் கருத்துக் கூறியுள்ளார். நேரடித் தொடர்பு இல்லாத மின்னிலக்கச் சேவைகளுக்கு, உலகம் கொடுக்கும் விலை இதுவென்று அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு புதிய தொழில்நுட்ப வசதியும், அந்த ஆடவரின் மரணத்தை வெளியுலகுக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 13 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



| தொழுகை நேரம் | |
|---|---|
| 12 முதல் 14 வரை | |
| சுபஹ் | 04.48 |
| லுஹர் | 12.13 |
| அஸர் | 03.17 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**
சார்வரி வருடம் பங்குனி 31
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: துவிதியை

# இந்த சூழலும் புத்தாண்டுடன் வசந்தகாலமாக மாறும்

## சபாநாயகர் மஹிந்த யாப்பா வாழ்த்து



உலகளாவிய பிரச்சினை மூலம் ஒற்றுமை மற்றும் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழ்வதன் பெறுமதி மனித குலத்துக்கு உணர்த்தப்பட்டுள்ளது என்பதே எமது கருத்தாகும். இந்த சூழலும் புத்தாண்டுடன் வசந்தகாலமாக மாறும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். புத்தாண்டு வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மலரவிருக்கும் புத்தாண்டு இலங்கையர்களின் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்த கலாசார பண்டிகையாகும். இது நாம் கலாசாரம் மிக்க மனிதர்கள் என்ற ரீதியில் பல்லாயிரம் வருடங்களாக நமக்கிடையில் பேணி வரும் பிணைப்பிற்கான சான்றாகும்.

ஒவ்வொரு புத்தாண்டிலும் போன்று இவ்வருடமும் ஒரே நாடாக ஒரே தருணத்தில் முன்னெடுக்கும் சடங்குகள் நமது ஒற்றுமைக்கு ஒரு சான்றாகும். இந்த சடங்குகளை நிறைவேற்றும் எம் அனைவரினதும் ஒரே பிரார்த்தனை நிலைபேறான சுபீட்சமாகும். இதனை வெறும் பிரார்த்தனையாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல் புத்தாண்டின் பின்னரும் நாம் அனைவரும் நாட்டுக்காக உழைக்க திடசங்கற்பம் பூண வேண்டும்.

06

# ஓகஸ்ட், டிசம்பர் பாடசாலை விடுமுறைகளில் மாற்றம்




ஏப்ரல் 19 ஆம் திகதியன்று பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதும் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் டிசம்பர் மாத பாடசாலை விடுமுறை காலங்களில் மாற்றங்கள் ஏற்படும் என கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த க.பொ.த. உயர் தர பரீட்சை மற்றும் 5 ஆம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பன எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால், ஓகஸ்ட் மாத பாடசாலை விடுமுறையை ஒக்டோபர் மாதத்தில் வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது.

மேலும், க.பொ.த. சாதாரணத் தர பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் நடத்த உத்தேசித்துள்ளதால், டிசம்பர் மாதத்துக்கான விடுமுறையை ஜனவரி மாதம் வழங்குவது குறித்து கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

ஆகவே, ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு க.பொ.த. உயர் தரம். 5 ஆம் தர புலமை பரீட்சை, க.பொ.த. சாதாரண தர பரீட்டைசகள் நடத்தப்படும் காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் உயர் மட்ட குழு கலந்தாலோசித்து வருகிறது.

5 ஆம் தர புலமை பரிசில் பரீட்சை ஒக்டோபர் 3 ஆம் திகதியன்றும், க.பொ.த உயர் தரப்பரீட்சை

06




# விவசாய அமைச்சை தனியார் கட்டடத்திலிருந்து அகற்ற இடையூறு

## கடந்த 5 வருடங்களில் 189 கோடி ரூபா குத்தகை

கடந்த நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் ராஜகிரியவில் அமைந்துள்ள தனியார் கட்டடமொன்றுக்கு கொண்டுசெல்லப்பட்ட விவசாய அமைச்சை மீண்டும் "கொவிஜன மந்திரய" வுக்கு கொண்டுவருவதற்கு கட்டடத்திற்கு சொந்தமான தனியார் நிறுவன முகாமைத்துவதால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஐந்து வருட காலமாக 189 கோடி ரூபா செலவு செய்து தனியார் கட்டடமொன்றில் இயங்கி வந்த விவசாய அமைச்சை "கொவிஜன மந்திர வுக்கு மீண்டும் மாற்றுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த பின்னர் முடிவு செய்திருந்தார். அதன்படி இலக்கம் 19/3393/217/001 என்னும் அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2020 ஜனவரி மாதம் 3ம் திகதி அனுமதி கிடைக்கப் பெற்றதுடன் அம்முடிவு அம்மாதத்திலே 30ம் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட்டது. ஆனால் அமைச்சுக்குச் சொந்தமாக அரசாங்க சொத்துக்களை அக்கட்டடத்திலிருந்து அகற்றும் பணிக்கு அந்நிறுவனத்தின் முகாமைத்துவம் இவ்வருட மார்ச் மாதம் 11ம் திகதியிலிருந்து தடை செய்துள்ளது.இதன் காரணமாக வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு முறைபாடு செய்ய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

'கொவிஜன மந்திரய' பாராளுமன்றத்தின் வேறு நடவடிக்கைகளுக்குத் தேவையெனக்கூறி கடந்த அரசு விவசாய அமைச்சை ராஜகிரியவில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் 2016.04.08ம் திகதி கொண்டு சென்றது.

அதற்காக ஐந்து வருட ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொள்ளப்பட்டது. மாதாந்த வாடகையாக மாத்திரம் 155 கோடி ரூபாவிற்கும் அண்மித்த தொகையை அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.

06



புத்தாண்டை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வொன்றில் பெண்கள் சிங்கள கலாச்சார முறைப்படி றபான் இசைப்பதை காணலாம். (படம்: சமன் ஸ்ரீ வெதகே)

# இரண்டாவது டோஸ் செலுத்த 2,30,000 தடுப்பூசிகள் கைவசம்

## செலுத்தும் திகதியை நிபுணத்துவ குழு தீர்மானிக்கும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இரண்டாம் கட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில் அதற்காக இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் எஸ்ட்ரா செனேகா கொவிசீல்ட் தடுப்பூசிகள் தற்போது கைவசம் உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். தடுப்பூசி வழங்கும் தினத்தை உறுதிப்படுத்துவதற்கான விசேட பேச்சுவார்த்தை ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க முதற்கட்ட தடுப்பூசி வழங்கியவர்களுக்கே இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கப்படும் என்றும் அவர்

06

# சக்தி தொலைக்காட்சி ஆளுமை நிகழ்ச்சியில் கலாபூஷணம் நாகூர் கனி



எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சக்தி தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் ஆளுமை நிகழ்ச்சியில் பிரபல எழுத்தாளரும் சிறுகதை ஆசிரியரும் கவிஞரும் வகவ சிரேஷ்ட ஸ்தாபகருமான சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி கலந்து கொள்கிறார்.

## 13 Kg ஐஸ் போதைபொருளுடன்

# ஜாஎல பகுதியில் அறுவர் நேற்று கைது



ஜாஎல, நிவந்தம பிரதேசத்தில் 13 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளால் நேற்று (12) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

ஹெரோயின் தொடர்பில் சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஐஸ் போன்ற போதைப்பொருட்களை இந்நாட்டிற்கு கொண்டு வருவது அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பண்டிகை காலத்திலும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# அலுவலக ரயில் சேவைகள் இன்றும் நாளையும் ரத்து

## புதுவருட விசேட சேவைகள் தொடரும் - அமைச்சர் திலும் அமுனுகம

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அலுவலக ரயில்சேவை உட்பட 30 ரயில் சேவைகளை இன்றும் நாளையும் ரத்துச் செய்வதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எவ்வாறெனினும் புதுவருட பண்டிகை தினங்களில் தமது ஊர்களுக்கு பயணிப்பவர்கள் மற்றும் ஊர்களிலிருந்து கொழும்புக்கு திரும்பவிருக்கும் பயணிகளை கவனத்திற் கொண்டு வழமைபோன்று விசேட ரயில் சேவைகளை நடத்த உள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும்அமுனுகம தெரிவித்துள்ளார்.



தமிழ், சிங்கள புது வருடத்தையொட்டி விசேட ரயில் சேவைகளை நடத்துவது மற்றும் குறைந்தளவு பயணிகளே ரயில்களில் பயணம் செய்கின்றமை காரணமாக மேற்படி ரயில் சேவைகளை இரத்து செய்ததாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் சில ரயில் சேவைகள் 15ம் திகதி முதல் 17ஆம் திகதி வரை சேவையில் ஈடுபடாது என்றும் ரயில்வே திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க கொழும்பு கோட்டையில் இருந்து வெயாங்கொட வரையிலான ரயில், மீரிகமையிலிருந்து கொழும்பு கோட்டை வரைக்குமான ரயில், கொழும்பு கோட்டையிலிருந்து ரம்புக்கன வரைக்குமான

06

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள், குற்றவாளிகள்;

# எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன் கண்டறியப்படுதல் வேண்டும்

## ஒரு சிலரின் பெயர்களை அறிவித்து பயனில்லை



எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள், குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கைக்காக, ஒரு சிலரின் பெயர்களைப் பிரதான குற்றவாளிகள் என்று அரசு அறிவிக்கக் கூடாது "என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று நௌபர் மௌலவியின் பெயரை அரசு அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 31ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 30

## குறள் தரும் சிந்தனை



தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதனால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதை விடத் தோன்றாமலிருப்பதே நல்லது.

## இன உறவை மீளக்கட்டியெழுப்ப புத்தாண்டு வழிகோலட்டும்!

தமிழ், சிங்கள புத்தாண்டான பிலவ வருடம் நாளை(இன்று பின்னிரவு) பிறக்கின்றது. கடந்த காலத்தில் சந்தித்த அத்தனை துன்பங்களும் இனிவரும் காலத்தில் நீங்க வேண்டுமென்ற நம்பிக்கை எதிர்பார்ப்புடன் மக்கள் புத்தாண்டை எதிர்கொள்கின்றனர்.

பல்லின சமூகங்கள் வாழ்கின்றதொரு நாடு இலங்கை ஆகும். ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்த மக்களுக்கென்றும் தனித்தனியான பண்டிகைகள் உள்ளன. ஆனாலும் இலங்கையின் இரு பிரதான சுதேச இனங்களான தமிழர்கள் மற்றும் சிங்கள மக்களுக்கான பொதுப் பண்டிகை சித்திரைப் புத்தாண்டு ஆகும்.

இவ்வாறு வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களுக்கான பொதுப் பண்டிகையானது உலகில் வேறெங்குமே கிடையாது. இலங்கையில் மாத்திரமே அவ்வாறானதொரு சிறப்பான பொதுப் பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டு விளங்குகின்றது. எனவேதான் இப்புத்தாண்டு தனித்துவமான நல்லுறவுப் பண்டிகையாகக் கருதப்படுகின்றது.

இந்து, பௌத்த மதங்களின் பூர்வீகம் இந்தியா ஆகும். இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களும், சிங்கள மக்களும் சமய மற்றும் கலாசார விடயங்களைப் பொறுத்த வரையில் அயல்நாடான இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இந்நிலையில் இந்தியாவிலும் சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படுவது வழமை. ஆனாலும் இலங்கையைப் போன்று சித்திரைப் புத்தாண்டு இந்தியாவில் சிறப்பானதொரு பண்டிகையல்ல.

சித்திரைப் புத்தாண்டின் சிறப்பான கொண்டாட்டம் இலங்கைக்கு மாத்திரமே உரியதாகும். எனவேதான் இலங்கையின் தமிழ், சிங்கள மக்களுக்கே உரித்தான சிறப்பான, தனித்துவ பண்டிகையாக சித்திரைப் புதுவருடம் விளங்குகின்றது. இலங்கையில் முன்னைய காலத்தில் தமிழ், சிங்கள இனங்கள் ஐக்கியமாக வாழ்ந்ததற்கான அடையாளமாக சித்திரைப் புத்தாண்டை வரலாற்று அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பௌத்த, இந்து மதங்களுக்கிடையிலான தொடர்பு பண்டைய காலம் தொட்டு மிகவும் நெருக்கமானதாகும். இந்தியாவில் கி.மு காலப் பகுதியில் இருந்து இந்து மதம் வியாபித்திருந்த போதிலும், மௌரிய வம்சத்து மன்னரான அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் பௌத்த மதம் ஆசியா எங்கும் பரவியது. ஆனாலும் இந்து பௌத்த மதங்களுக்கிடையே நெருக்கமும் அந்நியோன்யமும் குறைவின்றி தொன்று தொட்டு நிலவி வந்துள்ளன.

பண்டைய காலத்தில் இலங்கையில் பௌத்த_ இந்து மதங்களுக்கிடையே நல்லுறவு வலுப்பெற்று இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறான காலப் பகுதியிலேயே சித்திரைப் புத்தாண்டை இவ்விரு இனங்களும் தங்களது பொதுப் பண்டிகையாக வரித்துக் கொண்டதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. எனவேதான் 'இனங்களின் ஐக்கியப் பண்டிகை' என்று இதனைக் கூறுகின்றனர்.

அன்றொரு காலத்தில் இவ்விரு இனங்களுமே மிகவும் நல்லுறவுடன் வாழ்ந்து வந்துள்ளன. அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக தாய்நாட்டைக் காக்கும் போராட்டங்களிலும் இரு இனங்களைச் சேர்ந்த மன்னர்களும் தங்களை அர்ப்பணித்துள்ளனர். ஆனால் நாடு சுதந்திரமடைந்த பின்னர் உள்நாட்டு அரசியல் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியதும், இரு இனங்களிடையேயும் நல்லுறவுகளில் பாதிப்பு ஏற்படத் தொடங்கியது.

இருந்த போதிலும், மதரீதியில் இரு இனங்களிடையேயான நெருக்கம் இன்னும் தொடர்ந்தபடியே வருகின்றது. இந்து மக்கள் பௌத்த விகாரைகளுக்குச் சென்று வழிபாடு நடத்துவதும், பௌத்த மக்கள் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதும் இன்றும் நாம் காணக் கூடிய நிகழ்வுகள் ஆகும். அதேசமயம் தமிழ் சிங்கள மக்களிடையே தொன்றுதொட்டு தொடர்ந்து வருகின்ற ஒரேவிதமான கலாசாரத் தொடர்புகளையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இதுஇவ்விதமிருக்க, உலகெங்கும் பரவிய கொரோனா பெருந்தொற்று காரணமாக இலங்கை மக்கள் கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக பண்டிகைகளை சிறப்பாகக் கொண்டாடவில்லை. சித்திரைப் புத்தாண்டும் அவ்வாறுதான் கடந்த வருடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவில்லை. மக்கள் தத்தமது வீடுகளில் முடங்கியிருந்தபடியே சித்திரைப் புத்தாண்டை அமைதியான முறையில் கொண்டாடினர்.

இவ்வருடமும் அவ்வாறுதான் நிலைமை உள்ளது. கொவிட்19 தொற்று பரவல் இலங்கையில் தற்போது பெருமளவில் தணிந்துள்ளது. ஆனாலும் கொவிட் தொற்று நாட்டிலிருந்து முற்றாக நீங்கவில்லை. நாளாந்தம் புதிதாக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டே வருகின்றனர். தினமும் ஓரிரு உயிரிழப்புகளும் பதிவாகின்றன. ஆகவே கொவிட் அச்சுறுத்தல் இன்னும் நீங்கி விடவில்லையென்பதே உண்மை.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல் காரமாக கொவிட் தொற்று பரவலில் தணிவு நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதற்காக நாம் அலட்சியமாக இருந்து விட முடியாது. இது புத்தாண்டுக் காலம் என்பதற்காக கொரோனா சுகாதார வழிகாட்டல்களை உதாசீனம் செய்தபடி எவரும் செயற்படலாகாது.

ஒவ்வொருவரும் தத்தமது வீட்டில் இருந்தபடி அமைதியாக சித்திரைப் புத்தாண்டை கொண்டாடுவதே சிறப்பாகும். பிறக்கவிருக்கும் தமிழ் சிங்களப் புத்தாண்டானது இரு இனங்களுக்கிடையேயும் புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் மீளக்கட்டியெழுப்புவதற்கு வழிவகுக்க வேண்டுமென்று நம்பிக்கை கொள்வோம்.

editor.tkn@lakehouse.lk

# கொடுந்தொற்று நீங்கி புத்தாண்டில் உலகெங்கும் நிம்மதி பிறக்கட்டும்!

உலகில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் சூரிய பகவான். நவக்கிரக நாயகர்களுள் முதல்வராகப் போற்றித் துதிக்கப்படும் இவர், உலகின் சகல இயக்கத்திற்கும் காரணமாக இருக்கிறார்.

சித்திரைப் புதுவருடம் ஆங்கில புத்தாண்டைப் போல குறிப்பிட்ட ஒரு நேரத்திற்கு பிறப்பதில்லை. சூரிய பகவானின் இராசி மண்டல சஞ்சாரத்திற்கு அமையவே புதுவருடம் உதயமாகிறது. அதாவது, பன்னிரு இராசிகளுள் முதலாவதான மேடம் இராசிக்குள் சூரியன் பிரவேசம் செய்யும் போது, பன்னிரு மாதங்களுள் முதலாவதான சித்திரை மாதம் பிறக்கிறது.

பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரக சஞ்சார நேரங்களுக்கு அமைய, சூரிய பகவானின் மேடம் இராசிப் பிரவேசமே சித்திரை மாதப் பிறப்பாகவும், தமிழ்ப் புதுவருடப் பிறப்பாகவும், மேடம் இராசிப் பிரவேச நேரமே புதுவருடப் பிறப்பு நேரமாகவும் அமைகிறது.

இலங்கையில் சித்திரைப் புதுவருடம் தமிழ் சிங்கள மக்களுக்கு உரிய பண்டிகையாக முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது, இந்து மதத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும், பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்கள மக்களும் சித்திரைப் புதுவருடத்தை கொண்டாடுவது வழக்கம். எனவே இதனை தமிழ் சிங்கள புதுவருடம் என்று சிறப்பித்து சொல்லப்படுவதுடன் ஒரு தேசியப் பெருவிழாவாகவும் அமைந்துள்ளது.

மக்கள் புதிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும், நம்பிக்கைகளை செயற்படுத்துவதற்கும் சித்திரைப் புதுவருடத்தின் வரவைக் காத்திருப்பது வழக்கம். மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்த பின், பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறத்திலான ஆடைகளையும், ஆபரணங்களையும் அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்வதுடன் புதுவருடக் கருமங்கள் ஆரம்பமாகின்றன.

சுபதினம், சுபநேரம் என்பன புதுவருடக் கருமங்களின் போது முக்கிய இடத்தை வகிக்கின்றன. கைவிசேடம் வழங்குதல், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டு விருந்துபசாரங்களில் கலந்து கொள்ளுதல், குரு மற்றும் பெரியோர்களை தரிசனம் செய்து ஆசி பெற்றுக் கொள்ளுதல், தானதருமங்கள் செய்தல் போன்ற பாரம்பரிய நடைமுறைகளுடன் சித்திரைப் புத்தாண்டு இணைந்துள்ளதை சிறப்பாகச் சொல்லலாம்.

இம்முறை உதயமாகும் சித்திரைப் புதுவருடத்தின் பெயர் 'பிலவ' என்பதாகும். அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் இது 35 ஆவது வருடமாகும். வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பின்னிரவு 1 மணி 39 நிமிடத்தில் பூர்வபட்ச துதியை திதியில், பரணி நட்சத்திரம் 2ஆம் பாதத்தில், மேட இராசியில், மகர லக்னத்தில் புதுவருடம் பிறக்கிறது. அதேதினம் இரவு மணி 9.39 முதல் பின்னிரவு மணி 5.39 வரை விஷூ புண்ணிய காலமாகும்.



இந்த புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் விளா இலையையும் காலில் கடம்பம் இலையையும் வைத்து மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இதன் பின்னர் நீலம், சிவப்பு நிறமுள்ள பட்டாடை அல்லது நீலம், சிவப்பு கரையமைந்த புதிய பட்டாடையையும், நீலம் பவளம் பதித்த ஆபரணத்தையும் அணிந்து கொண்டு ஆலயம் சென்று இறைவழிபாடு செய்ய வேண்டும் என்று வாக்கிய பஞ்சாங்கம் சொல்கிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பின்னிரவு 2 மணி 31 நிமிடத்தில் பூர்வபட்ச துதியை திதியில், பரணி நட்சத்திரம் 2ஆம் பாதத்தில், மேட இராசியில் மகர லக்னத்தில் புதுவருடம் சிறப்பிக்கிறது. அதேதினம் இரவு மணி 10.31 முதல் மறுநாள் காலை மணி 6.31 வரை மேட சங்கிரமண அல்லது விஷூ புண்ணிய காலமாகும்.

இந்த புண்ணியகாலத்தில் தலையில் கடம்பம் இலையையும், காலில் வேப்பம் இலையையும் வைத்து மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். இதன் பின்னர் செந்நிறப்பட்டு அல்லது சிவப்பு கரை வைத்த வெள்ளை புது வஸ்திரத்தையும், பவளம் பதித்த ஆபரணத்தையும் அணிந்து கொண்டு ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாடு செய்ய வேண்டும் என திருக்கணித பஞ்சாங்கம் சொல்கிறது.

புதுவருடம் பிறந்தால் கைவிசேடம் பரிமாறிக் கொள்வது பாரம்பரிய வழக்கமாகும். குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்து அல்லது மூத்தோர்களிடமிருந்தும், நிறுவனங்களில் பணிபுரிவோர் தங்களது வேலை கொள்வோரிடமிருந்தும் கைவிசேடம் பெற்றுக் கொள்வார்கள்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி புதன்கிழமை காலை மணி 9.09 முதல் 9.52 வரையும், அதேதினம் பிற்பகல் மணி 2.22 முதல் 4.11 வரையும், 17ஆம் திகதி சனிக்கிழமை காலை மணி 7.49 முதல் 9.00 மணிவரையும், அதேதினம் பிற்பகல் மணி 3.04 முதல் 3.59 வரையும் கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி புதன்கிழமை காலை மணி 6.15 முதல் 7.30 வரையும் அதேதினம் மாலை மணி 6.15 முதல் 7.00 மணிவரையும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை மணி 10.30 முதல் 11.40 வரையும் கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும்.

உதயமாகும் சித்திரைப் புதுவருடத்தில் தங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று விருந்துபசாரங்களில் கலந்து கொள்வதற்குரிய சுபநேரங்களாக வாக்கிய பஞ்சாங்கத்தில் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை மணி 7.49 முதல் 9.00 மணி வரையும், அதேதினம் மாலை மணி 3.04 முதல் 3.59 வரையும், திருக்கணித பஞ்சாங்கத்தில் 14ஆம் திகதி புதன்கிழமை காலை மணி 6.15 முதல் 7.30 வரையும், அதேதினம் பகல் 10.00 மணி முதல் 11.45 வரையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தைப்பொங்கல் திருநாளைப் போலவே சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைக்கும் நிகழ்வும் சித்திரைப் புதுவருடத்திலன்று இடம்பெறுவது வழக்கம். இம்முறை 13ஆம் திகதி பின்னிரவு புதுவருடம் பிறப்பதால், மறுநாள் 14ஆம் திகதி புதன்கிழமை காலை சூரிய உதயத்தின் பின்னரே பெரும்பாலானவர்கள் பொங்கல் நிகழ்வுடன் புதுவருடக் கருமங்களை ஆரம்பிப்பார்கள்.

தேகநலன்பாதிக்கப்பட்டவர்கள் புதன்கிழமை காலையில் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்வது பொருத்தமானது என சைவ அறிஞர்களால் சொல்லப்பட்டுள்ளது.

வசந்தகாலம் எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் இளவேனில் சித்திரைப் புதுவருடத்திலிருந்தே ஆரம்பமாகிறது. குறிப்பாக சித்திரை, வைகாசி மாதங்கள் வசந்தத்தின் உன்னத காலப்பகுதியாக அமைந்துள்ளன.

- புத்தாண்டு உதயமாகும் நேரம்...
- மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்யும் புண்ணிய காலம்....
- கைவிசேடம் பெறவும், உறவினர் வீடு தரிசிக்கவும் உகந்த சுபநேரம்...

தற்போது உலகளாவிய ரீதியில் நிலவி வரும் கொரோனா கிருமித் தொற்றுப் பரவலின் தாக்கம் மலரும் புத்தாண்டில் முற்றாகவே மறைந்து, மக்கள் அனைவரும் நோயின்றி சுகநலத்துடனும், நிம்மதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழும் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!



அ. கனகசூரியர்

# இலட்சியத்துடன் செயற்பட்டால் நிச்சயம் இலக்கை அடையலாம்

## களுத்துறையின் இளம் விமானி சாஹித் அம்ஜத்

'இலட்சியம் குறித்து விடாமுயற்சியோடு செயற்படுவோமேயானால் நிச்சயம் அதனை அடைந்து கொள்ள முடியும்' என்று கூறுகின்றார் களுத்துறை மாவட்டத்தில் விமானமோட்டியாக உருவாகியுள்ள சாஹித் அம்ஜத்.

பொறியியலாளரும், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான அம்ஜத்தின் புதல்வரான சாஹித் தினகரனுடன் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

**கேள்வி: விமானியாக வேண்டும் என்ற ஆசை உருவாகக் காரணம் என்ன?**

**பதில்:** நான் சிறு வயதில் எனது பெற்றோருடன் ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா பயணமான போது அதே விமானத்தில் வைத்து நானும் விமானம் ஓட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அன்று முதல் அதே இலட்சியக் கனவோடு இருந்தேன். இரத்மலானையில் உள்ள கொஸ்மொஸ் விமானமோட்டிப் பயிற்சிப் பாடசாலையில் இணைந்தேன். 2013 2014 வரையான ஒரு வருட பயிற்சிப் பாடநெறியை அங்கு பூர்த்தி செய்தேன். அதனைத் தொடர்ந்து வாணிபத் துறை விமானமோட்டி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பயிற்சி நெறியைத் தொடர்வதற்காக கனடா



பயணமானேன். அங்குள்ள பியம்ப்டன் விமான 2014 2016 வரை, இரண்டு வருடங்கள் பயிற்சி பெற்று உரிய சான்றிதழைப் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி: இப்பயிற்சியைத் தொடர்ந்து அங்கு விமானமோட்டிப் பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றினீர்கள் அல்லவா?**

**பதில்:** கனடாவில் உள்ள மொன்க் டொன் கல்லூரியில் விமானமோட்டும் பயிற்சியாளர்களுக்கான ஆலோசனை வழங்குநராக 2017 18 பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

**கேள்வி: தொழில் ரீதியாக விமானமோட்டுவதற்கான வாய்ப்பு எப்போது கிடைத்தது?**

**பதில்:** 2018 ஏப்ரல் மாதம் கனடாவிலுள்ள இவாஸ் எயார் உள்ளூர் விமான நிலையங்களில் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கான முதலாவது ஒபீசர் விமானமோட்டியாக பணியை ஆரம்பித்தேன். தொடர்ந்து கனடா கிழக்கு அட்லாண்டிக் பிரதேசத்தின் உள்ளூர் பயணிகள், பொருட்கள் ஏற்றிச் செல்லும் விமானமோட்டியாக சுமார் ஒன்றரை வருடங்கள் பணியாற்றினேன். அக்கால பிரிவிலேயே முதலாவது ஒபீசர் விமானமோட்டியாகவிருந்த எனக்கு அதே நிறுவனத்தில் கப்டனாக பதவி உயர்வு கிடைத்தது. 2020 இல் புதிய விமான நிறுவனமான ஸ்வூப் நிறுவனத்தில் பாரிய விமானமான போயிங் 737 விமானத்தில் முதலாவது ஒபீஸராகும் வாய்ப்புக் கிடைத்தது. 189 பயணிகளோடு பொருட்களும் சுமந்து செல்லும் விமானம் இதுவாகும்.

**கேள்வி: கனடா உள்ளூர் விமான நிலையங்களில் மாத்திரமா பணியாற்றியுள்ளீர்கள்?**

**பதில்:** இல்லை போயிங் 737 விமானம், வெளிநாடுகளுக்கும் குறிப்பாக அமெரிக்கா, கியூபா, மெக்சிகோ, ஜமைக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்கும் விமானமோட்டியாக பணியாற்றியுள்ளேன்.

**கேள்வி: இப்போது விடுமுறையில் இலங்கை வந்துள்ளீர்கள்?**

**பதில்:** விடுமுறை என்றால் கொரோனா காரணமாக எமது நிறுவனத்தில் விமானப் பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் எமக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. நிலைமை சீரானதும், பணியை ஆரம்பிப்பார்கள். அப்போது போக வேண்டும்.

**கேள்வி: உங்கள் இப்பணியின் போது குறிப்பிடத்தக்க சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றுள்ளனவா?**

**பதில்:** நான் கப்டனாக இருந்து உள்ளூர் விமான நிலையம் ஒன்றுக்கு பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்தேன். அப்போது சுமார் 74 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தது.

அச்சந்தர்ப்பத்தில் விமானத்தின் வலது பக்க எண்ணெய்த் தாங்கியில் சிறு கசிவு ஏற்பட்டு உள்ளதாக எனது சக உதவியாளர் சுட்டிக்காட்டினார். உடனே நான் எமது கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டேன். உடனே அருகேயுள்ள விமான நிலையத்தில் தரையிறக்கும்படி கட்டளை கிடைத்தது. நான் அவ்வாறு செயற்பட்டேன். விமானம் ஆபத்திலிருந்து மீண்டது. நாம் தரையிறங்கும் போது அந்த விமான நிலையத்தில் தீயணைப்பு,



முதலுதவி என்று அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருந்ததையும் எம்மால் அவதானிக்க முடிந்தது.

**கேள்வி: உங்கள் தொழில் விடயமாக நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில்:** இளம் மாணவர்கள் படிக்கும் பருவத்திலேயே இத்தகைய உயர் ரக தொழிற்துறைகளில் நாட்டம் வைக்க வேண்டும். பின்னர் அதற்காக முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அனைத்தையும் சமாளித்து செயற்பட்டால் இலட்சியத்தில் வெற்றிக் கொடியை நிலைநாட்டலாம்.

பேருவளை
பீ.எம். முத்தார்...

# நாட்டுக்கும் மக்களுக்கும் எதிர்கால சுபிட்சம் வேண்டி பிரார்த்திப்போம்!

சித்திரைப் புத்தாண்டை தமிழ்ப் புத்தாண்டு என்பர். தமிழர்கள் புதிய ஆண்டு பிறப்பதைக் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும், பிற நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளை புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப் பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 செக்கன்கள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும்.


சூரிய மேஷ இராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

ஆங்கில நாட்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 அல்லது 15 நாட்களில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாட்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதே.

## பிலவ வருடம் செழிப்பை வாரி வழங்கட்டும்!

நடைமுறைக்கு ஏற்றதாக தமிழ்ப் புத்தாண்டு ஒரு குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்பட்டாலும், தமிழ்ப் பஞ்சாங்கங்களில் அந்த நாளில் ஆண்டு பிறக்கும் சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே ஆண்டுக் காலம் கணிக்கப்படுகிறது.

இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சித்திரையை ஒன்றாக புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். தம்பதெனியா இராச்சிய மன்னன் மூன்றாம் பராக்கிரமபாகுவின் அரச குருவான தேனுவரைப்பெருமாள் எழுதிய 'சரசோதி மாலை' எனும் நூலில் வருடப் பிறப்பின் போது செய்ய வேண்டிய சடங்குகள் விபரிக்கப்பட்டுள்ளன. எனவே இலங்கைக்கு சித்திரைப் புத்தாண்டு விசேட





பண்டிகை என்பது புரிகின்றது. மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கலப் பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டறையில் வைத்து, அதை புத்தாண்டு அதிகாலையில் காண்பது புனிதமாகக் கருதப்படுகின்றது. புத்தாண்டன்று அதிகாலையில் மக்கள் நீராடி கோலமிட்டு, புத்தாடை அணிந்து, கோயிலுக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் நிகழும்.

புண்ணிய காலத்தில், ஆலயத்தில் வழங்கப்படும் மருத்து நீரை இளையவர்களின் தலையில் மூத்தோர் வைத்து ஆசீர்வதிப்பர். அதன் பின்னர் நீராடி அவர்களிடம் ஆசி பெற்று, குறித்த சுபவேளைகளில் கைவிசேடம் பெறுவர். மூத்தவர்களால் இளையவர்களுக்கு, புத்தாண்டு அன்பளிப்பாக வழங்கப்படும் பணமே கைவிசேடம் எனப்படுகிறது.

பிலவ ஆண்டான தமிழ்ப் புத்தாண்டு, மேஷ லக்னம் மேஷ ராசி பரணி நட்சத்திரத்தில் பிறக்கிறது. பரணி சுக்கிரன் நட்சத்திரம் என்பதால் பெண்களுக்கு உற்சாகத்தையும் மனநிறைவும் தரும்படியான ஆண்டாக பிலவ ஆண்டு இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். திருமணம் ஆன தம்பதியருக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று புதுவருட பலன்கள் கூறுகின்றன.

புதிய ஆண்டில் மிக அதிகம் பேருக்கு திருமணங்கள் நடைபெறும். பரணி நட்சத்திரத்தில் புத்தாண்டு பிறப்பதால் மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும்படியான வருமானம் சிறப்பாகவே இருக்கும். ஹோட்டல், உணவுத் தொழில் அதிகரிக்கும். விவசாயம் செழிப்பாக இருக்கும், பங்கு வர்த்தகம் சிறப்பாக இருக்கும்.மந்த நிலையில் இருந்த கட்டுமானத் தொழில் அசுர வேகத்தில் வளர்ச்சியடையும். வாகனம் தொடர்பான தொழில் சிறப்பாகவே இருக்கும்.

சுயதொழில் செய்து கொண்டிருப்பவர்கள், உற்பத்தி தொடர்பான தொழில் செய்து கொண்டிருப்பவர்கள் அனைவருக்கும் மன நிறைவைத் தரக் கூடிய வகையில் தொழில் வளர்ச்சி இந்த வருடத்தில் ஏற்படும். இலாபமும் கிடைக்கும் என்று புத்தாண்டு பலன் குறித்து சோதிடர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இசை நாட்டியக் கலைஞர்களுக்கு நல்ல வளர்ச்சியும், அங்கீகாரமும், மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். சார்வரி வருடத்தில் திரைத்துறை பாதிக்கப்பட்டது. இந்த பிலவ ஆண்டில் திரைத்துறைக் கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தாலும் ஓரளவுக்கு மட்டுமே வளர்ச்சியை அடைய முடியும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் மிதமான வளர்ச்சி இருக்கும். சார்வரி வருடத்தில் மாணவர்களுக்கு கல்வி வாசனை இல்லாமல் போய் விட்டது. ஒன்லைன் கல்விதான் ஆசானாக இருந்தது. ஏராளமான மாணவர்கள் வாசிக்கும் பழக்கத்தை மறந்து விட்டனர். எனவே இந்த பிலவ ஆண்டில் பல மாணவர்களுக்கு ஞாபக மறதி, கவனமின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படும். கல்வியில் தேறுதல் குறையவும் வாய்ப்பு உண்டு. கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலை கூட சிலருக்கு ஏற்படும், மாணவர்கள் கல்வியில் மிக அதிக அளவில் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பது முக்கியம். இவ்வாறு புத்தாண்டு பலனில் கூறப்பட்டுள்ளது.

அவை ஒருபுறமிருக்க, இனங்களுக்கு இடையிலான உறவும் அமைதியும்தான் நாட்டில் அவசியம். நாட்டுக்கும் மக்களுக்கும் சுபிட்சம் கிடைக்க பிலவ வருடம் வழிவகுக்க வேண்டுமென ஒவ்வொருவரும் பிரார்த்திப்போம்.

# 86வது பிறந்த தினம் கொண்டாடிய இயக்குநர் எஸ்.பி.முத்துராமன்

தமிழ்நாடு காரைக்குடியில் ராமசுப்பையா,விஷாலாட்சி தம்பதியருக்கு மகனாக 1935 .04.07 அன்று பிறந்தார் எஸ்.பி. முத்துராமன். இவரின் தம்பி சுப.வீரபாண்டியன் தி.மு.கவின் தீவிர விசுவாசி. கலைஞர் கருணாநிதி மீது மிகவும் பேரபிமானம் கொண்டவர்.சிறந்த இலக்கியப் பேச்சாளர். இவர் தந்தை ராமசுப்பையா தமிழக அரசின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். இவரின் மனைவி பெயர் கமலா. இரண்டு பிள்ளைகள்.

எஸ்.பி.முத்துராமன் ஏ.வி.எம் பட நிறுவனத்தின் செல்லப்பிள்ளை. 1960 இல் கமலஹாசன் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான 'களத்தூர் கண்ணம்மா' படத்தில் துணை இயக்குனராக அறிமுகமானார். 1972 இல் 'கனிமுத்து பாப்பா' என்ற படத்துடன் 1995 'தொட்டில் குழந்தை' படம் வரை 72 படங்களை இயக்கிய பெருமைக்குரியவர் எஸ்.பி.எம்.

சிவாஜி கணேசன், ரஜினி,கமல், முத்துராமன்,ஜெய்சங்கர், சிவகுமார் போன்ற பல முன்னணி நடிகர்களின் வெற்றிப் படங்களை இயக்கியவர் இவர். ரஜினியின் 'புவனா ஒரு கேள்விக்குறி' படத்தில் இவர் புதுமை



செய்தார். அதுவரையில் கதாநாயகனாக நடித்த சிவகுமாரை வில்லனாகவும், வில்லனாக நடித்த ரஜினியை கதாநாயகனாகவும் நடிக்க வைத்து விஷப்பரீட்சை செய்து அமோக வெற்றி கண்டார்.

ரஜினியின் குணச்சித்திர நடிப்பிற்கு தீனி போட்டது 'புவனா ஒரு கேள்விக்குறி', ஆறிலிருந்து அறுபது வரை. இப்படம் ரஜினியின் திரையுலக வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்திய இமாலய வெற்றிப்படம். குறித்த காலத்திற்கு முன்னே படங்களை சிக்கனமாக இயக்கி, குறித்த தினத்தில் படத்தை வெளியிடுவதில் மகா நேர்த்தியானவர். தயாரிப்பாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற பண்பான இயக்குநர் எஸ்.பி முத்துராமன். பல விருதுகளையும் பெற்றவர் எஸ்.பி.எம். 1977 இல் "ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது",1978 ல் 'புவனா ஒரு கேள்விக்குறி' ,1979 இல் 'ஆறிலிருந்து அறுபது வரை' படங்களின் சிறந்த இயக்குனருக்கான பிஃலிம்பேர் விருதுகள், தமிழ் மாநில அரசு விருதுகள் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது என பல விருதுகளை அடைந்தவர் எஸ்.பி.முத்துராமன்.

அவர் பல தெலுங்குப் படங்களையும் இயக்கியுள்ளார். எம்.ஜி.ஆர் ஏ.வி.எம் நிறுவனத்திற்காக நடித்த ஒரே படமாகிய 'அன்பே வா'வில் இயக்குநர் ஏ.சி.திருலோகச்சந்தருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் எஸ்.பி.எம்.

எல்லாக் கலை விழாக்களிலும் ஏற்றத் தாழ்வு காணாது கலந்து கொண்டு கலைஞர்களை வாழ்த்தி மகிழ்வதில் இவருக்கு நிகர் இவரே. புது நடிகர்,பழம்பெரும் நடிகர் என பேதம் பாராது அனைவரிடமும் இன்முகத்துடன் சகஜமாக பணியாற்றக் கூடியவர். இப்பண்பட்ட மனிதருக்கான தனிச்சிறப்பு திரையுலகில் இன்றுவரை தக்க வைக்கப்பட்டுள்ளமை ஓர் உயரிய மதிப்பு கொண்ட கீர்த்தியே.

2006 இல் கலைஞர் கருணாநிதி தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த ஓர் அரசு விழாவில் எஸ்.பி.முத்துராமனை சந்தித்து நீண்ட நேரம் உரையாடியதை இப்பதிவில் நினைவு கூருகின்றேன். இதுவரை தான் இயக்கிய படங்களில் பிடித்த படம் சிவாஜி கணேசன் நடித்த 'கவரிமான்' படமே என்கிறார் எஸ்.பி.எம். அன்று கலைவாணர் அரங்கில் அன்னாருடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படம்தான் இங்கு காணப்படுவது.

ஒரு வாரத்துக்கு முன்னர் பிறந்த நாள் கொண்டாடிய எஸ்.பி.முத்துராமனுக்கு இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்.

**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# வருமானம் ஈட்டித் தருகின்ற சம்மாந்துறை பஸ் டிப்போவை அகற்றுவது முறையல்ல

கடந்த 22 வருடங்களாக இயங்கி வந்த வருமானம் ஈட்டும் சம்மாந்துறை பஸ் சாலையை அகற்றுவது முறையற்ற நடவடிக்கையாகும் என்கிறார் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்.


சம்மாந்துறையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் டிப்போவை அகற்றுவதை எதிர்த்து சம்மாந்துறை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் இப்போராட்டத்தில் பங்கு கொண்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், தற்போதய சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான ஐ.எல்.எம்.மாஹிர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

**கேள்வி: சம்மாந்துறையில் அமைந்துள்ள இலங்கை இ.போ.ச பஸ் சாலை விவகாரத்தை விளக்க முடியுமா?**

**பதில்:** ஏ.எச்.எம்.பௌசி போக்குவரத்து அமைச்சராக இருந்த போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம்.முகைதீன் 1998ஆம் ஆண்டு சம்மாந்துறை பஸ் சாலையை அமைத்தார். அன்று மூன்று பஸ்களுடனும் பத்து ஊழியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இருந்த பயங்கரவாத சூழ்நிலையில் இந்த பஸ் சாலையை ஊருக்குள் வைத்திருப்பது பாதுகாப்பு எனக் கருதியே ஆரம்பிக்கப்பட்டது.

இந்த பஸ் சாலையை ஆரம்பிப்பதற்காக சம்மாந்துறை பெரிய பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணியில் தற்காலிகமாக இடம் கொடுக்கப்பட்டது. இந்த நிலையில் 2021ஆம் ஆண்டு 19 பஸ்களுடனும்,87 ஊழியர்களுடன் இயங்கி வருகின்றது. இந்த பஸ்சாலையின் மூலமாக சம்மாந்துறை பிரதேசத்தை அண்டியுள்ள பல கிராம மக்கள் பயனடைந்து வருகின்றார்கள்.

குறிப்பாக மஜீத் புரம்,நெய்னாகாடு வழியாக குடிவில், இறக்காமம் போன்ற பிரதேசங்களுக்கு பயணிக்கின்ற அரசஉத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் நன்மையடைந்து வந்தனர்.





இந்த நிலையில் இந்த பஸ் சாலையை அகற்றுவது மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த டிப்போ மூலமாக நாள் ஒன்றுக்கு சராசரியாக இரண்டரை இலட்சம் ரூபா வருமானம் கிடைக்கின்றது.

சம்மாந்துறை பஸ் சாலை வருமானத்தை பெறுகின்ற சாலையாக இருக்கின்ற போது ஏன் இந்தச் சாலையை அகற்ற வேண்டும்? இந்த நிலையில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி சம்மாந்துறை பஸ் சாலைக்கு வந்த இ.போ.ச பிரதம பிராந்திய முகாமையாளர் சாலையின் பதிவேட்டில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இங்கிருக்கின்ற அனைத்து ஊழியர்களும் கல்முனை பஸ் சாலையுடன் இணையுமாறு குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றார். அன்றிலிருந்து இந்தப் பிரச்சினை ஆரம்பமாகியுள்ளது.

**கேள்வி: இப்போது இந்த சாலை தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது ?**

**பதில்:** சம்மாந்துறை மக்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்தப் போராட்டத்தில் நானும் பங்கேற்றேன்.

ஆனால் இப்போது அனைத்தும் கல்முனை சாலையுடன் இணைக்கப்பட்டு விட்டன. கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த சம்மாந்துறையை பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுத்து நிரந்தரக் கட்டடங்களை அமைத்திருந்தால் இப்போது இந்த பஸ் சாலையை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. இந்த நிலையில் நல்ல வருமானம் ஈட்டுகின்ற இந்த சாலையை அகற்றியிருப்பது முறையல்ல. மக்கள் மேற்கொண்டு வருகின்ற இந்தப் போராட்டத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் இருக்கின்ற எந்த அரசியல்வாதியும் பங்கேற்கவில்லை என்பது மிகவும் கலைக்குரிய விடயமாகும்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

# அதிக ஸ்மார்ட் போன் பாவனை புற்றுநோயை ஏற்படுத்தும்

## சுகாதார பணியக வாழ்க்கை முறை ஆலோசகர்

ஸ்மார்ட் போன்களை அதிகமாக பயன்படுத்துவதால் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படும் ஆபத்து இருப்பதாக குடும்ப சுகாதார பணியகத்தின் வாழ்க்கை முறை மற்றும் உளவியல் ஆலோசகர் வைத்தியர் லசந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகள் கருத்து தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஸ்மார்ட்போனிலிருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் புற்றுநோய் மற்றும் பிற நோய்களை ஏற்படுத்தக்கூடியது என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த குடும்ப சுகாதார பணியகத்தின் வாழ்க்கை முறை மற்றும் உளவியல் ஆலோசகர் வைத்தியர் லசந்த விஜேசேகர,

"ஒரு ஸ்மார்ட்போன் மூலம் வெளிப்படும் மின்காந்த அலைகள் நீண்ட நாள் நோய்களுக்கு வழிவகுக்கும். இந்த நோய்கள் என்ன? குறிப்பாக மூளை தொடர்பான நோய்கள், மார்பக புற்றுநோய், ஆண்மை குறைவு ஏற்படுத்தல், குழந்தைகளில் கவனம் குறைதல், சமூகப் பிரச்சினைகள் போன்றவை ஏற்படலாம். அதனால்தான் நாம் ஸ்மார்ட் போன்கள் பயன்பாட்டை மட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

### இராணுவத்திற்கு எதிராக...

பொய் பிரசாரம் செய்கிறனர். இலங்கை இராணுவமானது மனிதாபிமானமுள்ள இராணுவம் என்பதை யாழ்ப்பாண மக்கள் அறிவார்கள் என இராணுவ தளபதி சவேந்திர சில்வா யாழில் தெரித்தார்.

### ஆகஸ்ட், டிசம்பர் பாடசாலை... (03ஆம் பக்கத் தொடர்)

ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை யிலும், க.பொ.த. சாதாரணத் தர பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாத கடைசி வாரத்திலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

### விவசாய அமைச்சை... (03ஆம் பக்கத் தொடர்)

2016 ஏப்ரல் மாதம் 8ம் திகதி தொடக்கம் 2021 மார்ச் மாதம் 7ம் திகதி வரைக்குமான வாடகையாக மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியுள்ளது. அமைச்சை அக்கட்டடத்தில் அமைப்பதற்காக காரியாலய வசதியை வழங்கல், மரத்தளபாடங்கள் மற்றும் உபரணங்களை விலைக்கு வாங்கல் தொடர்பாடல் வசதிகள் மற்றும் ஆலோசனை சேவைகளுக்காக செலவிடப்பட்ட தொகை 34 கோடி ரூபா மொத்த வாடகைக்கு மேலதிகமாகவும் செலுத்த வேண்டியுள்ளது. விவசாய அமைச்சை மற்றும் கட்டடத்துக்கு சொந்தமான தனியார் நிறுவனத்துக்கிடையேயான ஒப்பந்தம் இம்மாதம் 7ம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. அன்றைய தினம் குத்தகைக்குப் பெற்றவர் மீண்டும் குத்தகைக்கு வழங்கியவரிடம் கையளிக்க வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்பில் ஈடுபாடு;

# ரயில்வே ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடும் ரயில்வே தொழிற்சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு சில தொழிற்சங்கத்தினரது பின்னணியில் அரசியல் கட்சிகளின் செல்வாக்கு காணப்படுகிறது.

குறுகிய நோக்கத்துக்காக பொது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளை ரயில்வே தொழிற்சங்கத்தினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என போக்குவரத்து துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

ரயில்வே சாரதிகள் சங்கம், ரயில்வே கட்டுப்பாட்டு சங்கம் ஆகிய தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ரயில்வே சாரதிகள் சங்கத்தினரும், புகையிரத கட்டுப்பாட்டு சங்கத்தினரும் கடந்த மாதமும் , கடந்த 8 ஆம் திகதியும் எவ்வித முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளார்கள். இவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் தொழிற்சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க தீர்மானக்கப்பட்டுள்ளது. புகையிரத சேவையில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வாக்குறுதிகள்மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை.

### எதிர்வரும் 21ஆம் திகதிக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

போதே பேராயர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஈஸ்டர் தாக்குதல் இலங்கைக்கு மட்டுமல்ல சர்வதேசத்துக்கும் சவால் விடுப்பதாக அமைந்திருந்தது.

கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜைகள்கூட ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்திருந்தனர்.

இந்த நிலையில் குற்றவாளிகளைத் தண்டிக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம் என்று அரசின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தேன்.

அரசுக்கு கால அவகாசத்தையும் வழங்கியிருக்கின்றேன். இதையடுத்து ஒரு சிலரின் பெயர்களை பிரதான குற்றவாளிகள் என்று அரசு அறியப்படுத்தியுள்ளது.

இது எமது வாயை அடைக்கும் முயற்சியாக இருக்கக் கூடாது. ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான, நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய குற்றவாளிகள் அனைவருக்கும் எதிராக தராதரம் பாராது உடன் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எவரையும் அரசு தப்பிக்க விடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இந்த சூழலும் புத்தாண்டுடன்... (03ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு எந்தவொரு குடும்பத்திலும் பின்பற்றப்படும் சடங்குகள் ஊடாக அதன் மதிப்புக்கள் அடையாளப்படுத்தப்படுவது மட்டும் அல்லாமல் இதனூடாக பெறுமதிமிக்க செல்வம் அடுத்த தலைமுறைக்கு கொடுக்கப்படுகின்றது என்பதை பெரியவர்களாக நாம் நினைவில்கொள்ள வேண்டும். தொழில்நுட்பத்தின் உதவியுடன் நொடிப்பொழுதில் உலகையே அறியக்கூடியக் இயலுமை கொண்ட இளைஞர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் இந்த சடங்குகளின் பின்னணியில் உள்ள அடிப்படைகளை எடுத்துக் கூறவேண்டும். இது எமது நாட்டுக்காக மேற்கொள்ளும் எதிர்கால முதலீடு என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த ஆண்டுகளில் புத்தாண்டு காலத்தில் ஏற்பட்ட மனக்கசப்புகள், விரக்திகள் இலகுவில் மறக்கமுடியாதவை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனினும், கொவிட் 19 உலகளாவிய சவால்கள் எம் முன்னிலையில் வந்தபோதும் அவற்றை வெற்றிகொள்ள எமது கூட்டு முயற்சி காரணமாக அமைந்தது. அவ்வாறான உலகளாவிய பிரச்சினை மூலம் ஒற்றுமை மற்றும் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழ்வதன் பெறுமதி மனித குலத்துக்கு உணர்த்தப்பட்டுள்ளது என்பதே எமது கருத்தாகும்.

இந்த சூழலும் புத்தாண்டுடன் வசந்தகாலமாக மாறும். அதனால், ஏனையவர்கள் குறித்து சிந்திக்கும் ஒரு புதிய மனிதராக இந்தப் புத்தாண்டில் நாட்டின் நலனுக்காக நீங்கள் அனைவரும் ஒரு மனதுடன், ஒன்றுபட வேண்டும் என்பதே எனது புத்தாண்டின் பிரார்த்தனையாகும்.

இலங்கையர்களாகிய நீங்கள் அனைவரும் சுபீட்சமான எதிர்காலத்தை அடைய இனிய சிங்கள, தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### அலுவலக ரயில் சேவைகள்... (03ஆம் பக்கத் தொடர்)

ரயில், கொழும்பு கோட்டையிலிருந்து பொல்காவலை மற்றும் கொழும்பு கோட்டையிலிருந்து மாத்தளை வரையான ரயில் சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

கடல்வழி பாதை ரயில்களான கொழும்பு கோட்டையிலிருந்து பாணந்துறை வரைக்குமான ரயில் மற்றும் களுத்துறை யிலிருந்து கொழும்பு கோட்டை வரைக்குமான ரயில், அளுத்கமையில் இருந்து காலி வரைக்குமான ரயில், புத்தளம் ரயில் பாதையில் கொழும்பு கோட்டையிலிருந்து மாதம்பே வரைக்குமான ரயில் மற்றும் நீர்கொழும்பு புத்தளம் வரையிலான ரயில்களும் இவற்றில் உள்ளடங்குவதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார் அதேவேளை கொழும்பு கோட்டையிலிருந்து ஹப்புத்தளை வரைக்குமான எரிபொருள் ரயில் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

### இரண்டாவது டோஸ் ... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளார். முதற்கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டு 10 அல்லது 12 வாரங்களுக்குள் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும். அதற்காக 2 லட்சத்து 30 ஆயிரம் தடுப்பூசிகள் தயார் நிலையில் உள்ளன. நிபுணத்துவ குழுவின் பேச்சு வார்த்தையின் பின்னர் அதற்கான திகதி அறிவிக்கப்படும்.

தற்போது உலகளவில் நிலவும் நடைமுறைகளுக்கு இணங்க பத்து வாரத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குவதா அல்லது 12 வாரத்தில் வழங்குவதா என்பது தொடர்பான தீர்மானம் எமது நிபுணத்துவ குழுவினால் மேற்கொள்ளப்படும்.

எமக்குத் தேவையான மேலும் ஒரு தொகை தடுப்பூசிகள் இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் நாட்டுக்கு கிடைக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார், (ஸ)

### எதிர்பார்ப்புகளை அடைய...

போலவே, அனைத்து குடிமக்களினதும் எதிர்பார்ப்பு நிறைவேறியிருப்பதை காட்டுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

புத்தாண்டையொட்டி வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டுள்ள அவர்,

புதிய எதிர்பார்ப்புகளுடனும் அவற்றை அடைந்துகொள்வதற்கான உறுதியுடனும் சிங்கள, தமிழ் புத்தாண்டை வரவேற்பது எமது கலாசாரத்தில் ஒரு மதிப்புமிக்க பாரம்பரியமாகும்.

கடந்த வருடம் புத்தாண்டு பிறப்பின் போது நாட்டில் நிலவிய சீரற்ற சுகாதார நிலைமைகள் அதற்குத் தடையாக இருந்தபோதிலும், பண்டைய பாரம்பரியங்கள் மற்றும் மரபுகளுக்கு முன்னுரிமை அளித்து, சுகாதார ஆலோசனைகளுக்கு ஏற்ப புத்தாண்டை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக்கூடிய வகையில் இந்த ஆண்டின் பின்னணியை நாம் அனைவரும் சேர்ந்து அமைத்திருக்கின்றோம். அது புத்தாண்டின் விடியலை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கும் சிறு பிள்ளைகளைப் போலவே, அனைத்து குடிமக்களினதும் எதிர்பார்ப்பு நிறைவேறியிருப்பதை காட்டுகிறது.

சிங்கள, தமிழ் புத்தாண்டு எங்களது மிகப்பெரும் கலாசார விழாவாகும். நாட்டு மக்கள் ஒரே சுபநேரத்தில் புத்தாண்டு கிரியைகளை நிறைவேற்றுவதன் மூலம் பிறக்கும் புத்தாண்டில் சுபீட்சம் மலரும் என்று எங்கள் உள்ளங்களில் ஒரு வலுவான நம்பிக்கை ஆழப் பதிந்துள்ளது. சிறுவர்களை மகிழ்விக்கும் புத்தாண்டு ஆடைகள், உணவுகள் மற்றும் விளையாட்டுகளை பார்த்து பெரியவர்கள் அளவில்லா ஆனந்தம் அடைகின்றனர். மேலும், சூழலில் ஏற்படும் இனிமையான மாற்றங்கள் எமக்கு உடல் மற்றும் உள ஆறுதலைத் தருகின்றன.

சிக்கலான எண்ணங்களுடன் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடும் வளர்ந்தவர்கள் அவர்களுக்கிடையே ஏற்படும் கவலைதரும் மனக்குறைகளை தேற்றிக்கொள்ள கிடைப்பதும் புத்தாண்டின் ஒரு விசேட சிறப்பம்சமாகும்.

அனைத்து மக்களும் எந்தவிதமான பேதங்களும் இன்றி அமைதியானதும் நேர்மையானதுமான எண்ணங்களுடன் சிங்கள, தமிழ் புத்தாண்டு சம்பிரதாயங்களில் இணைந்துகொள்ள வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

புத்தாண்டு காலத்தில் தங்களது பிள்ளைகளை பிரிந்து கடமைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைவரினதும் அர்ப்பணிப்புகளை நான் இச்சந்தர்ப்பத்தில் கௌரவத்துடன் நினைவுகூர்கிறேன். மலரும் சிங்கள, தமிழ் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வாழ்த்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### சித்திரை புத்தாண்டின் புது வரவில்...

தெரிவித்துள்ளார். நான் கூறும் எமது மக்களின் புது மகிழ்வென்பது தத்தமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் சகல மக்களும் சரிநிகர் சமன் என்ற சமத்துவ உரிமைகளோடு தலை நிமிர்வுடன் வாழ்வதேயாகும்.

அரசியலுரிமை, அபிவிருத்தி, அன்றாட வாழ்வியல் உரிமை என எமது மக்கள் விரும்பும் எழிலார்ந்த வாழ்வை உருவாக்க சகல அரசியல் தலைமைகளும், சிவில் சமூக அமைப்புகளும் யதார்த்த பூர்வமான செயல் முறைக்கு முன்வர வேண்டும். அரசியலுரிமை என ஒரு புறமும், அபிவிருத்தி என இன்னொரு புறமும் மட்டற்ற வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வழங்குவதால் எமது மக்கள் தொடர்ந்தும் திக்கற்று நிற்கும் துயர் நிலையே நீடித்து வருகிறது.

ஆகவே, எமதிரு கண்களாக விளங்கும் அரசியலுரிமையும், அபிவிருத்தியும் இணைந்த எமது மக்களின் இலட்சியக்கனவுகள் ஈடேற வேண்டும்.

எமது மக்களின் சகல இழப்புகளுக்குமான பரிகாரம் தேடும் துயர் துடைப்புகள் துரிதமாக நிகழ வேண்டும்.

வறுமையற்ற வாழ்வு நோக்கி நிமிர்ந்தெழுந்து சகல மக்களும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடும் சூழல் நிலவ வேண்டும். சமகால சூழலில் சரியான திசைவழி நோக்கி பயணிப்பதன் உடாக எமது மக்கள் எண்ணிய எதிர்கால இலட்சியங்களை எட்டிவிட முடியும். இந்த ஆழ்மன நம்பிக்கையோடு சித்திரை புத்தாண்டை கொண்டாடி மகிழும் சகல மக்களுக்கும் எனது அறிவார்ந்த வழிகாட்டலுடன் வாழ்த்துக்களையும் கூறுகின்றேன். இவ்வாறு தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தேசிய நல்லிணக்க சிந்தனை செயற்பாடுகளை சகல தரப்பு மக்களும் பலப்படுத்துவதே ஒளி வீசும் உயரிய வாழ்விற்கு உரமிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

### அனைத்து இலங்கையரினதும்...

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தமிழ், சிங்கள புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு இந்த வாழ்த்து செய்தியை மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன்.

நம் நாட்டு மக்கள் பழங்காலத்திலிருந்தே பழங்கால பழக்கவழக்கங்களுக்கும் மரபுகளுக்கும் முன்னுரிமை அளித்து, விழாக்களை கொண்டாடி வருகின்றனர். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும் கலாசார ரீதியாக மதிப்புமிக்க சமூக நடைமுறைகள் இந்த தமிழ் , சிங்கள புத்தாண்டின் மூலம் நினைவு கூரப்படுகின்றது. அரசாங்கம் வழங்கிய சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி ஒழுக்கமான மக்கள் என்ற வகையில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புகள் காரணமாக, இப்புத்தாண்டை இந்த அளவிற்கேனும் சுதந்திரமாக கொண்டாட வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, சுகாதார நடைமுறைகளை மனதில் கொண்டு நமது கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது நம் அனைவரினதும் பொறுப்பாகும். மக்கள் மீது சுமத்தப்படும் சுமையை அரசாங்கம் பொறுப்பேற்று, அனைத்து மக்களின் எதிர்காலத்தையும் வளமாக்க அரசாங்கம் செயல்படுகின்றது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

அதற்கு நம் ஒருவருக்கொருவர் இடையில் காணப்படும் உறவை வலுப்படுத்தி, இலங்கை தேசம் என்ற ரீதியில் உலகின் முன்னிலையில் புதிய வீரியத்துடன் உயர்ந்து நிற்பதற்கு இப்புத்தாண்டில் நாம் அனைவரும் உறுதி கொள்வோம்.

இப்புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் சுபீட்சம் நிறைந்த வளமான ஆண்டாக அமைய வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இல்லங்களில் மகிழ்ச்சி...

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது மலையக மக்கள் இடர்களை எதிர்கொள்ளும் போதும், சவால்களை சந்திக்கின்ற போதும் அவர்களை அரணாகக் காத்து நின்று துயர்களையும், துடைத்து பாதுகாத்து வந்திருக்கின்றோம். இந்த வரலாற்றுப் பணியை நாம் மேற்கொண்டிருப்பதை வரலாறு சான்று படுத்தும். இதன் காரணமாகவே தெளிந்த சிந்தனையோடும், கொள்கைப்பற்றோடும் மக்கள் அனைவருக்கும் சலுகைகள், உரிமைகள், வசதி வாய்ப்புக்கள், அத்தனையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் சாணக்கியத்தாலும், போராட்டங்களாலும் பெறப்பட்டவை என்பதை எவரும் மறந்துவிட முடியாது. இப்புதிய ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வுடன் தோட்டங்கள் தோறும் சந்தோஷமாக புத்தாண்டை இம்முறை கொண்டாடுவதற்கு வழிசமைத்துள்ளது. மலையக சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு இ.தொ.கா. அனைத்து வகையிலும் கைகொடுக்கும் என்பதை இப் புத்தாண்டில் தெரிவித்துக்கொள்கின்றோம். மலையக வரலாற்றில் இவ்வருடம் முக்கியத்துவம் வாய்ந்தது. 82ஆவது ஆண்டைக் கடந்து பயணிக்கவுள்ள இந்த வருடமானது நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாகவும், மலையக மக்களின் தேவைகளிலும் அவர்களது முயற்சிகளிலும் நாம் என்றும் கைகொடுப்போம். இப்புதிய பிலவ ஆண்டில் மலையகமெங்கும், மலர்ச்சி பரவட்டமெனவும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### சட்டவிரோதமாக அகழ்ந்து...

தெரிவிக்கப்படடிருந்தது. இந்நிலையில் களத்தில் குதித்த ஒட்டுசுட்டான் பொலிஸார் அங்கு சட்டவிரோதமாக அகழ்ந்து குவிக்கப்பட்டிருந்த சுமார் 750 டிப்பர் கிரவலை தமது ஆளுகையின் கீழ் கொண்டுவந்ததுடன் குறித்த காணிக்கு உரிமை கோரிய கிராம அலுவலரின் மனைவியையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மானுருவி பகுதியில் அனுமதிப்பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் பாரிய அளவில் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ள போதும் இதற்கு எதிராக திணைக்களங்கள் எதுவும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்படடிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை சம்பவ இடத்திற்குச் சென்ற ஒட்டுசுட்டான் பொலிசார் குறித்த கிரவல் குவித்து வைக்கப்பட்டிருந்த இடங்களை பார்வையிட்டதோடு குறித்த இடம் தொடர்பிலும் இங்கு கிரவல் யார் அகழ்ந்தது என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்தனர் இதன்போது குறித்த பகுதியில் கிராம அலுவலர் ஒருவரே குறித்த கிரவல் அகழ்வை மேற்கொண்டதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதி கிராம அலுவலர் மற்றும் கிரவல் அகழ்வில் ஈடுபட்ட கிராம அலுவலர் ஆகியோரை பொலிசார் சம்பவ இடத்திற்கு அழைத்து இருந்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கருவேலங்கண்டல் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் அவர்கள் குறித்த காணி அனுமதிப்பத்திரம் இல்லை எனவும் அவ்வாறான நிலையிலேயே குறித்த காணியில் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் குறித்த அகழ்வில் ஈடுபட்ட கிராம அலுவலருடைய மனைவியினுடைய தந்தையின் காணி எனவும் தந்தையார் மகளுக்கு அதாவது கிரவல் அகழ்வில் ஈடுபட்ட கிராம அலுவலரின் மனைவிக்கு வழங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்ட போதும் குறித்த காணிக்கான ஆவணங்கள் இல்லை எனவும் குறித்த காணி ஆவணத்துக்கு பிரதேசத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பதாகவும் குறித்த கிரவல் அகழ்வுக்கு அனுமதி பெறப்படவில்லை என்பது தொடர்பிலும் பொலிசாருக்கு தெரிவித்தார்.

இந் நிலையில் குறித்த காணியின் உரிமையாளரான கிராம அலுவலருடைய மனைவியிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் இந்த அகழ்வு நடவடிக்கைக்காக எந்தவிதமான ஒரு அனுமதியையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறித்த காணியை விவசாய தேவைக்காக சுத்தம் செய்வதற்காக பிரதேச செயலகத்திற்கு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பிரதியை மாத்திரம் காட்டிய நிலையில் குறித்த அகழ்வு மற்றும் களஞ்சியப்படுத்தல் சட்டத்திற்கு புறம்பாக செய்யப்பட்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் குறித்த கிராம அலுவலருடைய மனைவி தற்போது ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் அழைத்துவரப்பட்டு ஒட்டுசுட்டான் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சமஷ்டி அல்லது கூட்டாட்சி...

இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கு இந்த ஆட்சியில் இடமில்லை.

நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சி முறைமை மூலம்தான் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

புதிய அரசமைப்பில் இது தொடர்பில் தெளிவாகப் குறிப்பிடப்படும்.

ஒற்றையாட்சி முறைமையால் இந்த நாடு பேரழிவுகளைச் சந்திக்கவில்லை. பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்டை மீட்டெடுத்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கனவைத் தவிடிபொடியாக்கினோம். அவர்களை இல்லாதொழித்தோம்.

சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமைதான் பிரிவினைக்கு வழிவகுக்கும். அது நாட்டைப் பிளவுபடுத்தும் நாட்டின் நல்லிணக்கத்துக்குப் பாதகமாக அமையும் என்றார்.

### எவ்வித தடையுமின்றி...

புதுவருடத்தை யொட்டி சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் 5000 ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. நேற்றும் இன்றும் அதற்கான நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி கொடுப்பனவு தொடர்பில் எந்த தரப்பினரும் எந்த சிக்கல்களையும் ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்றும் குறித்த பிரதேசத்தில் வங்கி கிளைகளின் மூலம் மேற்படி 5000 ரூபாவை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்தார். சமுர்த்தி அதிகாரிகளுக்கிடையில் சில பிரச்சினைகள் இருந்தபோதும் அவற்றுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்ட அவர் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். கொடுப்பனவு ஒழுங்குகள் தொடர்பில் ராஜாங்க அமைச்சர் ஜனக்க வரும்போது தெரிவிக்கையில் அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கி இக்காலங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவை வழங்கி வருகின்றது சூழ்நிலையிலும் அரசாங்கம் மேற்படி கொடுப்பனவை தொடர்ந்து வழங்கியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை மக்களுக்காக முன்னெடுத்த போதும் சில தரப்பினர் அரசாங்கத்திற்கு சேறு பூசும் வகையில் விமர்சனங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவர் எந்தவித விமர்சனங்களை முன்வைத்தாலும் மக்களுக்கான அனைத்தையும் அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மாகாண சபைத் தேர்தலில்...

வலுப்படுத்த கிராம மட்டத்தில் ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

"ஒரு கட்சியாக எங்களுக்கு முக்கிய தேவை அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். மாகாண சபைத் தேர்தல் வரும்போது, நாங்கள் ஒரு கட்சியாக போட்டி யி ட தயாராக இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, சுதந்திரக் கட்சி அ ரசாங்கமொன்றை உருவாக்கப் போ வதாக கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன முன்னர் கூறியிருந்தார்.கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இ ருப்பதாகவும் அவர் கூறியிருந்தார். அண்மையில் ஆளும் தரப்பிலுள்ள சிறுகட்சிகள் சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் கூடி மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆராய்ந்தது குறிப்பிடத்தக்கது.

### சர்ச்சைக்குரிய எண்ணெய்...

'பார்பரா' கப்பல் மூலம் அது மலேசியாவுக்கு மீன் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி தேங்காய் எண்ணெய் தற்போது கொழும்பு துறைமுகத்தில் எஸ்.டி.ஜி.டி. முனையத்தில் உள்ள களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கட்டானை பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான களஞ்சியசாலையில் இருந்து கைப்பற்றப்பட்ட மேற்படி தேங்காய் எண்ணெய் ஆறு கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தி உள்ளதாக தெரிவித்த அவர் அதன் பெறுமதி 30,754,500 ரூபா என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ

### அனுமதியின்றி உம்ரா யாத்திரை;...

ஹரத்திற்கு செல்ல முயற்சிக்கும் நபர்களுக்கு தலா 10,000 ரியால் அபராதம் விதிக்கப்படும் என சவுதி அரேபியா அரசு தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில், மக்கா மசூதியில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாத்ரீகர்களிடம் அனுமதி இருக்கிறதா என அனைத்து சாலைகளிலும், சோதனை சாவடிகளிலும் செக்யூரிட்டி அதிகாரிகள் சோதனை மேற்கொள்வார்கள். விதிமீறலில் ஈடுபடும் யாத்ரீகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சவுதி அரேபிய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

மக்கா பள்ளிவாசலுக்கு தினசரி 50,000 உம்ரா யாத்ரீகர்கள் வரை அனுமதிக்கப்படுவர். ரமழான் நாளில் ஒரு லட்சம் பேர் அனுமதிக்கப்படுவர். கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் மட்டுமே உம்ரா யாத்திரை மேற்கொள்ளவும், மக்கா மசூதிக்கு வரவும் அனுமதிக்கப்படுவார்கள் என சவுதி அரசு தெரிவித்துள்ளது.




# 'இறை இரக்கத்தின் ஞாயிறு' மூலம் ஆண்டவர் இயேசு தரும் நம்பிக்கை

ஈஸ்டர் ஞாயிறுக்கு அடுத்து வரும் ஞாயிறு 'இறை இரக்கத்தின் ஞாயிறு' என அழைக்கப்படுகின்றது. ஆண்டவராகிய கடவுள் நம் முட்டைகளிலிருந்து நாம் வெளியே புத்துயிர் பெற்றவர்களாக வர உதவுகிறார். இதுவே அவர் நம்மேல் காட்டும் இரக்கம். முட்டைக்குள்ளே இருப்பது சுகம்தான். ஆனால், காலப் போக்கில் அதுவே ஆபத்தாகிவிடும். முட்டையை விட்டு வெளியே வருவது துன்பம் தான். ஆனால், அந்தத் துன்பம்தான் வாழ்வைச் சாத்தியமாக்குகிறது.

'இறை இரக்கத்தின் ஞாயிறின் மூன்று வாசகங்களிலும் நம்பிக்கை என்ற வார்த்தை முக்கியமான வார்த்தையாக இருக்கிறது. முதல் வாசகத்தில் 'நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் உள்ளனர்.' அனைத்தையும் பொதுமைப்படுத்தும் வாழ்க்கை முறையைக் கொண்டு கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்கின்றனர்.

இரண்டாம் வாசகத்தில் 'உலகை வெல்வது நம்பிக்கையே' எனத் தன் குழுமத்துக்கு எழுதுகின்ற யோவான் 'இயேசுதான் மெசியா என ஏற்று அறிக்கையிடுவதே' நம்பிக்கை என வரையறுக்கிறார். மேலும் நம்பிக்கை கொண்டவர்கள் அன்புக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வழியாக தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்த அல்லது அறிக்கையிட வேண்டும் என அறிவுறுத்துகின்றார் யோவான்.

நற்செய்தி வாசகத்தில் இரு நிகழ்வுகள் உள்ளன. முதல் நிகழ்வு இயேசுவின் உயிர்ப்பு நாளன்றும் இரண்டாம் நிகழ்வு எட்டாம் நாளன்றும் நடக்கிறது. முதல் நிகழ்வில் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தாலும் திருத்தூதர்கள் தங்கள் பயத்திலிருந்து வெளியேறவில்லை. முன்பை விட இரண்டாம் முறை இன்னும் அதிகக் கவனத்துடன் கதவுகளைப் பூட்டுப் போட்டுப் பூட்டிக்கொள்கின்றனர். அங்கே மீண்டும் அவர்களுக்குத் தோன்றுகிற இயேசு, தோமாவுக்குத் தன்னையே நெருக்கமாகக் காட்ட முன்வர அவரும், 'நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!' என இறைவனிடம் சரணாகதி அடைகின்றார்.நற்செய்தி வாசகத்தில் இயேசு தன் சீடர்களுக்கு மூன்று கொடைகளை வழங்குகின்றார்:

### அதில் ஒன்று அமைதி.

இயேசு தன் சீடர்களுக்குச் சொல்லும் முதல் வார்த்தையே 'அமைதி' என்பதுதான். எபிரேயத்தில் 'ஷலோம்' என்றால் 'கீறல் இல்லாத பானை' என்பது அடையாளப் பொருள். கீறல் இல்லாத பானை போல எந்தவொரு ஆற்றல் வெளியேற்றமும் இல்லாமல் நம் உள்ளம் இருக்கும்போது அங்கே அமைதி குடிகொள்கிறது.

அமைதியின் முக்கியமான எதிரி நம்பிக்கையின்மை. நம்பிக்கையின்மை குணமாக வேண்டுமெனில் நாம் இயேசுவின் காயங்களைத் தொட வேண்டும். தன் காயங்களை இயேசு தோமாவுக்குக் காட்டுகின்றார். அவற்றைத் தொட அனுமதிக்கின்றார். அமைதியின் முரண் என்னவென்றால், நம்

அருட்பணி
**ஏசு கருணாநிதி...**

வாழ்வு கீறலற்ற பானை போல இருக்க வேண்டும் என்பதற்காக ஆண்டவராகிய இயேசு தன் உடலில் அனைத்துக் கீறல்களையும் ஏற்றுக்கொண்டார்.

### இரண்டாவது மகிழ்ச்சி.

'ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்' என எழுதுகின்றார் நற்செய்தியாளர். மகிழ்ச்சி மிகுதியால்கூட நம்மால் சில நேரங்களில் வாழ்வின் நிகழ்வுகளை நம்ப முடிவதில்லை. பயம், குற்றவுணர்வு, மற்றும் மன்னிக்க இயலாத நிலை நம் மகிழ்ச்சிக்குத் தடைகளாக இருக்கின்றன. ஆகையால்தான் மன்னிப்பு' பற்றி தன் சீடர்களுக்குச் சொல்கின்றார் இயேசு.

### மூன்றாவது பணி வாழ்வு.

'தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்' என்கிறார் இயேசு. இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் பெற்ற ஒருவர் தன் ஒளியைத் தனக்குள்ளோ, தன் கூடைக்குள்ளோ, தன் கட்டிலுக்குக் கீழேயோ வைத்துக் கொள்ள இயலாது. அவர் அதை மற்றவர்களுக்குப் பயன்படுமாறு ஏற்றி வைத்தல் வேண்டும். நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரும் நிறைவுமனம் கொண்டவர்களாக அனைத்தையும் அனைவரோடும் பகிர்ந்துகொள்கின்றனர்.

### இயேசுவின் உயிர்ப்பு நம் நம்பிக்கையின் அடித்தளம்.

அந்த நம்பிக்கை, 'அமைதி,' 'மகிழ்ச்சி', மற்றும் 'பணி' எனக் கனிந்தால் திருப்பாடலின் ஆசிரியர் போல 'என்றென்றும் உள்ளது ஆண்டவருடைய பேரன்பு' (காண். திபா 118) என்று நாமும் அறிக்கையிட முடியும்.






# நம் துயரங்களில் நமக்குத் தேவைப்படும் இறைவனின் இரக்கம் நிறைந்த அன்பு

– திருத்தந்தை பிரான்சிஸ்

ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் நம் தவறுகளையே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதை அவர் விரும்பவில்லை. மாறாக நாம் அவரை நோக்கிப் பார்க்குமாறும் நம் தவறுகளில் நமக்கு உதவிபுரியவும் அவர் விரும்புகிறார் என திருத்தந்தை பிரான்சிஸ்தெரிவித்தார்.

நம் துயரங்களில் அவரது இரக்கமுள்ள அன்பு நமக்குத் தேவைப்படுவதையும் அவர் உணர்த்துகிறார் என்ற திருத்தந்தை

இறைவனின் இரக்கம் நிறைந்த அன்பு அவரின் பிள்ளைகளாகிய நமக்கு எவ்வளவு தேவைப்படுகின்றது என்பதை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் 21 ஆண்டுகளுக்கு முன் உயிர்ப்பு பெருவிழாவுக்கு அடுத்துவரும் ஞாயிறை இறை இரக்க ஞாயிறாக அறிவித்தார்.

இறை இரக்க ஆன்மீகத்தைப் பரப்பும் மையமாக விளங்கும் மேற்படி உரோம் ஆலயத்தில் திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் மற்றும் புனித பவுஸ்தீனா கோவால்ஸ்கா ஆகிய இருவரின் புனிதப் பொருட்கள் உள்ளன.

போலந்து நாட்டில் பிறந்த அருட்சகோதரி புனித பவுஸ்தீனா தன் வாழ்நாள் முழுவதும் இயேசுவை பலமுறை காட்சிகளில் கண்டதாகவும் அவரோடு உரையாடியதாகவும் கூறியுள்ளார். இவர் இறை இரக்கத்தின் தூதர் என்று அழைக்கப்படுகின்றார்.

**மேரி தெரேசா...**



# "ஐயம் வேண்டாம் விசுவாசம் கொள்"

## புனித தோமையார்

**ஒரு சிறப்புப் பார்வை**

பன்னிருவருள் தோமா நமக்கு யோவான் நற்செய்தியில் அறிமுகமாகின்றார். முதலில் இலாசர் மரித்த வேளையில் யூதர்கள் கல்லால் அடிக்கும் நோக்கம் கொண்டுள்ளார்கள் என்பதால் சீடர்கள் யூதேயா போக தயக்கம் காட்டிய வேளையில் "நாமும் செல்வோம், அவரோடு மரிப்போம்."( யோவான் 11:16)என்று துணிவுடன் பேசியவர். மீண்டும் யோவான் 14:05 வசனத்தில் "ஆண்டவரே நீர் போகும் இடம் எமக்கு தெரியாதிருக்கையில் அதற்கான வழியை நாம் எவ்வாறு அறிவோம்" என்றும் கேட்கிறார். இறுதியில் ஆண்டவர் உயிர்த்து சீடர்களுக்கு காட்சியளித்த வேளையில் கலிலேயா கடற்கரையில் அவரை காண்கிறோம்.



அவர் இயேசுவின் நற்செய்தியை சுமந்து கொண்டு கி.பி 52 ஆம் ஆண்டிலேயே முசிறி என்ற பட்டணத்தின் வழியாக தமிழகம் வந்துள்ளதாலேயே அவரை நாம் சிறப்புமிக்க வராக காண்கிறோம்.

நற்செய்தியை கொண்டு வந்த அவர் உருவாக்கிய ஆலயங்களும் இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றன. எருசலேமிலிருந்து தோமையார் வடமேற்கு இந்தியா வழியாக கேரளா வந்திருக்க வேண்டும்.பின்னர் கரையோரமாக தமிழகம் வந்திருக்கலாம். ஏன் இலங்கையில் கூட அவர் கால்பதித்திருக்கலாம்.

வரலாற்றுக் குறிப்புகளின் படி அவர் சென்னை மயிலாப்பூரில் வசித்தார் என்றும் மக்கள் மத்தியிலும் ஆட்சியாளர் மத்தியிலும் நன் மதிப்பும் செல்வாக்கும் கொண்டு வாழ்ந்தார் என்றும் அறிகின்றோம். தற்கால ஆராய்ச்சிகளின் படி பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரும் அதே ஊரில் ஏறக்குறைய அதே காலகட்டத்தில் வாழ்ந்து வந்துள்ளார். திருக்குறளை ஆராய்ச்சி செய்த பெரும் அறிஞர்கள் பலர்.(லோப்பு அடிகளார், பேராசிரியர் தெய்வநாயகம், மயிலை முன்னாள் பேராயர் அருளப்பா போன்றோர்) இவ்விரு அறிஞர்களின் தொடர்பு கொண்டவர்களாக இருப்பர் என்பர். திருக்குறளில் உள்ள கிறிஸ்தவ நெறிகளின் தாக்கத்தை ஆதாரமாகவும் எடுத்துரைப்பர்.

தோமாவின் நற்செயல்களையும் விசுவாசத்தை பகிர்ந்தளிக்க அவர் எடுத்த முயற்சிகளையும் விரும்பாதோர் இருக்கவே செய்தனர். இவர்கள் அவரை சென்னையை அடுத்திருக்கும் மலை உச்சியில்வைத்து ஈட்டியால் குத்திக் கொன்றார்கள். ஆனால் 13 ம் நூற்றாண்டில்

இந்தியாவுக்கு விஜயம் செய்த வெளிநாட்டு மாலுமி மார்க்கோ போலோவின் குறிப்புகளின் படி மயில் வேட்டையாடிக் கொண்டிருந்தஒருவரது அம்பு தவறாக நமது புனிதரைக் கொன்றுவிட்டது எனக் குறிப்பிடுகிறது. இன்று அவ்விடத்தில் ஒரு மரியன்னையின் ஆலயமும் அவரது இரத்தம் சிந்தப்பட்ட பாறையும் நாம் காணும் படி இருக்கின்றன.இவ்விடத்தை தோமாவின் மலை என்கிறார்கள். சென்னை விமான நிலையத்தில் இருந்து சற்று தூரத்திலேயே இது இருக்கின்றது. எனினும் தோமாவின் உடலை அடியவர்கள் எடுத்து சென்று கடற்கரையோரத்தில் ஒரு இடத்தில் அடக்கம் செய்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

உலகிலேயே பன்னிரு அப்போஸ்தலர்களில் மூன்று பேருக்கு மட்டுமே கல்லறை உள்ள இடத்தில் பேராலயங்கள் உள்ளன. சென்னை மயிலாப்பூர் சாந்தோம் பேராலயத்தில் நாம் இலகுவில் சென்று பார்க்கும் விதமாக பிரதான பீடத்திற்கு கீழே புனித தோமாவின் கல்லறையும் அதனோடிணைந்த திருப்பண்டங்களும் உள்ளன.'

எனினும் திருப்பண்டங்களில் சிலவற்றை 232 ஆம் ஆண்டு நூற்றாண்டில் சென்னையை ஆட்சி செய்த வாசுதேவன் என்ற மன்னனின் அனுமதியோடு எடுத்துச் சென்று மொசப்பத்மியாவின் எதேஸ்ஸா நகரில் அடக்கம் செய்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இவை தவிர சைதாப்பேட்டை என்ற இடத்தில் ஒரு ஆலயத்தில் தோமா தம் எதிரிகள் கைகளில் சிக்காமல் இருக்க ஒளிந்திருந்த ஒரு குகை இருக்கிறது. எதிரிகள் நெருங்கி வந்தவுடன் அவர் தப்பித்துச் சென்ற மற்றவை நாம் காணலாம். ஒளிந்திருந்த வேளையில் அவர் தாக சாந்திக்காக பயன்படுத்திய நீர் ஊற்று இன்னும் அங்கே உள்ளது. இதனை சின்னமலை கோயில் என்பர். இதுபோல

சகோ. **ஜோர்ஜ் டிவோட்டா...**

தென் தமிழகத்திலும் கேரளாவிலும் தோமையார் பெயர் சொல்லும் இடங்கள் பல உள்ளன.

இலங்கையில் கோட்டை இராசதானியில் அமைந்த தோமையார் கோயிலை நாம் பிற்றகோட்டே சந்தியில் மலை உச்சியில் காணலாம்.

அதுபோல கொழும்பு ஜிந்துப்பிட்டியில் உள்ள இலங்கைத் திருச்சபை ஆலயம் முன்னாட்களில் ஒரு கத்தோலிக்க ஆலயமாய் போர்த்துக்கேயர் காலத்தில் இருந்திருக்கின்றது.

ஆங்கிலிக்கன்ஆலயம் நிறுவப்பட்டு 200 ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. சாந்தோம் பிட்டிதான் மருவி பிற்காலத்தில் ஜிந்துபிட்டி ஆகியுள்ளது.

சென்னையில் தோமையார் ஆலயம் மலை மீது உள்ளது போன்று இங்கும் அவ்வாறு மலை மேல் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று நாம் கத்தோலிக்கக் கொடியில் சித்தரித்திருப்பது நஸ்ரினி சிலுவை எனப்படும் தோமையாரின் சிலுவையே. இலங்கையில் முகத்துவாரம் அனுராதபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புராதன சிலுவை இதுவாகும்.



தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 ஏப்ரல் 13
செவ்வாய்க்கிழமை

இந்திய அரசின் வீட்டுத் திட்டம்

# வீடுகளை முழுமையாக நிர்மாணிக்க முடியாது நிர்க்கதியில் மக்கள்



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

இந்திய அரசின் நிதி உதவியில் மாவட்டத்திற்கு ஒரு கிராமம் எனும் வீட்டுத் திட்டத்தில் கிளிநொச்சியில் மலையாளபுரம் கிராமம் தெரிவு செய்யப்பட்டு 24 வீடுகள் வழங்கப்பட்ட போதும் அவ் வீடுகளை முழுமையாக கட்டு முடிப்பதற்கான நிதி பயனாளிகளுக்கு வழங்காமையால் அவர்கள் நிர்க்கதிக்குள் உள்ளாகியுள்ளனர்.



கிளிநொச்சியில் மலையாளபுரத்தில் சம்பவம்

கடந்த 2018 ஆம் ஆண்டு மலையாளபுரம் கிராமத்தில் காணிகளுடன் 24 வீடுகளும் வழங்கப்பட்டன. இதில் வீட்டுத் திட்டத்திற்கான பணம் முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என வழங்கப்பட்ட நிலையில் மிகுதிப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் வீடுகளை பூரணப்படுத்த முடியாத நிலையில் பயனாளிகள் காணப்படுகின்றனர். தாங்கள் வாழ்கின்ற தற்காலிக வீடுகளும் காலாவதியான நிலையில் நிரந்தர வீட்டையும் பூரணப்படுத்தி அங்கும் செல்ல முடியாத நிலையில் இருப்பதாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதில் சில பயனாளிகள் தாங்கள் வீட்டுத்திட்டப் பணம் கிடைக்கும் என நம்பி 10 வீத வட்டிக்கு பணத்தை பெற்று வீட்டு வேலைகளை நிறைவு செய்து குடியேறிவிட்டதாகவும் ஆனால் வீட்டுத்திட்டப் பணம் கிடைக்காமையால் பெரும் நெருக்கடியை சந்திப்பதாகவும் வட்டியை தொடர்ந்து செலுத்த முடியாத நிலையில் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே தங்களின் இந் நெருக்கடி நிலையினை கருத்தில் கொண்டு மிகுதி பணத்தை விரைவாக கிடைக்க உதவி செய்யுமாறு கோரியுள்ளனர்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி விவகாரம்

# தென்னிந்திய திருச்சபை பேராயர் பெரும் கவலை

**கோப்பாய் குறூப் நிருபர்**

கிறிஸ்தவ மதத்தில் இருக்கும் சில வெள்ளை அங்கியினரின் செயற்பாட்டால் கிறிஸ்தவ மதமே வெட்கம் அடைவதாக தென்னிந்திய திருச்சபையின் யாழ்.பேராயர் டானியல் தியாகராஜா கவலை தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற சம்பவத்தையும் அதனூடாக வழி வந்த செய்திகளை பார்த்துக் கவலை அடைந்தேன்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயராக நான் இருக்கின்ற நிலையில் எம்மில் இருந்து பிரிந்த சிலர் தமக்கான ஒரு சபையை ஆரம்பித்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரியுடன் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் தென்னிந்திய திருச்சபையுடன் எவ்வித தொடர்பும் அற்றவர்கள் என வடக்கு கல்விச் செயலாளருக்குத் தெரியப்படுத்தியும் எம்முடன் பேசி சுமுகமான முடிவை எடுக்க முயற்சிக்கவில்லை.தென்னிந்தியத் திருச்சபை சிலோன் அமைப்பினரை அழைத்து தமது சொத்து தொடர்பில் பேசியமை இவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றது.

தற்போது தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இடம்பெற்று வரும் பிரச்சினைக்குரிய இடமான அமெரிக்க மிசன் குருமார்கள் தங்கிய வீட்டின் அனைத்து ஆவணங்களும் என்னிடம் உள்ளது.

1816 ஆம் ஆண்டு யாழ். வந்த குருமார்கள் தங்கிய இடம் யூனியன் கல்லூரியில் காணப்படுகின்ற புராதன கட்டடம் அதனையே சில வெள்ளை அங்கியினர் அடாத்தாக தம் வசம் இழுப்பதற்கு முயல்கின்றனர்.மிஷனரி மாரின் பின்னர் எமது சுதேசிகள் அமெரிக்கன் மிஷன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளை மேற்பார்வை செய்து வழி நடத்தி வந்தனர்.அவ்வாறு மேற்பார்வை செய்தவர்கள் தங்குவதற்கான இல்லமாக இந்தப் புராதன கட்டடம் வழங்கப்பட்டு வந்தது.

அரசாங்கத்திடம் யூனியன் கல்லூரியை ஒப்படைத்து போராயராக அதற்கு மாற்றாக காணி ஒன்றை வழங்கி இல்லத்தை எமக்கு தர வேண்டும் என அரசாங்கத்துடன் கோரிக்கை வைத்து பெற்றுக் கொண்டோம். பிரச்சினைகள் எழும்போது உரியவர்களுடன் அணுகி சுலபமாக அதனைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

யூனியன் கல்லூரியில் அமைந்துள்ள பழைய குருமார்கள் தங்கிய இல்லம் பின்னர் அதிபர்கள் பயன்படுத்திய இடங்களை குறித்த பாடசாலைக்கு பாவனைக்காக வழங்குவதில் எமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் அவற்றை அவர்களுக்கு வழங்கி விட வேண்டும் அல்லது அவர்களுக்குத்தான் உரியது என வாதிடுவது தவறாகும்.ஏனெனில் அது எமது பாரம்பரிய சொத்து அதனை யாருக்கும் நாம் வழங்கி விட முடியாது.ஆகவே வரலாறு தெரியாதவர்களும் வரலாற்றை அறிய விரும்பாதவர்களும் செய்யும் ஒரு சில காரியங்கள் கிறிஸ்தவ மதத்துக்கே கலங்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் கடும் பனிமூட்டம்



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், மக்களது இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று அதிகாலையிலிருந்து வவுனியாவில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக வவுனியாவில் மழை பெய்து வந்த நிலையில் தற்போது பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏ9 வீதியும் பனிமூட்டமாக காட்சியளித்தது.

இதனால் அதிகாலையில் தமது கடமைகளுக்குச் செல்லும் வாகனச் சாரதிகள், தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், விவசாயிகள், தனியார் துறையினர் போன்ற பல்வேறு தரப்பினர் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

கிளிநொச்சியில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின்

# வாழ்வாதார மேம்பாட்டிற்காக தொழிற்சாலை ஆரம்பிப்பு





**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி பளை நகரில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக உள்ளூர் உற்பத்தி நிலையம் நேற்றுமுன்தினம் (10) திறந்து வைக்கப்பட்டது. "வள்ளி புரொடக்" என பெயரிடப்பட்டுள்ள குறித்த தொழிற்சாலையானது சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

25 இலட்சம் பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலையானது தற்போது 5 பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு வேலைவாய்ப்பினை வழங்க உள்ளதுடன், அது விரிவாக்கப்பட்டதன் பின்னர் மேலும் சிலருக்கு வேலைவாய்ப்பு வழங்க கூடியதாக அமையும் என தெரிவிக்கப்படுகின்றது. தொழிற்சாலையின் ஊடாக மிளகாய்தூள், அரிசிமா, கோப்பி, சத்துமா உள்ளிட்ட உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு அவை சந்தைப்படுத்தப் படவுள்ளன. தொழிற்சாலையினை நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம் ஏ சுமந்திரன், எஸ் சிறிதரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

# குப்பை கொட்டுவதை தடுக்க நிறுவப்பட்ட நடராஜர் சிலை

யாழ். மாநகரில் நல்லூர் பாணாங்குளம் பகுதியில் குப்பை கொட்டுவதைத் தடுக்கும் நோக்குடன் நடராஜர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எனினும் சிலை வைக்கப்பட்ட பின்னரும் குப்பை வீசிப்படுவது நிறுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியில் நல்லூர் பாணாங்குளம் அமைந்துள்ளது. அதனைச் சூழ தொண்டு நிறுவனங்கள் உட்பட குடியிருப்புகள் உள்ளன.

இந்நிலையில் அந்தப் பகுதியில் வெளியில் இருந்து வரும் நபர்களால் குப்பைகள் போடப்படுவதாக பல தரப்பினரிடமும் முறையிடப்பட்டது. பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் அந்தப் பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதைத் தடுக்க முடியவில்லை.

# யாழ்ப்பாணத்தில் கலப்பட மதுபான உற்பத்தி, விற்பனை

யாழ்ப்பாணத்தில் சட்டத்துக்குப் புறம்பாக கலப்பட மதுபான உற்பத்தி செய்து விநியோகித்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனிப் பாணி, எதனோல், எசன்ஸ் உள்ளிட்டவை உள்ளீடுகளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கலப்பட மதுபானம் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது என்று மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் கலையகத்துக்கு அருகில் இயங்கி வரும் விடுதி ஒன்றிலேயே இந்த மதுபான உற்பத்தி நடைபெற்று வந்த நிலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கலப்பட மதுபானத்துக்கு பயன்படுத்தப்பட்ட எதனோல், சீனி, எசன்ஸ் மற்றும் கால் மற்றும் முழுப் போத்தல்கள், உபகரணங்கள் என்பவை யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உஜித் எம்.பி. லியனகேயின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஆர்.பிரதீப் தலைமையிலான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.



*(ஐங்கரன் சிவசாந்தன்)*

# வீடு புகுந்த கொள்ளை கும்பல்; சித்திரவதையில் வயோதிபர் பலி

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் வீடு புகுந்த கொள்ளை கும்பல் வயோதிப தம்பதிகளை கட்டி வைத்து சித்திரவதை புரிந்ததில் வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

தென்மராட்சி அல்லாரையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதில் சிவராசா (வயது72) என்ற வயோதிபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

வயோதிபத் தம்பதி வசிக்கும் வீட்டுக்குள் நள்ளிரவு வேளை புகுந்த மூவர் கொண்ட கொள்ளைக் கும்பல் அவர்கள் இருவரையும் கட்டிவைத்து துன்புறுத்தி, பணம் நகை என்பவற்றை கேட்டுள்ளனர்.அதில் வயோதிபரின் கழுத்தை நெரித்ததில் அவரது உயிர் பிரிந்துள்ளது.

அதனை அடுத்து வீட்டிலிருந்த ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டு கும்பல் தப்பித்துள்ளது.

# கொரோனா வைரஸ் பாதிப்பில் புலோலியில் ஒருவர் பலி

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பருத்தித்துறை சுகாதார பிரிவைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

புலோலி வட கிழக்கைச் சேர்ந்த 68 வயது நபரே உயிரிழந்தவராவார்.

இந் நபர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த மார்ச் 16ம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 4ம் திகதி அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, அவர் மேலதிக சிகிச்சைக்காக முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் மரமடைந்துள்ளார்.

# வனவள உத்தியோகத்தர் மீது தாக்குதல் முயற்சி

## பொலிஸில் முறைப்பாடு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு முறிப்பு காட்டுப்பகுதியில் சட்டவிரோத செயற்பாடு ஒன்று இடம்பெற்றுவருவதாக முள்ளியவளை வனவளத்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலுக்கமைவாக குறித்த பகுதிக்கு சென்றபோது அங்கு நில ஆக்கிரமிப்பு இடம்பெற்று வருகின்றமை தெரியவந்துள்ளதை தொடர்ந்து அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வனவளத்திணைக்கள உத்தியோகத்தர்கள் மீது நில ஆக்கிரமிப்பு காரர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சட்டவிரோத காடழிப்பு தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்

தமிழ், இந்து புதுவருடம் அதாவது பிலவ வருடம் நாளை பிறக்கின்றது. இந்தப் புதுவருடப் பிறப்பானது தமிழர்களின் காலக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது. புதுவருட தினத்தைச் சித்திரைப் புத்தாண்டு, தமிழ் வருடப் பிறப்பு என்று நாம் சிறப்புப் பண்டிகையாக, சம்பிரதாய சடங்குகளுடன் கொண்டாடுவது வழமையாகும்.

ஒவ்வொருவரதும் வாழ்வோடு ஒட்டிய காலக் கணிப்பின்படி வாழ வேண்டிய வழிகளை ஆண்டு தோறும் வகைப்படுத்தி, வழியமைத்துக் கொள்ள அடியெடுத்து வைக்கும் வருடத்தின் முதல் நாளாக சித்திரைப் புத்தாண்டு தினம் அமைகின்றது.

## தமிழரின் பண்டைய காலக் கணிப்பீடு

# புது வருடத்தின் ஆரம்பம் சித்திரை புத்தாண்டு



ஒவ்வொருவரதும் வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பது காலமாகும். காலத்தை கணித்துக் கொண்டு தம் செயலை நேரத்தில் ஆற்றுவது வாழ்வின் வெற்றிக்கு வழி செய்யும். காலத்தின் பெறுமதியைப் பலரும் வியந்து கூறியுள்ளது போன்று, அதை அனுசரித்து நடக்க வேண்டியதையும் வலியுறுத்தியுள்ளனர்.

காலத்தைக் கணிப்பிடும் பண்டுதொட்டு வரும் பண்பட்ட பெருமையை வெளிப்படுத்தும் புதுவருடப் பிறப்பில் தொக்கி நிற்கும் சிறப்புகளை நினைவிலிருத்தி பெருமையடைவோம்.

வாழ்க்கையென்பது ஒரு அளவைக் கொண்டது. பிறப்பு தொடக்கமென்றால் இறப்பு முடிவாயமைகின்றது. அதே போல் அனைத்துக்கும் ஒரு அளவுண்டு. அந்த வகையிலே தமிழர்கள் உலக இயக்கத்தை, இயற்கையை அளவிட்டு வைத்துள்ளார்கள். அதில் பொதிந்துள்ள உண்மைகள் நவீன விஞ்ஞான ஆய்வுகளையும் விஞ்சியவை.

ஆம், வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் என்பது போன்று வருடத்தில் முந்நூற்று அறுபத்தைந்தே கால் நாட்களும், வாரமொன்றில் ஏழு நாட்களும் நாளொன்றில் இருபத்துநான்கு மணித்தியாலங்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. அதே போல் ஒரு மணித்தியாலத்தில் அறுபது நிமிடங்களும், ஒரு நிமிடத்தில் அறுபது வினாடிகளும் உள்ளமை பொதுவாக யாவரும் அறிந்ததே.

நம்மைப் பொறுத்த வரை பொதுவான இக்கணிப்பீடுகளுக்கும் அப்பால் காலக் கணிப்பீடு ஆழமாகவும், விரிந்தும், பரந்தும் உள்ளது. அந்த அளவீட்டின் அடிப்படையில் அமைந்ததே சித்திரைப் புத்தாண்டு தினம்.





இந்துக்கள் தமது ஆறு சமயப் பிரிவுகளில் சூரிய பகவானை முதன்மையாகக் கொண்ட பிரிவாகச் சௌரத்தைக் குறிப்பிடுவர். சிவனை முதன்மையாகக் கொண்டது சைவம். அம்மனை முதன்மையாகக் கொண்டது சாக்தம். பிள்ளையாரை முதன்மையாகக் கொண்டது காணபத்தியம். முருகனை முதன்மையாகக் கொண்டது கௌமாரம். அதேபோல் திருமாலை முதன்மையாகக் கொண்டது. வைஷ்ணவம்.

இந்த வகையிலே சூரியனை முதன்மையாகக் கொண்ட சிறப்புத் தினங்களாகத் தைப் பொங்கல் தினமும், சித்திரைப் புத்தாண்டு தினமும் அமைகின்றன. இயற்கையின் இயக்கம் சூரியனை அடிப்படையாகக் கொண்டது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. காலநிலை மாற்றங்கள், இயற்கையின் செயற்பாடுகள் அனைத்தும் சூரியனைச் சார்ந்தவையே.

நமது கணிப்பின்படி தமிழ் இந்து வருடங்கள் அறுபது ஆகும். வாரத்தின் முதல் நாள் ஞாயிறாகவும் ஏழாம் நாள் சனியாகவும் அமைவது போன்று நமது அறுபது வருடங்களில் முதலாவது வருடம் 'பிரபவ' என்ற பெயர் கொண்டதாக இருப்பதுடன் அறுபதாவது வருடம் 'அட்சய' என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த அறுபது வருடங்களும் சுழற்சி முறையில் பெயர் பெறுகின்றன. இதன் அடிப்படையில் இந்த சித்திரைப் புத்தாண்டன்று பிறக்கும் வருடம் 'பிலவ' வருடம் என்று பெயர் பெறுகின்றது.

## பிலவ வருடம்

இந்துக்களின் காலக்கணிப்பீட்டின்படி சித்திரைப் புத்தாண்டு தினமே புதுவருடப் பிறப்பாக ஆண்டின் முதல் மாதமாக அமைகின்றது. நடைமுறையிலுள்ள ஆங்கில நாட்காட்டிகளுக்கு மாற்றமாக குறித்த ஆங்கில மாதத்தின் இடைப்பட்ட மத்திய நாளிலேயே தமிழ், இந்து மாதம் பிறக்கின்றது.

மலரும் 'பிலவ' வருடம் ஆண்டின் சுழற்சியின்படி முப்பத்துநான்காவது வருடமாகும். சூரியனின் ராசிகளுக்கிடையேயான பெயர்ச்சியின்படியாக கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்து பஞ்சாங்கத்தின்படி ராசிகள் பன்னிரண்டும், நட்சத்திரங்கள் இருபத்தியேழும் இடம்பெறுகின்றன. ராசிகளில் முதலாவதாக மேடமும் பன்னிரண்டாவதாக மீனமும் அமைகின்றன.

அதேபோல் நட்சத்திரங்கள் இருபத்தேழில் அச்சுவினி முதலாவதாகவும் இறுதியானது ரேவதியாகவும் அமைகின்றன.

புதுவருட தினத்தில் மீன ராசியிலிருந்து மேட ராசிக்கு சூரியன் பெயர்ச்சியடைகின்றது. அவ்வாறு பெயர்ச்சியடையும் நாளையே நாம் தமிழ் இந்து புதுவருட தினமாக, வருடத்தின் முதல் நாளாக கொள்கின்றோம், கொண்டாடுகின்றோம். மலரும் புத்தாண்டில் வாழ்வில் வளங்கள் பெருக வேண்டும், நிம்மதி நிலவ வேண்டும். உலகிலே அமைதி நிலவி, நோய் நொடிகளற்ற வாழ்வு மலர்ந்து நிலைபெற வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் நமது பாரம்பரிய சம்பிரதாயங்களை, சடங்குகளைக் கடைப்பிடித்து எதிர்காலத்தை எதிர் கொள்வோம்.



த. மனோகரன் ...
துணைத் தலைவர்,
அகில இலங்கை இந்துமாமன்றம்

# தமிழ், சிங்கள மக்கள் வாழ்வில் இன்றும் தொடரும் புத்தாண்டுப் பாரம்பரியங்கள்



தமிழ்ப் புத்தாண்டான 'பிலவ' வருடம் இன்று 14ஆம் திகதி உதயமாகின்றது. 60 வருட சுழற்சியில் இது 35ஆவது வருடமாகும்.

வானியல் தொடர்பான அத்தனை கணிப்புகளையும் தமிழர் அன்றே குறித்து வைத்திருந்தனர். அவை பஞ்சாங்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இன்று விஞ்ஞானிகள் கணிக்கின்ற சந்திரகிரகணம், சூரிய கிரகணம் போன்றவற்றை அன்றே தமிழர்கள் மிகவும் துல்லியமாகக் கணித்திருந்தனர். இன்றும் அவற்றை பஞ்சாங்கத்தில் காணலாம்.

பஞ்சாங்கத்தின்படிதான் தமிழர்கள் பிறப்பிலிருந்து இறப்பு வரை இடம்பெறும் சகல சடங்குகள், கிரியைகளையும் கணிப்பார்கள். நாமகர்ணம் எனப்படும் பெயர் வைப்பது தொடக்கம் திதி வரை அனைத்தும் பஞ்சாங்கத்தில்தான் பார்ப்பதுண்டு.

சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு சிங்கள பௌத்தர்களுக்கும் இலங்கையின் தமிழ் இந்துக்களுக்கும் மிக முக்கியமான பண்டிகையாகும். கிராமக் கோயில்களில் புத்தாண்டின் ஒவ்வொரு சடங்கையும் செய்வதற்கான சரியான புனித நேரத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காக கோயில் மணியின் சத்தம் ஒலிக்கச் செய்வதுண்டு.

புத்தாண்டுக்கு சில நாட்களுக்கு முன்னதாகவே வீடு வாசலை சுத்தம் செய்வதிலும் அலங்கரிப்பதிலும் தமிழர் மக்கள் ஈடுபடுவர்.



## காலச் சுழற்சியில் நிகழவிருக்கும் மாற்றங்களை முற்காலத்திலேயே எழுதி வைத்த தமிழர்கள்

மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் வெற்றிலை, பாக்கு, நெல் முதலான மங்கலப் பொருட்கள் கொண்ட தட்டை வழிபாட்டறையில் வைத்து அதை புத்தாண்டு அதிகாலையில் காண்பது புனிதமாகக் கருதப்படுகின்றது. புத்தாண்டு பிறக்கும் போது மருத்துநீர் தேய்த்து நீராடுவது பண்டைய காலத்தில் இருந்து தொடர்கின்ற வழக்கம் ஆகும். புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் நிகழும்.



வாழ்க்கை என்றாலே கசப்பும் இனிப்பும் கலந்தது தான். இப்புத்தாண்டிலும் கசப்பும் இனிப்பும் இருக்கும் என்பதன் அடையாளமாக வேப்பம்பூ பச்சடி, மாங்காய் பச்சடி என்பவற்றை உண்பது குறிப்பிடத்தக்க மரபாகும்.

புது வருட பிறப்பு நாளில் நல்ல செயல்களை மட்டுமே செய்ய வேண்டும். நேர்மறையாக பேசுங்கள், எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து விடுங்கள். கொரோனா பாதுகாப்பு காரணமாக மக்கள் தங்களது குடும்பத்தோடு வீட்டிற்குள் இருப்பதால் சுவையான சைவ உணவுகளை சமைத்து உண்டு, மகிழ்ந்திருத்தல் நல்லது. என்றும் ஒற்றுமையோடு இருக்க இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள்.

புத்தாண்டு பிறந்ததும் மக்கள் நல்ல நேரத்தில் தங்கள் வேலையைத் தொடங்குகிறார்கள். வேலையின் தன்மை அவர்களின் வயதைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. குழந்தைகள் தங்கள் பாடசாலை வேலையைத் தொடங்குகிறார்கள். வயதானவர்கள் தங்கள் தொழிலுக்கு ஏற்ப தங்கள் வேலையை அடையாள முறையில் தொடங்குகிறார்கள். கைவிசேசம் முக்கியமானதொரு சடங்காகக் கொள்ளப்படுகிறது. பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்ட காலத்தில்தான் பெரியோர்களிடமிருந்து கைவிசேடத்தைப் பெற்றுக் கொள்வது சிறப்பாகும்.

பெரியவர்கள் சிறு குழந்தைகளுக்கு தங்கள் ஆசீர்வாதங்களை வழங்குகிறார்கள். புத்தாண்டு காலத்தில் நெருங்கிய உறவினர்களைப் பார்க்க மக்கள் தொலைதூர இடங்களுக்குச் செல்வதுவும் வழக்கம். இது புத்தாண்டு தொடங்கிய ஒரு வாரத்திற்குப் பிறகும் நீடிக்கும்.

ஆனால் தற்போது கொரோனா அச்சுறுத்தல் நிலவுவதால் அது சாத்தியமில்லை.

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில், குறிப்பாக கிராமங்களில் மக்கள் புத்தாண்டுக்குப் பிறகு வேலைக்குச் செல்வதற்கான நல்ல நேரம் வரை காத்திருக்கிறார்கள்.

நகர்ப் புறங்களில் மக்கள் வேலைகளுக்கு புறப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை பின்பற்றுவது குறைவு.

புத்தாண்டு காலப் பகுதியில் கிராமங்களில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறுவது வழக்கம். முட்டிஉடைத்தல், தலையணைச் சமர், வழுக்கு மரம் ஏறுதல், கிடுகு இழைத்தல், யானைக்கு கண் வைத்தல், சாக்கு ஓட்டம் போன்றன குதுகலமாக நடைபெறும். பைசிக்கிள்ஓட்டம், மரதனோட்டம், படகு ஓட்டம், மிதிவண்டி ஓட்டம் என்பனவும் நடைபெறும்.

இப்படியாக இக்காலப் பகுதில் ஒரே குதூகலமும் உற்சாகமும் ததும்பி நிற்கும். பிலவ வருடம் அனைவருக்கும் வாழ்வில் மகிழ்ச்சியையும் சுபீட்சத்தையும் சேர்க்க வேண்டும் என்பதுதான் மக்களின் பிரார்த்தனை ஆகும்.

வி.ரி.சகாதேவராஜா ...

# விரோதங்கள் நீங்கி, நல்லுறவுகளை பலப்படுத்தும் சித்திரைப் புத்தாண்டு

அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்ட தொடரில் 34 ஆவது வருடமான புதிய மங்களகரமான பிலவ தமிழ்ப் புது வருடம் நாளை (சித்திரை 1ஆம் திகதி) புதன்கிழமை சுக்கிலபட்சம் துவிதியைத் திதி பரணி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் பிறக்கிறது.

வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 14ம் திகதி புதன்கிழமை அதிகாலை 01மணி 39 நிமிடத்திலும், திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14ம் திகதி புதன்கிழமை அதிகாலை 02மணி 31 நிமிடத்திலும் புதுவருடம் பிறக்கின்றது.

விஷுபுண்ணிய காலம் (மருத்துநீர் வைக்கும் நேரம்) வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 13ம் திகதி இரவு 09.39 முதல் அதிகாலை 05.39வரையும், திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 13ம் திகதி இரவு 10.33 முதல் அதிகாலை 06.33வரையும் ஆகும்.

## தமிழ் – சிங்கள மக்களின் பண்டைய இன உறவின் அடையாளப் பண்டிகை



இந்த புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் மருத்துநீர் தேய்த்து சிரசில் இலவம் இலையையும், காலில் விளா இலையையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விடயமாக புதுவருட தினத்தில் கருதப்படுகிறது.

இம்மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை நீரிலே கலந்து காய்ச்சப்படும். மருத்துநீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களை பெறலாம் என்பது நம்பிக்கை ஆகும்.

பிலவ ஆண்டு பிறக்கும் போது மேஷ ராசியில் ராஜகிரகமான சூரியன் உச்சம் பெற்றிருக்க கூடவே சுக்கிரன், சந்திரன் இணைந்துள்ளனர். ரிஷபத்தில் ராகு, மிதுனத்தில் செவ்வாய், விருச்சிகத்தில் கேது, மகரத்தில் சனி, கும்ப ராசியில் குரு மீன ராசியில் புதன் என கிரகங்கள் சஞ்சரிக்கின்றன.

எந்த மாதத்திலும் இல்லாத சிறப்பு சித்திரைக்கு மட்டும் உண்டு. சித்திரை முதல் நாளுக்கு உள்ள முக்கியமானதும் முதன்மையானதும் சிறப்பு சித்திரை வருடப் பிறப்பு.

ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் முதல் மே மாதம் 14 ஆம் நாள் வரை தமிழ் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும். இதனால் சித்திரை மாதம் முதல் நாளை உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் வருடப் பிறப்பாக, சிறப்பாக கொண்டாடுகின்றனர். இலங்கையில் தமிழ் சிங்கள மக்களால் கொண்டாடப்படும் பண்டிகையாக புதுவருடப் பிறப்பு இருப்பதால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.



புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது. சித்திரை மாதம் பிறந்ததுமே இளவேனில்காலம்' என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இது கருதப்படுகிறது.

ஐக்கியம், சமய, சமூக, கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப்படும் புதுவருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசி பெறுதல் என்பவைகளையும் நாம் கடைப்பிடிப்பது வழக்கம்.



புதுவருட தினத்தில் தான தருமங்கள் செய்வது வழக்கம். ஏழைகளுக்கு தானம் செய்ய வேண்டும். சித்திரை மாதத்தில் சூரியன் மேஷ ராசியில் மிகவும் உச்சமாக பிரகாசிப்பதால் அன்றைய தினம் பானகம், நீர், மோர், பருப்புவடை ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை கொண்ட உணவுகளை சமைத்து உண்பது நலம்.

உணவை விருந்தினருடன் உண்டு மகிழ்ந்தால் அந்த ஆண்டு முழுவதுமே குதூகலமாக இருக்கும் என்பது மக்களின் முக்கிய நம்பிக்கையாகும். இதற்காகவே விருந்தினர் வருகையும் விருந்தோம்பலும் நம் பாரம்பரியமாக மாறியது.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 14 புதன் முற்பகல் 09.09 முதல் 09.52 வரையும், மற்றும் பிற்பகல் 02.22 முதல் 04.11 வரை, 16ஆம் திகதி அதிகாலை 04.14 முதல் 05.07 வரை, 17ஆம் திகதி காலை 07.40 முதல் 09.00 மணி வரையான காலத்தில் கைவிசேடம் செய்தல் சிறப்பு.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14 புதன் முற்பகல் 06.15 முதல் 07.30 வரையும், மற்றும் பிற்பகல் 06.150 முதல் 07.00 வரை, 16ஆம் திகதி அதிகாலை 05.15 முதல் 06.00 வரை, 17ஆம் திகதி காலை 10.30 முதல் 11.40 மணி வரையான காலத்தில் கைவிசேடம் செய்தல் சிறப்பு.

நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவைகளில் வேலை செய்வோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக பணத்தை கைவிசேடமாக பெற்றுக் கொள்வார்கள். மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பண வரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

சித்திரைப் புதுவருடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக சிறப்புப் பெறுவதுடன் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

புத்தாண்டு பிறக்கும் செய்தியினை 'குயில்தன் குரலால் உலகறியச் செய்வதாக சிங்கள மக்களால் நம்பப்படுகின்றது. சிங்கள மக்கள் தமது சுபநேரத்தில் அரிசி இடித்து, அடுப்புக்கட்டி பலகாரம் சுடுவதுடன் புத்தாண்டை வரவேற்கின்றனர்.

அடுத்ததாக பழைய வருடத்திற்கான ஸ்நானம் இடம்பெறும். உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தும் நோக்கில் இடம்பெறும் இந்த குளியல் பழைய வருடத்திற்கான இறுதிக் குளியலாகும். புத்தாண்டுக்கான விசேட நீராடல் சிங்கள மக்கள் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

புத்தாண்டு பிறப்பதற்கு முன் எழுந்து மருந்து எண்ணெய் வைத்து நீராடுவார்கள். விகாரைக்கு சென்று வழிப்படுவர். புத்தாடை உடுத்தி, பால்சோறு சமைத்து, தின்பண்டங்கள் தயாரித்தலில் ஈடுபடுவர். அத்துடன் பலகாரம், வாழைப்பழம் மற்றும் தின்பண்டங்களும் வைத்து படையல் இடுவார்கள். இப்படையலில் முக்கியமாக பால்சோறு இருக்கும்.

நல்ல நேரத்தில் குத்துவிளக்கேற்றி, ஊதுவர்த்தி கொழுத்தி, சாம்பிராணி புகை பிடிப்பர். குடும்பத்துடன் உணவு பரிமாறி உண்பர். அயலவர்களிடமும் உணவு பரிமாறிக் கொள்வர். பெரியோரை மதித்து வணங்குவர். அத்துடன் கைவிசேடம் பெறுவர். புண்ணிய காலம் என்று குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு முன்பாக கொடுக்கல் வாங்கல்கள் செய்வர்.

சம்பிரதாயத்திற்காக தத்தமது வேலை/ தொழில் செய்வர். பின்னர் அநேகமானோர் விகாரைகளுக்கு 'பன' (பௌத்த உரை) கேட்பதற்காகவும் வேறு விசேட நிகழ்வுகளுக்காகவும் செல்வர். புண்ணிய காலம் முடிந்த பிறகு, புத்தாண்டு கலாசார மற்றும் விநோத விளையாட்டுப் போட்டிகளை நடத்துவர்.

சிங்கள பௌத்தர்கள் சித்திரைப் புத்தாண்டை பகைமை ஒழிப்புக்கான சிறந்த வாய்ப்பாக உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கத்தில் இருந்து வருகின்றது. நீண்ட காலமாக பகைமை கொண்டிருந்த நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை பார்க்கச் சென்று பகைமை தீர்த்துக் கொள்ளப்படும்.

இம்முறை கொரோனாவின் பிடியால் இவை சாத்தியமற்றவையாகும். எனினும் சுகாதார வழிமுறைகளுடன் நாட்டின் முக்கிய பகுதிகளில் கலை, கலாசார, இசை நிகழ்ச்சிகளுடன் சித்திரைப் புதுவருடம் கொண்டாடப்படுகின்றது. பிறக்கவிருக்கும் பிலவ வருடம் எல்லோருக்கும் சுபிட்சம் தரும் ஆண்டாகவும், தொட்டது துலங்கும் ஆண்டாகவும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

ஆர். நடராஜன்...

# மகிழ்ச்சி தரும் வசந்த காலத்தின் ஆரம்பம் தமிழ் - சிங்கள புத்தாண்டு

சித்திரைப் புதுவருடம் நாளை மலருகிறது. நவக்கிரக நாயகர்களுள் முதல்வரான சூரிய பகவானின் இராசி மண்டலப் பிரவேசமே ஒவ்வொரு தமிழ் மாதங்களினதும் ஆரம்பமாக அமைகிறது. அதாவது பன்னிரு இராசிகளுள் முதலாவதான மேட இராசியில் சூரிய பகவான் பிரவேசிக்கும் போது, பன்னிரு மாதங்களுள் முதலாவதான சித்திரை பிறக்கிறது. இராசிப் பிரவேச நேரமே, புதுவருடப் பிறப்பாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் சித்திரைப் புதுவருடம் இரு இனத்தினருக்கு மட்டுல்ல, இரு மத்தினருக்கும் உரிய ஒரு பண்டிகையாக அமைந்திருப்பது சிறப்புக்குரியது. இந்த வகையில் இதனை தமிழ் – சிங்கள புதுவருடம் எனக் குறிப்பிட்டாலும், தமிழ் இந்து மக்களும், சிங்கள பௌத்த மக்களுமே இந்தப் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். வேறுபட்ட மதம் சார்ந்த, மொழிபேசும் இரு இன மக்கள் இணைந்து பண்டிகையொன்றை கொண்டாடுவது உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.


எனவே, சித்திரைப் புதுவருடம் இலங்கையில் தேசியப் பெருவிழாவாக முக்கியத்துவம் பெறும் அதேவேளையில், தமிழ் – சிங்கள மக்களின் இன ஐக்கியம், சமய சமூக கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருப்பதையும் குறிப்பிட வேண்டும்.

இந்த சித்திரைப் புதுவருடப் பிறப்பின் போது தமிழ் – சிங்கள மக்கள் வெவ்வேறு பாரம்பரிய சமய அனுட்டான முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்து மக்கள் புதுவருடப் பிறப்பன்று விஷு புண்ணியகாலத்தில் தலைக்கு மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது வழக்கம். புதுவருடத்தின் முதற் கருமமாகவும் அமைகிறது. புதுவருடம் பிறந்த பின்னர் வரும் குறிப்பிட்ட சுப நாளன்று, சுப நேரத்தில் தலைக்கு எண்ணெய் வைத்து ஆ சிபெறுவது பௌத்த மக்களது பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு



வருவதுடன், அதுவே அவர்களது புதுவருடத்தின் ஆரம்பக் கருமமாகவும் இருக்கிறது. இந்து, பௌத்த இன மக்கள் மத்தியில் இன்னமும் வழக்கொழியாது சித்திரைப் புதுவருட கலாசார பாரம்பரியங்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



சித்திரைப் புதுவருடப் பிறப்பு என்பது மங்களகரமான ஒரு நிகழ்வாகும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு அமைய புதிய விஷயங்களையும் எதிர்பார்ப்புகளையும் வைத்து புதுவருடம் வரவேற்கப்படுகிறது. ஒவ்வொரு இந்து மக்களும் தங்கள் வீடுகளில் நிறைகுடம் என்று சொல்லப்படும் பூரண கும்பம் வைப்பது பாரம்பரிய வழக்கமாகும். விஷு புண்ணிய காலத்தில் தலைக்கு மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்த பின், பஞ்சாங்கங்களில் சொல்லப்பட்டிருக்கும் நிறத்திலான ஆடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்வதும், தாய் தந்தையர் குரு, பெரியோர் முதலானவர்களை வணங்கி அவர்களது ஆசியைப் பெறுவதும், தான தருமங்களைச் செய்வதும் சுபநேரத்தில் கைவிசேடம் பரிமாறிக் கொள்வதும் உறவினர்கள் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வதும், சுப தினங்கள் பார்த்து புதுக் கருமங்களை தொடங்குவதும் புதுவருடப் பிறப்பின் பின்னரான சிறப்புக் கருமங்களாகும். சித்திரைப் புதுவருடம் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கிராமிய விழாவாகவும் சிறப்புப் பெறுகிறது. தமிழ் மக்களது கொண்டாட்ட செயற்பாடுகளும் இடத்துக்கிடம் மாறுபடுகிறது.

அதாவது இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் அந்தந்த பிரதேசங்களின் கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நிகழ்வகளும், கொண்டாட்ட நடைமுறைகளும் வேறுபட்டு இருப்பதை காண முடிகிறது. இலங்கையின் வடபகுதியை குறிப்பாக யாழ். குடாநாட்டை எடுத்துக் கொண்டால், பொதுவாக அனைத்து பிரதேசங்களிலும் புதுவருடக் கொண்டாட்ட செயற்பாடுகள் ஒரே மாதிரியானதாகவே அமைந்திருப்பதைக் காணலாம். இங்கு போர்த் தேங்காய் அடித்தல் பாரம்பரியமான ஒரு விளையாட்டாக இருக்கிறது. இளைஞர்கள் கலந்து கொள்ளும் இந்த விளையாட்டு பெரும்பாலும் கோயில் வீதிகளில் அல்லது பொது இடத்தில் நடைபெறுவதுண்டு. புதுவருடப் பிறப்புக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே கைக்கு அளவான சிறிய தேங்காய்களை இதற்காக சேகரிக்கத் தொடங்கிவிடுவார்கள். ஒரு தேங்காயை நிலத்தில் வைத்து, இன்னொரு தேங்காய்கொண்டு கையால் சிதறடிப்பதே இந்த விளையாட்டாகும். இதற்காகப் பயன்படுத்தப்படும் தேங்காயை 'கையான்'என்று சொல்வதுண்டு. இப்போது போர்த்தேங்காய் அடிக்கும் விளையாட்டு வெகுவாகக் குறைந்து விட்ட போதிலும், சில கிராமப் பகுதிகளில் நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது.



யாழ். குடாநாட்டில் இன்னொரு பாரம்பரிய போட்டி நிகழ்வாக கோழிச்சண்டை அமைந்திருக்கிறது. சண்டை செய்வதற்கென்றே சேவல்கள் வளர்க்கப்பட்டு வந்தன. இதுவும் இப்போது குறையத் தொடங்கி விட்டது. இங்குள்ள கிராமிய விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் என்பனவற்றில் புதுவருட தினத்தன்று அல்லது அடுத்தடுத்த தினங்களில் மாலை வேளைகளின் போது இத்தகைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்துவது வழக்கம். இளைஞர்கள் கலந்து கொள்ளும் கிளித்தட்டு, சடுகுடு, கோலாட்டம் போன்றவைகளுடன், ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுகளும் புதுவருட சிறப்பு அம்சங்களாக இடம்பெற்று வருகின்றன. காலமாற்றத்துக்கு அமைய இப்போது உதைபந்தாட்டம், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளும் புதுவருட கொண்டாட்ட சிறப்பு நிகழ்வுகளுடன் இணைந்து கொண்டுள்ளன.

சித்திரைப் புதுவருடத்துடன் இணைந்து இளவேனில் எனப்படும் வசந்த காலம் ஆரம்பமாவதால், வாழ்க்கையில் மகிழ்ச்சியும் எழுச்சியும் தரும் குதூகலமான பருவகாலத்தின் தொடக்கமாக இது அமைகிறது.

ஏ.கே...

# கண்டி, கம்பளை நகரங்களில் களைகட்டும் புத்தாண்டு



**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கண்டி, கம்பளை நகரங்களில் மக்கள் புதிய ஆடைகளையும் புது வருடப்பிறப்பினை முன்னிட்டு உணவுப்பொருட்களை வாங்குவதற்கு வீதிகளில் நிறைந்து காணப்படுகின்றனர்.

கடந்த வருடம் புத்தாண்டை கொண்டாட முடியாத காரணத்தால் இம் முறை தமிழ், சிங்கள புத்தாண்டை சிறப்பாக கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வருகின்றனர். கொவிட்19 தொற்று காரணமாக அரசாங்கமும் சுகாதார பிரிவினரும் அறிவுரை வழங்கிய போதிலும் ஒரு மீட்டர் தூரத்தை விட்டு ஒரு அங்குலம் இடைவெளியை கூட பின்பற்றாமல் நகரங்களில் மக்கள் பொருட்கள் வாங்குவதை காணமுடிகிறது. நகரங்களில் போக்குவரத்து பொலிசார் வாகன நெரிசலை கட்டுப்படுத்த முடிந்த போதிலும் சன நெரிசலை கடுப்படுத்த முடியாமலுள்ளது. அத்தோடு வாகன நெரிசல் வழமைக்கு மாறாக அதிகளவு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட நால்வர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளினை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நான்கு பேரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர் வரும் 16 ஆம் தி கதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் அநுராதபுரம் நீராவிய பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் அநுராதபுரம் திசாவெவ மற்றும் பழைய நகரம் பகுதியில் 03 ஆம் தி கதி மாலை நடாத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்களை கைது செய்துள்ளது டன் நான்கு கிராமிற்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருற்களையும் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் கைப்பற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தென் மாகாணத்தில்;

# தமிழ் சிங்கள புத்தாண்டு களை கட்டியுள்ளது

## சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார பிரிவினர் எச்சரிக்கை

**(வெலிகமதினகரன் நிருபர்)**

தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி மாத்தறை மாவட்ட சகல பகுதிகளிலும் வியாபாரம் கலை கட்டியுள்ளது.

ஆடை விற்பனை நிலையங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள், பாதணி விற்பனை நிலையங்கள் என பல்வேறு விற்பனை நிலையங்களில் வாடிக்கையாளர்கள் பொருட்களை கொள்வனவுசெய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்கு மேலதிகமாக வீதியோரம் எங்கும் அங்காடி வியாபாரங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனினும், சுகாதார வழிமுறைகளை பூரணமாகப் பேணி நடந்து கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் சகலரையும் வேண்டிக் கொள்கின்றனர்.

மேலும் கடும் உஷ்ணம் இப் பகுதிகளில் நிலவிவருவதால் அடிக்கடிநீர் அருந்திக் கொள்ளுமாறும் வெயிலில் நடமாடுவதை இயன்றளவு குறைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

கடந்தவருடம் கொரோனா தொற்று காரணமாக தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டை கொண்டாட வாய்ப்பு கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே இம்முறைஅதிகளவுஆர்வம் கொண்டு புத்தாண்டை சுகாதார வழிமுறைகளை பின்பற்றி கொண்டாட மக்கள் தயாராகி வருகின்றனர். நகரத்துக்குவரும் வாடிக்கையாளர்கள் அவதானமாக இருக்கும் படியும் பொலிஸார் வேண்டிக் கொள்கின்றனர்.


afc தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.01.2020 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 28.04.2021 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி மற்றும் வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட

ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:
722, கோட்டை வீதிஇராஜகிரிய
28.04.2021

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600



திகதி 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4454
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,411,520.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 6 3 9 2 2 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,876,440.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2749
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,332,380.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 16 19 59 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,728,276.40

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 330
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,154,580.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 14 23 24 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 491
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,223,840.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 32 43 65 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,902,915.20

தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 34
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,215,280.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 32 42 60 90
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 7,196,614.80

11.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 686,483
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு. 27,337,600.00
ரு. 2,000,000.00 பரிசுகள் 01 ரு. 1,000,000.00 பரிசுகள் 01 ரு. 100,000.00 பரிசுகள் 30

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


# வடமேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்த்தல்

| சேவை வகுதி மற்றும் பதவி | கல்வித் தகைமைகள் மற்றும் வயதெல்லை | | சம்பள அளவு | ஆட்சேர்க்கப்படும் முறை |
|---|---|---|---|---|
| | வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் | | |
| **சேவை வகுதி**<br>முகாமைத்து உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத<br><br>**பதவிகள்:**<br>1. நடமாடும் பரிசோதகர் - 04<br>2. சாரதி போதனாசிரியர் - 02<br>3. முகாமைத்துவ உதவியாளர் - 06 | க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் சிங்களம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>க.பொ.த. (உ.தரப்) பரீட்சையில் ஆகக் குறைந்தது 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (சாதாரண பொதுப் பரீட்சை தவிர)<br><br>**முகாமைத்துவ உதவியாளர்**<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத கணனி கற்கை நெறியொன்றைக் கற்று சித்தியடைந்திருத்தல்<br><br>**சாரதி போதனாசிரியர்**<br>கனரக வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்படும் சாரதி போதனை அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல், அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சாரதி போதனையாளராக ஒரு வருட அனுபவம்<br><br>**வயது:**<br>18 வயதுக்குக் குறையாத 45 வயதுக்கு மேற்படாதவர்கள் | க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் சிங்களம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>கணனி சொல்லாக்கம் தயாரித்தல் தொடர்பில் மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான மட்டத்தில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்<br><br>ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.<br><br>உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது. | 13450 – 10x45 – 7x170 – 4x240 – 20x320 – 23450<br><br>2016.01.01ஆம் திகதி முதல் 2020.01.01ஆம் திகதி வரை திருத்தப்பட்ட சம்பளம் வழங்கப்படும். | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் அல்லது திறந்த போட்டிப் பரீட்சையொன்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுக்கிடையில் திறமை வரிசைக் கிரமத்தின் பிரகாரம் தேர்வுகள் இடம்பெறும்.<br><br>இயைபுடைய அனுபவம் 30<br>இயைபுடைய மேலதிக கல்வி தொழில்சார் தகைமை 30<br>ஏனைய வினைத் திறன் மற்றும் திறமைகள் 15<br>நேர்முகப் பரீட்சையின் போதான வினைத்திறன் 25<br>**100** |

2. மேற்படி பதவிகளுக்காக தரப்பட்டுள்ள தகைமைகளுக்குப் புறம்பாக பின்வரும் பொது தகைமைகளையும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   i. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
   ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   iii. நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
3. சகல நியமனங்களும் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துடைமை சகிதம்.
4. பதவிகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 2021-04-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் தலைவர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, நீர்கொழும்பு வீதி, ஹால்பார சந்தி, போயகனே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய பதவிக்கு ஆட்சேர்த்தல் எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். காணாமல் போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் அதிகாரசபை பொறுப்புகூற மாட்டாது.

**தலைவர்,**
**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,**
**வடமேல் மாகாணம்.**

| அலுவலகப் பயன்பாட்டிற்கு |
|---|
| |

**.................................................. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவம்**

1) முழுப் பெயர் :..........................................
   I. முதலெழுத்துக்களுடன் பெயர் :..........................................
   II. ஆளடையாள அட்டை இலக்கம் :..........................................
2) பிறந்த திகதி :..........................................
3) முகவரி :..........................................
4) தொலைபேசி இலக்கம் :..........................................
5) விவாக நிலை :..........................................
6) மாவட்டம் :..........................................
7) பிரதேச செயலாளர் பிரிவு :..........................................
8) கிராம சேவையாளர் பிரிவு :..........................................
9) I. கல்வித் தகைமைகள் :..........................................
   ..........................................
   II. அனுபவம் :..........................................

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவு மற்றும் விசுவாசத்தின் படி உண்மையானவை என இத்தால் சான்று பகர்கின்றேன்.

.......................................... ..........................................
திகதி கையொப்பம்

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு

**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பரிந்துரை:**

திரு/ திருமதி .......................................... என்பவர் .......................................... ஆம் திகதி முதல் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் .......................................... என்பவராக சேவையாற்றுகின்றார் எனவும் அவரது வேலை, நடத்தை, வருகை என்பன திருப்திகரமாகவுள்ளது எனவும் கடந்த ஐந்து வருடங்களினுள் அனைத்து சம்பள உயர்வுகளைப் பெற்றுள்ளார் எனவும் சான்றளிக்கின்றேன்/ விண்ணப்பப்படிவத்தை பரிந்துரைக்கின்றேன்.


**தலைவர் / பொது முகாமையாளர்,**
**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,**
**வடமேல் மாகாணம்.**

# கிழக்கின் குரல்



# எமது சமூகத்தின் செயற்பாடே சஹ்ரான்குழு உருவாக காரணம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி



கூலிக்கு அமர்த்தபட்ட சஹ்ரான் குழு எமது சமூகத்தின் செயற்பாட்டினால் தான் உருவானதை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மருதமுனையைச் சேர்ந்த மர்ஹூம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்களது கல்வி சமூக சமய அரசியல் மற்றும் கலாசார பணிகளை புதிய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் சட்டத்தரணி றுடானி ஸாஹிரால் தொகுக்கப்பட்ட 'அபுல் கலாம் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மௌலானா வாழ்வும் பணியும் (1920-2013)' நூல் சனிக்கிழமை (10) மருதமுனை, பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதிதியாக கலந்து கொண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கூலிக்கு அமர்த்தபட்ட சஹ்ரான் குழு எமது சமூகத்தின் செயற்பாட்டினால் தான் உருவானதை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது உள் விவகாரங்களை பற்றி பேச வேண்டும். எமது உள்விவகாரங்களில் உள்ள விமர்சனங்களை பற்றி பேசப்போனால் எத்தனை மணித்தியாலம் எடுக்குமோ தெரியாது. அதாவது ஏராளமான உள்முரண்பாடுகளுடன் வாழ்ந்து வருகின்றோம். புரிந்துணர்வும் சகிப்பு தன்மையும் எம்மிடையே இல்லாமல் போவதை காண்கின்றோம். ஒரு கும்பல் செய்த செயலையே இந்த நாடு பேசிக் கொண்டிருக்கின்றது என்றார்.

இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவரும், தேசிய கல்வி நிருவக பேரவை உறுப்பினருமான பேராசிரியர், கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் முஷரப் முதுநபின், முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா, கல்முனை மாநகர சபை முதல்வர் ஏ.எம். றக்கிப், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ஏ.பி.எம். அஷ்ரப் (நளிமி) உட்பட சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகள், பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**பாறுக் ஷிஹான்**

# சம்மாந்துறையில் மர நடுகைத் திட்டம்



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

சம்மாந்துறை, சமூக உதவி மற்றும் திட்டமிடலுக்கான அமைப்பினால் (இஸாஸ்) ஏற்பாடு செய்யப்பட்ட 'பள்ளிவாசல்களை பசுமைப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளிலான பலன்தரு மரங்களை நடும் திட்டம் நேற்றுமுன்தினம் (11) சம்மாந்துறை பத்ர் (ஹிஜ்ரா) ஜூம்மா பள்ளிவாசலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட பகுப்பாய்வாளர் அஸ்மி யாஸீன், பத்ர் (ஹிஜ்ரா) ஜூம்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.எம்.எம் அப்துல் கபூர், பள்ளிவாசல் செயலாளர் ஏ.எல் பைஸாட் மற்றும் இஸாஸ் அமைப்பின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட பகுப்பாய்வாளர் அஸ்மி யாஸீனிடம் குறித்த அமைப்பினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய பள்ளிவாசல்களுக்கான மரங்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் கடந்த மூன்று மாதங்களில் 160 பேர் கைது

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் போதைப் பொருட்களை வைத்திருந்த மற்றும் விற்பனை செய்த 160 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மதுவரி திணைக்கள மாவட்ட பொறுப்பதிகாரி நிக்சன் அவுஸ்கோன் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு, கோடா, கஞ்சா மற்றும் கசிப்பு தயாரிக்க பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவற்றுடனேயே இவர்கள் கைதாகியுள்ளனர். வவுணதீவு, வாகரை, கொக்கடிச்சோலை உட்பட பல பகுதிகளில் இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

போதைப் பொருட்களை ஒழிக்கும் நடவடிக்கையினை மாவட்ட மதுவரி திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொணடு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



மூதூர் அல் அக்ஸா பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை மூதூர் தக்வாநகர் அல்ஹிலால் மத்திய கல்லூரி மைதான வீதியில் நடைபெற்றது. இதன்போது மரக்கன்றுகள், பழ வகைகள், சிறுவர் உணவுவகைகள் விற்பனை செய்யப்படுவதை காணலாம். (படம்: தோப்பூர் குறூப் நிருபர்)

# வீதிகளில் குப்பை வீசுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல். அமானுல்லாஹ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் அன்றாடம் பிரதேச சபையினால் வீதி வீதியாகச் சென்று குப்பைகள் அகற்றப்படுகின்றன. இதனை சிலர் உதாசீனம் செய்து வீதிகளில் வீசி வருகின்றார்கள். இதனால் அப் பிரதேசங்களில் சுகாதாரத்திற்கு பங்கம் விளைப்பதோடு, டெங்கு நுளம்பு பெருகக் கூடிய அபாயமும் தோன்றியுள்ளது.

குப்பைகளை அகற்றிய பின்னர் மீண்டும் குறிப்பாக வியாபாரிகள் வீதிகளில் அங்கும் இங்கும் குப்பைகள் வீசுகின்றனர்.

குறித்த இடங்களில் குப்பைகளை சேகரிப்பதற்கான குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளதாகவும், கழிவுப் பொருட்களை இதில் இடுமாறும், அவர் கேட்டுள்ளார்.

வியாபார நிலையங்களில் சேருகின்ற குப்பை கூழங்களை ஒரு இடத்தில் சேமித்து வைத்து பாதுகாப்பான முறையில் அகற்றவும்.

அத்தோடு, அட்டாளைச்சேனை பிரதேசத்தை பொலித்தீன் பாவனையற்ற பிரதேசமாக மாற்றியமைப்பதற்கு அதற்கான செயற்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இவை நடைமுறைப்படுத்தப்படுமெனவும், தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# தோப்பூரில் நீர் துண்டிப்பு; பிரதேச மக்கள் அசௌகரியம்

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபைக்குட்பட்ட தோப்பூர் நீர்த்தாங்கியிலிருந்து நீர் வழங்கும் பிரதேசங்களுக்கு இரண்டு நாட்கள் நீர் வழங்குவதோடு, இரண்டு நாள் நீர் வெட்டு அமுல்படுத்துவதால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நீர் வழங்கல் அதிகாரிகள் இது தொடர்பாக தெரிவிக்கும் போது வரட்சி காரணமாக இவ்வாறு சுழற்சி முறையில் நீர் துண்டிப்பு மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

ஆனால், அனைத்துப் பிரதேசத்திற்கும் நீரை வழங்கும் 64 ஆம் கட்டை நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நீரைப் பெறும் அயற் கிராமமான மூதூர் பிரதேசத்திற்கு தொடர்ச்சியாக நீர் வழங்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தை அளிப்பதாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வரட்சி காரணமாக நீர் துண்டிப்பு மேற்கொள்வதாயின் அனைத்துப் பிரதேசத்திலுமே நீர் வெட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் ஒரு பிரதேசத்திற்கு நீரினை தொடர்ச்சியாக வழங்கி ஒரு பிரதேசத்திற்கு நீர் துண்டிப்பை மேற் கொள்வது அநீதியான செயலென பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஆராய்ந்த போது மூதூர் நீர்த்தாங்கி 15 இலட்சம் கொள்ளளவு கொண்டதாகவும் இது நிரம்புவதற்கு 3 மணி நேரம் மட்டுமே எடுப்பதாகவும் அதனால் மூதூர் பிரதேசங்களுக்கு தொடர்ச்சியாக நீர் வழங்கப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

அதேவேளை, தோப்பூர் நீர்த்தாங்கி 10 இலட்சம் லீற்றர் கொள்ளளவு கொண்டதாகவும் இது நிரம்புவதற்கு 10 மணி நேரம் தேவைப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

# பேரீச்சம் பழம் பகிர்ந்தளிப்பு



(றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்ளுக்கு விநியோகிப்பதற்காக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கிண்ணியா மஸ்ஜிதுல் நபவி ஜும்ஆப் பள்ளிவாசலில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம். அஸ்ரபின் ஏற்பாட்டில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூதூர் தொகுதி செயற்பாட்டாளர் சதாத் மற்றும் கிண்ணியா பிரதேச செயலாளர் ஹனி உள்ளிட்டவர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# மட்டக்களப்பில் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு

(கல்லடி குறூப் நிருபர்)

நாட்டைக் கட்டியெழுப்பின் சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் வேலைத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக கடந்த ஒரு வருட காலமாக பட்டதாரிப் பயிலுனர்களாக பயிற்சிகளை மேற்கொண்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு, பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், நியமனதாரிகளுக்கான நியமனங்களையும் வழங்கிவைத்தார்.

பொது நிருவாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 201 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில், இவர்களை மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளின் ஆளணி தேவையின் நிமிர்த்தம் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# தந்தையை இழந்த 300 சிறார்களுக்கு புதிய உடைகள்

(காரைதீவு குறூப் நிருபர்)



மட். புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் சமூக நலன்புரி அமைப்பினர் மாவட்டத்தில் தந்தையை இழந்த 300 ஏழை மாணவர்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புதிய உடைகளை திருப்பழுகாமத்தில் வைத்து வழங்கி வைத்தனர்.

குறித்த சமூக நலன்புரி அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் தந்தையை இழந்து வாழும் 300 ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவும் திட்டம் ஒன்றை கடந்த ஆண்டில் ஆரம்பித்து நடைமுறைப் படுத்தி வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் வாழும் அன்பர்களின் நன்கொடைகள் மூலமாக தந்தையை இழந்த 300 ஏழை மாணவர்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புதிய உடைகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இவ் அமைப்பின் தலைவர் வே.பாஸ்கரன் தலைமையில் திருப்பழுகாமத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் அதிதிகளாக போரதீவுப் பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ்.கமல்ராஜ் அபிவிருத்தி இணைப்பாளர் எஸ். கலைச்செல்வன் ஆகியோருடன் இந் நிறுவன நிருவாகிகளும் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் சமூக நலன்புரி அமைப்பு 1996ஆம் ஆண்டு திருப்பழுகாமத்தினை சேர்ந்த சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரான திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ் அமைப்பானது கடந்த 25ஆண்டுகளாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறுபட்ட மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# களுதாவளையில் உழுந்து பயிர் செய்கை அறிமுகமும் பீற்றூட் அறுவடை நிகழ்வும்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் சௌபாக்கியா விவசாய அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையில் உழுந்து பயிர்ச் செய்கை அறிமுக விழிபூட்டல் நிகழ்வும் பீற்றூட் அறுவடை விழாவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளையில் சனிக்கிழமை (10) நடைபெற்றது.

களுதாவளை விவசாய போதானாசிரியர் பொ.சிறிபவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன், உதவி விவசாய பணிப்பாளர் ரி.மேகராஜா, களுதாவளை தேசிய பாடசாலையின் அதிபர் க.சத்தியமோகன், களுவாஞ்சிகுடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில், விவசாயிகளுக்கு உழுந்து பயிர்ச் செய்கை அறிமுக விழிபூட்டல் நிகழ்வு இடம்பெற்றதோடு, களுதாவளையில் செய்கை பண்ணப்பட்டிருந்த பீற்றூட் அறுவடையும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




# இ.தொ.கா தலைவர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தேர்வு செய்யும் சாதாரண பதவியல்ல

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் பதவியென்பது, தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது தெரிவு செய்யக்கூடிய சாதாரண பதவியல்ல என்று அக்கட்சியின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தனியார்த் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற நேரடி அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டிருந்த செந்தில் தொண்டமானிடம், இ.தொ.காவின் தலைவர் யாரென்ற கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. இதற்கான முழுமையான பதிலை வழங்க, அந்நிகழ்ச்சியில் போதுமான நேர அவகாசம் இருக்காத நிலையில், அது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனும் ஸ்தாபனம், பல அடக்குமுறைகள், சதிகள், துரோகங்களை வென்றே இன்று வரை செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முழு அதிகாரம், கட்சியின் தேசிய சபைக்கே இருக்கிறது.

இவ்வாறான நிலையில், இ.தொ.காவின் தலைவர் யாரென சமீப காலமாகத் தொடர்ந்து என்னிடம் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்த போதே, இது, கட்சியின் தேசிய சபையினால் முடிவு செய்யப்பட வேண்டிய விடயம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறு தேசிய சபை கூடாதிருக்கும் நிலையில் கட்சியின் தலைவர் யாரெனத் தொடர்ந்து கேட்டு வருவது அவர்களின் நிகழ்ச்சி நிரலாகவே உள்ளதா எனும் கேள்வி எழுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எனும் பதவி, கட்சியின் மிக முக்கியமான பொறுப்பாகும். அதனை, ஜீவன் தொண்டமான் வகிக்கிறார். அந்தப் பதவியைப் போன்று மிக சக்திவாய்ந்த பதவிதான் தலைவர் பொறுப்பாகும். அந்த வகையில், தேசிய சபை தேர்ந்தெடுக்கும் பட்சத்திலும் காலி முதல் மொனராகலை வரையிலான அடிமட்டத் தொண்டர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திறமையான நபர், கட்சியின் தலைவராக, கண்டிப்பாக ஒரு நாள் தேர்ந்தெடுக்கப்படுவார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திகாம்பரமா என்று, அக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரிடம் நான் கேட்டால், அவருடைய பதில் என்னவாக இருக்குமோ, அவ்வாறே நானும் பதில் வழங்கியுள்ளேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் என்பதை, இலங்கையில் உள்ள அனைவரும் அறிவார்கள். இவ்வாறு இருக்கும் பட்சத்தில், அவர் அவ்வாறான கேள்வியொன்றை எழுப்புவது, வேலுகுமாரின் அரசியல் அறியாமையையே புலப்படுத்துகிறது.



காங்கிரஸ் என்பது, ஒரு கூட்டுச் செயற்பாடாகும். அதிலுள்ள அனைவரையும், அமரர் ஆறுமுகன் தொண்டமான், தலைவர்களாகத்தான் உருவாக்கி இருக்கிறார். அதனால், அனைவராலும் ஏற்றுக் கொள்ளும் ஆளுமைமிக்க நபரொருவர், கண்டிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என, செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ், சிங்கள மக்களின் ஐக்கியம் மேலோங்க வேண்டும்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

தமிழ், சிங்கள மக்களிடையே ஆரம்பகாலம் தொட்டு இருந்து வரும் சமயம் மற்றும் கலை, கலாசார விடயங்களில் இருந்து வரும் ஒற்றுமை, ஐக்கியம் தொடர்ந்தும் மேலோங்க வேண்டும்.

அவ்வாறான ஆரோக்கியமான சூழலுக்கு மென் மேலும் மெருகூட்டும் வகையில் தமிழ், சிங்கள புத்தாண்டு இருந்து வருகின்றது என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,...

பெருந்தோட்டத் தொழில் துறைசார் மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பல்வேறு விடயங்களில் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். அப்பாதிப்புக்கள் அனைத்தும் இப்புத்தாண்டுடன் நீங்கப் பெற்று அவர்கள் வாழ்வில் சுபீட்சம் நிலவக்கூடிய ஆரோக்கிய நிலை உருவாகியுள்ளது. அதற்கான சமிக்ஞைகளும் தென்படுகின்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நீண்டகால எதிர்ப்பார்ப்பான ஆயிரம் ரூபா தினச் சம்பள உயர்வு கோரிக்கைக்கும் தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது. புத்தாண்டிற்கு முன் அச் சம்பள உயர்வும் தொழிலாளர்களுக்கு கிடைக்கவுள்ளது. இந் நல்ல செய்தியுடன் தொடர்ந்து எம்மக்களுக்கு நல்லதே நடக்கும். அதற்கான ஆரம்பமாக ஆயிரம் ரூபா தினச் சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. அதைத் தொடர்ந்து எம்மக்கள் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்குமென்ற பலத்த எதிர்பார்ப்புடன் இப் புத்தாண்டை நாம் எதிர்கொள்வோம்.



## பொலிஸ் கான்ஸ்டபிளை கத்தியால் குத்திய அங்காடி வியாபாரி கைது

### பசறையில் சம்பவம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

நகரில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள், கத்தியால் தாக்கப்பட்ட சம்பவம், பசறை நகரில் நேற்று நடந்துள்ளது. பசறை பஸ் நிலையத்தில் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளை அங்காடி வியாபாரத்தை மேற்கொண்டிருந்த நபர், தம்மிடமிருந்த கத்தியை எடுத்து, பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கியுள்ளார். இத் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் உடனடியாக, பசறை அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்..

இத் தாக்குதலை மேற்கொண்ட அங்காடி வியாபாரி ஏனைய பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, தீவிர புலன் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பசறையில் பொது மக்களுக்கும், பஸ் பயணிகளுக்கும் இடையூறுகளை, மேற்படி வியாபாரி மேற்கொண்டிருந்ததினால், குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள், அவ் வியாபாரியை எச்சரித்தார். இதையடுத்து, ஆத்திரம் கொண்ட அங்காடி வியாபாரி, பொலிஸ் கான்ஸ்டபிள்ளை கத்தியால் தாக்கியுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

## நுவரெலியா – தலவாக்கலை வீதியில் வெடிப்பு

நுவரெலியா – தலவாக்கலை பிரதான வீதியில் புனரமைக்கப்பட்ட பாதையில் ஏற்பட்ட வெடிப்பால் பள்ளம் ஏற்பட்டுள்ளது.

ரதல்ல சந்தி முதல் நானு ஓயா சந்தி வரையிலான சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப்பாதை கடந்த 2 வருட காலமாக புனரமைக்கப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் நானு ஓயா ட்ரஸ் போட் கிறிஸ்தவ ஆலயத்திற்கு முன்பாகவுள்ள வீதியிலே பள்ளம் ஏற்பட்டுள்ளது.இதனால் போக்குவரத்து நடவடிக்கைகள் ஒரு வழியாக மட்டுப்படுத்தபட்டுள்ளது.

உடனடியாக இப்பாதையை சீரமைக்கா விட்டால் பாரிய விபத்துகள் ஏற்படக்கூடும் என பொது மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



இறக்குவானை மாதம்பை பிரதான வீதியில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதை காணலாம்....

படம் இறக்குவானை தினகரன் நிருபர்

## பசறை தனியார் பஸ் விபத்து; சாரதிக்கு விளக்க மறியல் நீடிப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பசறையில் விபத்துக்குள்ளான பஸ்சின் சாரதி நேற்று பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது, நீதிபதி சமிந்த கருணாதாச அச்சாரதியை எதிர்வரும் 21ந் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 20ந் திகதி பசறை 13ம் மைல் கல்லருகே இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தில் 14 பேர் பலியானதுடன், 32 பேர் காயங்களுக்குள்ளாகினர். இவ் விபத்தில் சாரதியும் காயமுற்ற நிலையில், பாதுகாப்புடன், விளக்கமறியலில் வைக்கப்பட்டு பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துக்குள்ளான பஸ்சின் எதிர்த்திசையில் வந்த லொறிச் சாரதியை நீதிபதி சரீரப் பிணைகளில் விடுவித்துள்ளார்.

## சம்பள விடயத்தில் கம்பனிகள் பகல் கொள்ளை அடிக்கின்றனர்

### உதயகுமார் எம்.பி

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் கம்பனிகள் பகல் கொள்ளை அடித்து வருவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மயில்வாகனம் உதயகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

சம்பள உயர்வு என்ற போர்வையில் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்காது கம்பனிகள் அவர்களை பழிவாங்கி வருவதாக அவர் கூறினார்.

இது தொழிலாளர்களின் தொழில் உரிமை மற்றும் அடிப்படை உரிமையை மீறும் செயல் என மயில்வாகனம் உதயகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பழங்குடி மக்களின் பரிதாப நிலை

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஒரு வழியாக நிறைவடைந்து விட்டது. பெரிய அளவில் வன்முறை நிகழ்வுகள் ஏதும் இல்லாமல் அமைதியாக நடைபெற்றது அனைவருக்கும் மகிழ்ச்சிதான். மாநிலம் முழுவதும் 72.78 விழுக்காடு வாக்குகள் பதிவாகி இருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டப் பேரவைத் தொகுதிகளில் பழங்குடியின மக்களுக்கென ஒதுக்கப்பட்ட இரண்டு தொகுதிகள் ஏற்காடு மற்றும் சேந்தமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதிகள். இந்த தொகுதிகளுக்கு உட்பட்ட மலைப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களைச் சந்திக்க எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் வரவில்லை என்பது அப்பகுதி மக்களை அதிருப்தியடைய வைத்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு தொகுதியில் சேர்வராயன் மலையின் மீது ஏற்காடு கோடை வாழிடம் மற்றும் 65 மலை கிராமங்கள் உள்ளன. மேலும் கல்வராயன் மலைத் தொடரில் உள்ள பல கிராமங்களும் இத்தொகுதிக்குள் அடங்கியுள்ளன. இதேபோல சேந்தமங்கலம் தொகுதிக்கு உள்பட்ட கொல்லிமலையில் 14 பெரிய கிராமங்களுக்குள் அடங்கிய 100க்கும் மேற்பட்ட சிறிய மலை கிராமங்களும் உள்ளன.

இந்த மலை கிராமங்களுக்கு அந்தத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள், அவர்கள் சார்ந்த கட்சியின் மாவட்டப் பிரமுகர்கள் மட்டுமே வாக்கு சேகரிக்க வந்துள்ளனர். அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் பரப்புரைக்கு வரவில்லை. இந்தப் புறக்கணிப்பு அப்பகுதி மக்களுக்கு வேதனையையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது. சாதாரணமாக வந்து போகும் தலைவர்கள் கூட தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு வரவில்லை என்பது அதிர்ச்சியாக உள்ளது என்கிறார்கள்.

ஏற்காடு தொகுதி வேட்பாளருக்கு ஆதரவாக மலை மீதேறி எந்தத் தலைவரும் பரப்புரைக்கு வரவில்லை என்பது அப்பகுதி பழங்குடி மக்களுக்கு பழகிப்போன ஒன்றுதான். வாக்கு சேகரிக்கவே வராத இந்தத் தலைவர்கள் அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வருவார'களா? அவர்களுக்கான மக்கள் நலத் திட்டங்களின் நிலை என்ன என்பதெல்லாம் கேள்விகளாகவே இருக்கின்றன.

தொகுதிக்கு உட்பட்ட சமவெளிப் பகுதிகளான அயோத்தியாபட்டணம், வாழப்பாடி உள்ளிட்ட இடங்களில் தலைவர்களின் பரப்புரை முடிந்து விடுகிறது. அதற்கு மேல் தொகுதிக்குள் யாரும் நுழைவதில்லை. இந்த நிலைதான் இன்னும் நீடிக்கிறது.

இப்போது தமிழகத்தில் 36 பட்டியல் பழங்குடிகள் உள்ளனர். என்று அரசு அங்கீகரித்துள்ளது. இவர்களுக்கே சாதிச் சான்றிதழ் வாங்க முடியாமல் திண்டாடுகின்றனர். பிள்ளைகள் பள்ளியில் சேர முடியவில்லை. படிக்க முடியவில்லை. அரசு வேலை என்பது கனவு கூட காண முடியாது.

பழங்காலம் தொட்டு காடுகளே பழங்குடிகளின் வாழ்விடமாக இருந்தது. காலனி ஆட்சியில் காடுகளின் பெரும்பகுதி அரசு வசம் கொண்டு வரப்பட்டது. ஆங்கில அரசு கொண்டு வந்த முதல் வனச் சட்டம் (1846) பழங்குடிகளின் வாழ்வில் திசையையே மாற்றியது.

காடுகளைப் பல்வேறு காரணங்களால் இழந்து கொண்டிருந்த பழங்குடி அமைப்புகள் நீண்ட காலமாகவே வன உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. அரை நூற்றாண்டு காலப் போராட்டத்துக்குப் பிறகு மத்திய அரசு 'வன உரிமைச் சட்டம் (2006)' இயற்றியது. ஒவ்வொரு பழங்குடிக் குடும்பத்துக்கும் வனத்தில் நிலத்தை ஒதுக்க வழிவகுத்தது.

தமிழக மக்கள்தொகையில் ஒரு விழுக்காடு மட்டுமே பழங்குடிகளாக உள்ளனர். தமிழகத்தில் பட்டியல் பழங்குடியினர் படிப்புக்கும், வேலைவாய்ப்புக்கும் பழங்குடிச் சான்றிதழ் பெறுவதில் பல தடைகள் உள்ளன. பழங்குடி அல்லாதவர்கள் போலிச் சான்றிதழ் பெறுவது மட்டும் தொடர்ந்து நடந்து வருகிறது.

இப்போது மத்திய அரசு, இந்திய வன (திருத்த) சட்டம் 2019 என்ற மசோதாவைக் கொண்டு வந்துள்ளது. இந்தத் திருத்த சட்டத்தில் நாடு முழுவதும் உள்ள வனங்கள் முழுவதையும் மத்திய அரசு தமது கையில் எடுத்துக் கொள்ள வழிவகை செய்கிறது.

வனங்கள் முதலில் மாநில அரசுகளின் அதிகாரத்தில் இருந்தது. பிறகு 1976ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி வனம் மத்திய மாநில அரசுகளின் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. இனி மாநில அரசு, வனம் தொடர்பான எந்தவொரு முடிவை எடுப்பதாக இருந்தாலும் மத்திய அரசின் ஒப்புதலைக் கட்டாயம் பெற வேண்டும்.

வன உரிமைச் சட்டம் 2006இல் கிராம சபைக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டிருந்தது. இப்போது வனத்துறை அதிகாரிகளுக்கே முழு அதிகாரமும் வழங்கப்படுகிறது. ஆதிவாசிகள் வனத்தைத் தங்கள் சொந்த தேவைக்காக மட்டுமே பயன்படுத்தி வந்தனர். இப்போது அரசு வன வளங்களை வியாபார முறையாகப் பயன்படுத்த புதிய சட்டம் வழிவகை செய்கிறது.

இதன்மூலம் வனத்தை அழித்து லாபம் தரக்கூடிய பணப் பயிர்களை உற்பத்தி செய்ய முற்படுவர். இதனால் இத்தனை காலம் வாழ்ந்து வந்த மக்கள் வெளியேற்றப் படுவர்.

ஒருவர் வனக்குற்றத்தில் ஈடுபட்டவர் என்று வனத்துறை அதிகாரி முடிவு செய்தால் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் ஆதாரமின்றி, வாரண்ட் இல்லாமல் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். இந்த அளவுக்கு வானளாவிய அதிகாரம் அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

வனசிறு மகசூல்களைச் சேகரித்து எங்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்று வன உரிமைச் சட்டத்தில் வழங்கியிருந்த உரிமை பறிக்கப்பட்டு, எதை எதை சேகரிக்கலாம் என்பதையும், அதற்கான கட்டணம் என்ன என்பதையும் வன நிர்ணய அலுவலர் தீர்மானிப்பார். இதன்மூலம் ஆதிவாசி சமூகத்திற்கு இருந்த கொஞ்சநஞ்ச உரிமையும் பறிக்கப்பட்டுவிட்டது. இந்தத் திருத்தச் சட்டம் ஆதிவாசிகளின் வனஉரிமையைத் தடை செய்கிறது. இதுவரை இருந்து வந்த வன உரிமைச் சட்டம் 2006 இனிமேல் பெயரளவுக்குதான் இருக்கும். இதுவரை தங்கள் தாயகமாக இருந்த வனங்கள் இனி அவர்களுக்குச் சொந்தமில்லை. தங்கள் தாய் நாட்டிலேயே அவர்கள் ஆதரவற்றவர்களாக ஆக்கப்படுகின்றனர்.

ஆதிவாசிகள் வன உரிமையை நிலைநிறுத்திக் கொள்ள நீதிமன்றம் செல்லலாம் என்றால் மாவட்ட நீதிமன்றம் செல்வதே இறுதியானது. உயர்நீதிமன்றத்திற்கோ, உச்சநீதிமன்றத்திற்கோ மேல்முறையீடு செய்ய முடியாது என்று திருத்தச் சட்டம் சொல்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் மக்களின் பக்கமே நிற்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமானது. அதிலும் வலிமையானவர்கள் வலிமை குறைந்தவர்களைக் காப்பாற்றக் கடமைப் பட்டவர்கள். அந்த கடமையைச் செய்யாமல் போனால் அந்த அதிகாரத்தால் பயன் இல்லாமல் போகும்.

# நகர்வலம்



# அநுராதபுர விவசாயிகளிடமிருந்து 9000 மெ.தொன் நெல் கொள்வனவு

( திறப்பனை தினகரன் நிருபர் )

நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுர மாவட்ட நெல் கொள்வனவு வேலைத் திட்டத்தின் கீழ் இது வரையில் 9000மெட்ரிக் தொன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுர மாவட்ட முகாமையாளர் நிமல் தென்னக்கோன் தெரிவித்தார். இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை அரிசியாக மாற்றி நுகர்வோருக்கு வழங்கும் வேலை திட்டத்தின் கீழ் இது வரையில் 500 தொன் அரிசி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ச.தொ.ச, கூட்டுறவுக் கடைகள், புட் சிட்டி போன்ற விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு இவ் அரிசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பச்சை அரிசி கிலோ 93 ரூபா வீதமும், நாடு கிலோ 96 ரூபாவாகவும், சம்பா 98 ரூபாவுக்கும் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தின் 29 நெல் கொள்வனவு நிலையங்களில் தற்சமயம் நெல் கொள்வனவு வேலைகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதோடு சுமார் 600 மில்லியன் ரூபா வரையில் நெல் கொள்வனவுக்காக செலவிடப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்ட நெல் கொள்வனவு வேலைகள் இம்மாதம் 12 தொடக்கம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மீண்டும் சிங்கள, தமிழ் புத்தாண்டுக்குப் பிறகு நெல் கொள்வனவு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் நெல் கொள்வனவில் ஏற்பட்டுள்ள போட்டித் தன்மை காரணமாக நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல்லை வழங்குவது குறைவடைந்துள்ள நிலையில் இது வரையில் பொலன்னறுவை மாவட்டத்தில் 1400 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டு நுகர்வோருக்கு இது வரையில் 150 மெட்ரிக் தொன் அரிசி வழங்கப்பட்டுள்ளதாக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.




பல் வைத்திய துறையின் நவீன தொழில்நுட்பம் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து பல் வைத்தியர்களுக்கென கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஒரம் தனியார் நிறுவனம் ஏற்பாடு செய்த இரண்டு நாட்கள் செயலமர்வில் இடம்பெற்ற போட்டியொன்றில் முதலிடம் பெற்ற டொக்டர் டப்ளியூ.எம்.எச்.எல்.பி. விஜேதுங்க ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பேர்க் செல்வதற்கான விமான டிக்கட்டை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் முஸ்தாக் ஜாபிர் உத்தியோகபூர்வமாக வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

## மதவாக்குளம் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்ற அதிபர் பஷீருக்கு கௌரவம்

ஆணமடுவ தொகுதியில் அமைந்துள்ள மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலத்தில் மிக நீண்டகாலமாக தன்னை அர்ப்பணித்து 37 வருடங்கள் சேவையாற்றிய அதிபர் ஐ.எம். பஷீர். ஏப்ரல் 10ம் திகதி ஓய்வு பெற்றார்.

பிரியாவிடை நிகழ்வு மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் ஐ.எம்.பஷீர், ஷரபிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் இம்ரான், உப அதிபர் முகமட் ஆசிரியர், எஸ்டா சங்கத்தின் உறுப்பினர்கள், புத்தளம் வலயக்கல்வி கல்வி பிரதிப் பணிப்பாளர் அலி ஜின்னா,வலயக் கல்வி பணிப்பாளர் அர்ஜூன , பள்ளி நிர்வாகிகள், பாடசாலை பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இப் பிரியாவிடை நிகழ்வில் அதிபருக்கு ஆசிரியர்களினால் நினைவுச்சின்னங்களும், ஒரு இலட்சம் பெறுமதியான வவுச்சரும் வழங்கப்பட்டன. அத்துடன் இதில் தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் சின்னங்களும் வழங்கப்பட்டன.



தன்னுடைய சேவைக்காலத்தில் இவரின் திட்டத்தை சரியாக நிர்ணயித்து மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலத்தை பல சவால்களுக்கு மத்தியில் வழிநடத்தி வந்தார். சிறந்த பெறுபேற்றுக்களோடு முதல் முறையாக 2007ம் ஆண்டு உயர்தரத்தில் மாணவர்கள் வெற்றிகரமான முறையில் சிறப்பான முறையில் சித்தியடைந்தனர். இது எமக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும் என அதிபர் இங்கு குறிப்பிட்டார்.

( சில்மியா யூசுப் )

## தேசத்தின் ஒற்றுமை,ஒருமைப்பாட்டை வெளிக்கொணர அரிய வாய்ப்பு

ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில்

தேசத்தின் கலாசார விழுமியங்ளை போற்றி கொண்டாடப்படுகின்ற பெருவிழாவான தமிழ், சிங்கள புத்தாண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் சாந்தி, சமாதானம், சுபீட்சம் நிறைந்த ஆரோக்கியமான புதுவருடமாக அமையட்டும் என ஊவா மாகாணத்தின் ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்றின் தாக்கம் காரணமாகக் கடந்த இரண்டு வருட காலமாக குடும்ப அங்கத்தவர்களோடு மாத்திரம் புது வருடத்தைக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தரமான முகாமைத்துவம் என்பன காரணமாக தற்பொழுது நாட்டில் சுமூகமான சூழலை ஏற்பட்டுள்ளது.

சுகாதார ரீதியான தடைகள் மற்றும் சிபாரிசுகளின் மத்தியிலும் புத்தாண்டின் அர்த்தம் அழிந்து விடாது பேணிக்கொள்ள முடியும் என நான் நம்புகிறேன்.



“சிங்கள, தமிழ்ப் புத்தாண்டானது இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. ஒரே நொடியில் எமக்கு தேசத்தின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வெளிக்கொணர்வதற்கான அரிய வாய்ப்பும் கிட்டும்.

பலநூறு ஆண்டுகள் தொடர்ந்து வழிநடாத்திய பண்பாடுகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட தேசிய எண்ணங்களின் பெறுமதி, ஏனைய நாட்களை விட, இந்நாட்களில் தென்படுவது வழமை. இன்று சம்பிரதாயபூர்வமாக எமக்கிடையில் காணப்பட்ட தொடர்புகள், வலுவடைந்த கலாசாரம் என்பன காரணமாகவே உலகை ஆட்டிப்படைத்து நிர்க்கதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட இக் கொடிய நோய்க்குச் சிறந்த முறையில் முகங்கொடுத்தோம்.

அது போன்ற நற்பண்புகளுக்கு புத்துயிரூட்டி சிங்கள, தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடுகின்ற உள்ளூர் மற்றும் வெளியூரில் வாழும் அனைத்து இலங்கையர்களுக்கும் சாந்தி, சமாதானம், சுபீட்சம், நிறைந்த இனிய புத்தாண்டாக அமையட்டும் என இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

## நவீனமயப்படுத்தப்பட்ட மண்டபத் திறப்பு விழா





அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வடமத்திய மாகாண சபைக்கான 900 ம் ஆசனங்களை கொண்ட முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்ட கூட்ட மண்டபத்தை மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் அண்மையில் (07) திறந்து வைத்தார்.

இந்த நவீனமயப்படுத்தப்பட்ட கூட்ட மண்டபத்திற்கு தற்போது 1.6 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதுடன் இதனை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு இன்னும் 450 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாகவும் மாகாண செயலாளர் எச்.எம்.பீ.பண்டார தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர் இந்த கூட்ட மண்டபம் சர்வதேச அளவிலான கூட்ட மண்டபத்திற்கு ஒப்பானதாகும்.அதனூடாக பல்வேறுபட்ட தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விழாக்களை நடத்துவதற்கும் வழங்க முடியும் என தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் : இந்த கூட்ட மண்டபம் இம்மாகணத்திற்கு கிடைக்கப்பெற்ற பாரிய வளமாகும் . முன்னால் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்கவின் தூர சிந்தனை கொண்ட அரசியல் முதிர்ச்சியில் மாகாணத்தின் தேவைகளை கருத்திற்கொண்டு செயற்பட்ட தலைவர். அவர் சகல பிரிவுகளிலும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தவர் எனவும் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியே இதனை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானமிக்க பாரிய வளமாகும். அவர் அன்று எடுத்த தீர்க்க தரிசனமான தீர்மானம் இன்று மலர்ந்துள்ளது.யாரேனும் அதனை குறைத்து மதிப்பிட்டாலும் குறை கண்டாலும் இம்மாகாணத்திற்கு பாரிய வளத்தைதந்து விட்டே பேர்டி பிரேமலால் திஸாநாயக்க முன்னாள் முதலமைச்சர் எம்மை விட்டு பிரிந்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



2019ம் ஆண்டு சிறந்த பெறுபேற்றை எடுத்த விவேகானந்த தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி ரவிசந்திரிகாவை தந்தை செல்வா நற்பணி மன்றமும் கொட்டாஞ்சேனை வட்ட அரிமா சங்கமும் இணைந்து கௌரவித்தது. மன்றத்தின் தலைவர் என். ராஜாவின் தலைமையில் நடைபெற்ற இதில், கொட்டாஞ்சேனை அரிமா சங்கத்தின் கல்விக்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளர் எஸ். கே. தளையரட்ணம், பிரதி அதிபர். மயூரன், உப அதிபர் சாந்தகுமார் மன்றத்தின் பொருளாளர் திருமதி. மணிமேகலாதேவி, நிர்வாக செயலாளர் திருமதி புவனேஸ்வரி, பிரதி தலைவர் நிலாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## 10 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா சேனைகள் கண்டுபிடிப்பு

ஹம்பாந்தோட்டைகுறுப் நிருபர்

சூரியவெவ விசேட பொலிஸ் அதிரடிப்படைமுகாமினால் தனமல்விலை கொஸ்லந்த மற்றும் ஹம்பேகமுவை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போது பத்து கோடி ரூபாய் பெறுமதியான பத்து கஞ்சா சேனைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படைஅதிகாரிகள் தெரிவித்தனர். இந்தசுற்றிவளைப் பிற்கு சூரியவெவ விசேடபொலிஸ் அதிரடிப்படை அதிகாரிகளோடு உடவலவை,கஹவத்தை,கதிர்காமம் மற்றும் அம்பலாந்தோட்டை ஆகிய பிரதேச முகாம்களிலுள்ள 60 விசேடஅதிரடிப்படைஅதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். இரண்டுதினங்கள் மேற்கொள்ளப்பட்ட இந்தசுற்றி வளைப்பின் போது கண்டுபிடிக்கபட்ட கஞ்சா சேனைகள் முற்றாக அழிக்கப்பட்டு சந்தேகநபரை பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தாகவும் சூரியவெவ விசேடபொலிஸ் அதிரடிப்படைமுகாம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மனைவியை கொலை செய்து மறைத்து வைத்தவர் கைது

(புத்ததளம் தினகரன், புத்தளம் விஷேட நிருபர்கள்)

தனது மனைவியை பொல்லால் அடித்துக் கொலை செய்து சடலத்தை வீட்டின் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளியன்று (09) இரவு சடலத்தை எடுத்துச் செல்வதற்கு ஆயத்தமாகவே இவ்வாறு கட்டிலுக்கு அடியில் மறைத்து வைத்திருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

29 வயதுடைய யுவதியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதோடு, அவ்யுவதியின் 35 வயதுடைய கணவனே கைது செய்யப்பட்டவராவார். இவர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி இடம்பெற்ற கைகலப்பிலேயே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு தாக்கப்பட்டதில் உயிரிழந்த மனைவியின் சடலத்தை சாக்கினால் சுற்றி வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஆயத்தமாக மறைத்து வைத்திருந்த போதே அச்சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் தரம் ஒன்று மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் நஸ்ரியா முனாஸின் தலைமையில் நடைபெற்ற வைப்பவத்தில் சுகாதார அமைச்சின் சமூக மருத்துவ ஆலோசகர் டாக்டர் அசார் கௌஸ் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார். மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(படம் : ருசைக் பாரூக்)

## இந்திய செய்திகள்



# தமிழகத்தில் அதிகரிக்கும் கொரோனா பரவல்

## முதலமைச்சர் பழனிசாமி அவசர ஆலோசனை



இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை வேகமெடுத்து வருகிறது. நாட்டில் கொரோனாவின் முதல் அலையைவிட 2வது அலை மிகவும் வீரியமாக தாக்கி வருவது மத்திய, மாநில அரசுகளுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. இந்த தொற்றை தடுப்பதற்கு மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதேபோல, தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. நாள் ஒன்றுக்கு தமிழகத்தில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பரவலை தடுக்க தமிழக சுகாதாரத்துறை சார்பில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மேலும், கொரோனா அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் புதிய கட்டுப்பாடுகள் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று மதியம் தலைமைச் செயலகத்தில் விசேட ஆலோசனை மேற்கொள்ள ஏற்பாடாகியது.

இந்த ஆலோசனையில் அமைச்சர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகள் பங்கேற்க உள்ள இக்கூட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. இந்த ஆலோசனைக்குப் பிறகு ஒரு சில முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்கு பதிவு இயந்திரங்கள் உள்ள பாதுகாப்பு அறைகளுக்கு வீடியோ பதிவு



ஓட்டு எண்ணிக்கை நாளன்று 'ஸ்ட்ராங் ரூம் சீல்' அகற்றப்பட்டதும் ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் வீடியோ பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது,

தமிழகத்தில் கடந்த 6ம் தேதி சட்டசபை தேர்தல் ஓட்டுப்பதிவு நடந்தது. ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள 'ஸ்ட்ராங் ரூம்'களுக்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த அறைக்கு 'சீல்' வைப்பதற்கு முன் அதிகாரிகள் மற்றும் கட்சி முகவர்கள் முன்னிலையில் வீடியோ பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பதிவான ஓட்டுகள் மே 2ம் தேதி எண்ணப்பட உள்ளன .ஓட்டு எண்ணும் முன் அறையின் 'சீல்'அகற்றப்படும்; பின் இயந்திரங்களை ஓட்டு எண்ண எடுக்கும் முன் மீண்டும் வீடியோ பதிவு செய்யப்படும்.

கட்சி முகவர்கள் மற்றும் வேட்பாளர்கள் சந்தேகம் எழுப்பினாலோ புகார் அளித்தாலோ சீல் வைக்கப்பட்டதற்கு முன் எடுக்கப்பட்ட வீடியோவுடன் இந்த வீடியோ ஒப்பிட்டு பார்க்கப்படும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கிழக்கு கடற்கரை ரயில் பாதை திட்டத்தை கைவிடக் கூடாது



'கிழக்கு கடற்கரை ரயில் பாதை திட்டத்தை, அரசு கைவிடக்கூடாது' என பா.ம.க., நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு கடற்கரை ரயில் பாதை அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, பல ஆண்டுகளுக்கு மேலாகிறது. திட்டமிட்டபடி பணிகள் தொடங்கியிருந்தால், எப்போதோ முடிக்கப்பட்டு, ரயில் போக்குவரத்து ஆரம்பமாகியிருக்கும். அதை செய்வதற்கு பதிலாக, காரைக்குடி கன்னியாகுமரி இடையே பாதை அமைப்பதற்காக செய்யப்படும் முதலீட்டிற்கு, தகுந்த வருமானம் கிடைக்காது என்பதையே, மீண்டும் மீண்டும் சொல்லி, அத்திட்டத்தை கைவிடுவதில் தான், அரசு உறுதியாக உள்ளது. இந்தப் பாதையில் சுற்றுலா தலங்களும், ஆன்மிக தலங்களும் இருப்பதால், பயணியர் ஆதரவுக்கு ஒரு போதும் குறை இருக்காது. துாத்துக்குடி சென்னை வரையிலான கிழக்கு கடற்கரையில், அதிக எண்ணிக்கையில் துறைமுகங்களும் அமைக்கப்பட உள்ளன. இவற்றில் இருந்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சரக்குகளை கொண்டு செல்ல ரயில்கள் தேவை. இப்பாதையில் சரக்கு ரயில் வண்டிகளை இயக்குவதன் வாயிலாக, மிகக்குறுகிய காலத்தில் முதலீட்டை திரும்ப பெற முடியும். எனவே, சென்னை முதல் கடலுார் வரை புதிய பாதை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு அதிகரித்து விட்ட நிலையில், அதற்கான நிதியை ஒதுக்கி பணிகளை துவக்க வேண்டும்.

# ரெம்டெசிவர் தடுப்பூசி ஏற்றுமதிக்கு தடை




இந்தியாவில் ரெம்டெசிவர் மருந்தின் தேவை அதிகரித்துள்ளதால் கோவிட் நிலவரத்தில் முன்னேற்றம் ஏற்படும் வரை அதன் ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்தியாவில் கோவிட் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும் ரெம்டெசிவர் ஊசியின் தேவையை திடீரென அதிகமாக்கியுள்ளது. வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

அமெரிக்காவின் ஜிலீட் சயின்சஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து, ரெம்டெசிவர் ஊசியை, 7 இந்திய நிறுவனங்கள் தயாரித்து வருகின்றன. இந்த நிறுவனங்கள், மாதம் 38.80 இலட்சம் மருந்துகள் தயாரிக்கும் திறன் வாய்ந்தவை.

தற்போதை கோவிட் அதிகரிப்பு சூழலை கருத்தில் கொண்டு, இந்தியாவில் கோவிட் நிலவரத்தில் முன்னேற்றம் ஏற்படும் வரை, ரெம்டெசிவர் ஊசி மற்றும் ரெம்டெசிவர் ஆக்டிவ் மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

மேலும், ரெம்டெசிவர் ஊசிகள் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் நோயாளிகளுக்கு எளிதில் கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளது.

இந்த மருந்து எளிதில் கிடைக்கும் வகையில், உள்நாட்டில் ரெம்டெசிவர் ஊசி மருந்து தயாரிக்கும் அனைத்து நிறுவனங்களும், ரெம்டெசிவர் இருப்பு நிலவரம், விநியோகிஸ்தர்கள் விவரங்களை தங்கள் இணையதளத்தில் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்த இருப்பு விவரங்களை மருந்து ஆய்வாளர்கள் மற்றும் இதர அதிகாரிகள் சரிபார்த்து, முறைகேடுகள் நடந்ததால் மற்றும் கள்ளச் சந்தையில் விற்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாநில சுகாதாரத்துறை செயலாளர்கள் இது குறித்து, அந்தந்த மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் மருந்து ஆய்வாளர்களுடன் ஆலோசிக்க வேண்டும். ரெம்டெசிவர் மருந்து உற்பத்தியை அதிகரிக்கும்படி உள்நாட்டு நிறுவனங்களுக்கு மருந்தியல் துறை கூறியுள்ளது.

# கொரோனா சிகிச்சைக்கு 500 ரயில் பெட்டிகள் தயார்

## தென்னக ரயில்வே அறிவிப்பு




சென்னையில் கொரோனா நோயாளிகளால் மருத்துவமனைகளில் படுக்கைகள் நிரம்பி வருகின்றன. மாநகராட்சி மருத்துவமனைகளில் 60 சதவீதம் இடங்கள் நிரம்பி விட்டன. முக்கிய மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லாத நிலை ஏற்பட்டதையடுத்து ரெயில் பெட்டிகளை கொரோனா சிகிச்சைக்கு ஒதுக்கி தர தயாராக இருப்பதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியபோது, “கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெறுவதற்காக எங்களிடம் 500 ரெயில் பெட்டிகள் தயார் நிலையில் உள்ளன. தமிழக சுகாதாரத்துறை அதிகாரிகள் கேட்டால் இந்த பெட்டிகளை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். இந்த தகவலை தமிழக அரசுக்கு ஏற்கனவே தெரிவித்து விட்டோம்” என்றனர்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு கொரோனா பரவல் அதிகரித்தபோது மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதையடுத்து ரெயில் பெட்டிகள் கொரோனா சிகிச்சை படுக்கை அறைகளாக மாற்றப்பட்டன. இந்திய ரெயில்வே சார்பில் நாடு முழுவதும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழைய ரெயில் பெட்டிகள் படுக்கைகளாக மாற்றப்பட்டன.அந்த வகையில் பல மாநிலங்களில் 45 ஆயிரம் படுக்கை வசதிகள் ரெயில் பெட்டிகள் மூலம் பெறப்பட்டன.தெற்கு ரெயில்வேயில் சுமார் 500 ரெயில் பெட்டிகள் கொரோனா வார்டுகளாக மாற்றப்பட்டன. அதில் சில பெட்டிகள் கடந்த ஆண்டு கொரோனா நோயாளிகளுக்காக பயன்படுத்தப்பட்டன. கொரோனா தாக்கம் குறைந்த பிறகு அந்த ரெயில் பெட்டிகளில் மீண்டும் மாற்றங்கள் செய்யப்பட்டன. என்றாலும் பெரும்பாலான ரெயில் பெட்டிகள் இன்னமும் வார்டுகள் போன்று பயன்படுத்தும் நிலையிலேயே இருக்கின்றன.

இதற்கிடையே சென்னையில் கொரோனா நோயாளிகளால் மருத்துவமனைகளில் படுக்கைகள் நிரம்பி வருகின்றன. மாநகராட்சி மருத்துவமனைகளில் 60 சதவீதம் இடங்கள் நிரம்பி விட்டன.

# பிரதமர் நரேந்திர மோடியின் காதில் முஸ்லிம் இளைஞர் கூறியது என்ன?

## சமூக வலைதளங்களில் வைரல்



மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி கடந்த 2ம் தேதி சோனார்பூர் பகுதியில் பிரதமர் நரேந்திர மோடி பிரசாரம் செய்தார்.பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்படும்போது, முஸ்லிம் இளைஞர் ஒருவர், பிரதமர் மோடியை சந்தித்தார். அப்போது அவரது காதில் இளைஞர் எதையோ கூற, பிரதமர் மோடி இளைஞரின் தோளை அரவணைத்து உன்னிப்பாகக் கேட்டார். இந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. யார் அந்த இளைஞர், பிரதமர் மோடியிடம் அவர் என்ன கூறினார் என்ற கேள்வி சமூக வலைதளங்களில் ஓங்கி ஒலித்தது.

புகைப்படம் தொடர்பாக ஏஐஎம் ஐஎம் தலைவர் ஒவைசி, எதிர்மறையான விமர்சனத்தை முன்வைத்தார். அந்த இளைஞர் முஸ்லிம் அல்ல. மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்காக பாஜக நடத்திய நாடகம் இது என்றார்.

இதனிடையே முன்னணி ஊடகங்களின் நிருபர்கள், விசாரணை நடத்தி அந்த இளைஞரை தேடி கண்டுபிடித்தனர். அந்த இளைஞர் கொல்கத்தாவின் மீடியாபுரூஸ் பகுதியை சேர்ந்த ஜுல்பிகர் அலி (38) என்பது தெரியவந்தது. அவர் நிருபர்களிடம் கூறியதாவது: ஏப்ரல் 2ம் திகதி சோனார்பூரில் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 40 விநாடிகள் மட்டுமே பிரதமருடன் பேசினேன். இது 40 ஆண்டுகள் வரை என் வாழ்க்கையில் நீக்கமற நிறைந்திருக்கும். எனது பெயரை பிரதமர் கேட்டறிந்தார். எனக்கு ஏதாவது வேண்டுமா என்று அன்போடு கேட்டார். எனக்கு எம்எல்ஏ சீட் வேண்டாம், கவுன்சிலர் சீட் கூட வேண்டாம். உங்களோடு சேர்ந்து புகைப்படம் எடுத்து கொள்ள வேண்டும். அதுதான் எனது பேராசை என்று கூறினேன். அவர் உடனடியாக புகைப்பட நிபுணரை அழைத்து புகைப்படம் எடுக்க செய்தார்.

நான் முஸ்லிம். கடந்த 2014 ம்ஆண்டு முதல் பாஜகவில் உள்ளேன். தற்போது தெற்கு கொல்கத்தா மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு தலைவராக பதவி வகிக்கிறேன். இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக சேவையாற்ற விரும்பினேன். அந்த வாய்ப்பை இழந்துவிட்டேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கேரள கவர்னர் ஆரிப் முகமது கான் இருமுடி ஏந்தி சபரிமலையில் தரிசனம்

கேரள கவர்னர் ஆரிப் முகமது கான், நேற்று முன்தினம் இருமுடி கட்டி வந்து, சபரிமலையில் தரிசனம் செய்தார்.கேரள கவர்னர் நேற்று முன்தினம் மாலை, மகன் கபீருடன் பம்பை வந்தார். மாலை 5:10 மணிக்கு இருமுடி கட்டுடன், மலை பாதையில், சுவாமி ஐயப்பன் ரோட்டில் நடக்க தொடங்கினார். இரவு, 7:00 மணிக்கு சன்னிதானம் பெரிய நடைப்பந்தல் வந்து சேர்ந்தார். அவரை திருவிதாங்கூர் தேவசம் போர்டு தலைவர் வாசு மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். பின், படிபூஜையில் பங்கேற்றார்.

தலையில் இருமுடி கட்டுடன், 18ம் படி வழியாக சென்று, ஸ்ரீகோவில் முன் தலையில் இருமுடி கட்டுடன் நின்றபடி தரிசனம் செய்தார்.தந்திரி கண்டரரு ராஜீவரரு, அவருக்கு பிரசாதம் வழங்கினார். இரவு சன்னிதானத்தில் தங்கிய கவர்னர், நேற்று காலை மாளிகைப்புறம் கோவில் அருகே, சந்தன செடிகளை நட்ட பின், திருவனந்தபுரம் சென்றார்.

கொரோனா கட்டுப்பாடு காரணமாக அனுமதிக்கப்பட்ட வி.ஐ.பி., தரிசன வழியாக செல்லாமல், பக்தர்களின் வரிசையில் சென்று தரிசனம் செய்தார்.



## உச்ச நீதிமன்ற ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

### வழக்குகளை காணொளியில் விசாரிக்க நீதிபதிகள் முடிவு

உச்ச நீதிமன்ற ஊழியர்கள் பலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் முன்புபோல் வீட்டிலிருந்தே காணொளி மூலம் வழக்கு விசாரணைகளைத் தொடர நீதிபதிகள் முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் அன்றாட கொரோனா தொற்று பரவல் திகைக்கவைக்கும் அளவுக்கு அதிகரித்து வருகிறது. இந்நிலையில் உச்ச நீதிமன்ற ஊழியர்கள் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், உச்ச நீதிமன்ற வளாகம், அறைகள் முழுவதுமே கிருமிநாசினி மூலம் சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, பல நீதிபதிகளும் இனி முன்புபோல் காணொளியில் விசாரணையை வீட்டிலிருந்தே நடத்தப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது.



# சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது கொல்கத்தா நைட்ரைடர்ஸ்



சேப்பாக்கத்தில் நடைபெற்ற ஐபிஎல் போட்டியில் மணீஷ் பாண்டே கடைசி வரை போராடியும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் தோற்றது.

ஐபிஎல் 2021 சீசனின் மூன்றாவது ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. இதில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சன்ரைசர்ஸ் ஹைதராபாத் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஷுப்மான் கில் 15 ஓட்டங்களில் ஆட்டடமிழந்தார். அடுத்து நிதிஷ் ராணா உடன் ராகுல் திரிபாதி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சன்ரைசர்ஸ் ஹைதாராபாத் பந்து வீச்சை துவம்சம் செய்தது.

திரிபாதி 29 பந்தில் 53 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அந்த்ரே ரஸல் 5 ஓட்டங்களிலும், மோர்கன் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

சிறப்பாக ஆடிய நிதிஷ் ராணா 80 ஓட்டங்களில் வெளியேறினார். கடைசி கட்டத்தில் தினேஷ் கார்த்திக் 9 பந்தில் 22 ஓட்டங்கள் அடித்தார்.

இறுதியில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் எடுத்தது. சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கு 188 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது.



சன்ரைசர்ஸ் ஹைதராபாத் சார்பில் ரஷித் கான், முகமது நபி தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதையடுத்து, 188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக விருத்திமான் சாஹாவும், டேவிட் வோர்னரும் இறங்கினர்.

வோர்னர் 3 ஓட்டங்களிலும், சாஹா 7 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். 10 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது ஹைதராபாத்.

அடுத்து இறங்கிய மணீஷ் பாண்டேவும், பேர்ஸ்டோவும் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தனர். இந்த ஜோடி 92 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பேர்ஸ்டோவ் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். முகமது நபி 14 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து இறங்கிய விஜய் சங்கர் 11 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

கடைசி 2 ஓவரில் வெற்றிக்கு 38 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 19வது ஓவரில் 2 சிக்சர் உட்பட 16 ஓட்டங்கள் கிடைத்தது. மணீஷ் பாண்டே அரை சதமடித்தார்.

இறுதியில் ஹைதராபாத் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 177 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. மணீஷ் பாண்டே இறுதி வரை ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் கொல்கத்தா அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

## 34 ஆவது ரூபவாஹினி கரப்பந்தாட்ட போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச அணிகள் வெற்றி



*சண்முகம் தவசீலன்*

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் 34 ஆவது ரூபவாஹினி கரப்பந்தாட்ட சுற்று போட்டி நேற்று(10) ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் இணைந்து குறித்த போட்டியினை ஏற்பாடு செய்திருந்தனர் குறித்த போட்டியில் ஆண்கள் அணியில் 11 அணிகளும் பெண்கள் அணியில் 04 அணிகளும் கலந்து கொண்டு போட்டிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இறுதிப் போட்டிக்குகரைதுறைப்பற்றுபிரதேச அணியும் துணுக்காய் பிரதேச அணியும் தெரிவாகி இருந்தது இதனடிப்படையில் இறுதிப்போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச அணி துணுக்காய் அணியை வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது இதன் அடிப்படையில் இறுதிப் போட்டியில் முதலாவது இடத்தை பெற்றுக்கொண்ட கரைதுறைப்பற்று பெண்கள் அணிக்கு 7500 ரூபா பணப் பரிசும் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட துணுக்காய் பிரதேச பெண்கள் அணிக்கு 5000 ரூபாய் பணப் பரிசில்களும் வழங்கிவைக்கப் பட்டது.

அதேபோன்று ஆண்களுக்கான போட்டியிலே கரைதுறைப்பற்று பிரதேச அணியும் மணலாறு பிரதேச அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இருந்தன இதனடிப்படையில் இறுதிப்போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச அணி மணலாறு அணியை வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது இதன் அடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு 7500 ரூபா பண பரிசினையும் மணலாறு அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு ஐயாயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக் கொண்டனர்.



நிகழ்வில் வெற்றியீட்டியவர்களுக்கான பணப் பரிசில்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சறோஜா குகநேசதாசன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார், இளைஞர் சேவை அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் தனுஷன், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் விளையாட்டு செயலாளர் நிஷாக் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் கழக தேசிய சம்மேளன பிரதிநிதி பூஜிதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இவர்களுக்கான காசோலைகளை வழங்கி கௌரவித்தனர்.

## கல்முனை சனிமௌண்ட் விளையாட்டு கழகம் வெற்றி



*மாளிகைக்காடு குறூப் நிருபர்*

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் ஒழுங்கு செய்திருந்த ஏ டிவிசன் உதைபந்தாட்ட தொடரில் கல்முனை சனிமௌண்ட் விளையாட்டு கழகத்திற்கும் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டு கழகத்திற்கும் இடையிலான (நொக் அவுட்) விலகல் முறையிலான போட்டி கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை (7) இடம்பெற்றது.

இப்போட்டியில் கல்முனை சனிமௌண்ட் விளையாட்டு கழகம் 5-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. கல்முனை சனிமௌண்ட் விளையாட்டு கழகத்தின் சார்பில் ஏ.டபிள்யூ.எம்.றிபாஸ் 2 கோல்களையும், ஏ.ஆர்.எம்.பிரோஸ், ஏ.எஸ்.எம்.சஜீன் ஆகியோர் தலா ஒரு கோலையும் புகுத்தி கழகத்தின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

## ஹம்பாந்தோட்டை ஹோறநெட்ஸ் அணி சம்பியன்




*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*

இலங்கை கால்பந்து சம்மேளனம் டயலொக் ஆசியாட்டா நிறுவனத்தோடு இணைந்து ஏற்பாடு செய்திருந்த நான்கு சுற்றுக்களை கொண்ட கடற்கரை கால்பந்து போட்டியின் முதலாவது சுற்று ஹம்பாந்தோட்டை பீச் பார்க்கில் கடந்த 04 ம் திகதி இடம்பெற்றது.

உலகப் பிரசித்தி பெற்ற கடற்கரை கால்பந்து விளையாட்டினை எமது நாட்டிலும் பிரபல்யப்படுத்தி சிறந்த விளையாட்டு வீரர்களை இனங்கண்டு தேசிய ரீதியில் கடற்கரை கால்பந்து அணி ஒன்றினை உருவாக்குவதினை நோக்காகக் கொண்டு இப் போட்டித் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப் போட்டித் தொடரின் அடுத்து சுற்றுக்கள் நீர்கொழும்பு, கல்முனை மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெறவுள்ளது.

2020 ஆம் அண்டு நடைபெறவிருந்த இப் போட்டித் தொடர் கொவிட் 19 கொரோனா தொற்றின் காரணமாக பிற்போடப்பட்டு நாடத்தப்படுகிறது.

முதலாவது சுற்றுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இருந்து 12 அணிகள் கலந்து கொண்டன. ஹம்பாந்தோட்டை கிங்ஸ், ஹம்பாந்தோட்டை ஹோறநெட்ஸ், மாத்தறை ஈகல்ஸ், மாத்தறை மெரீன்ஸ், கோல் ஸ் டெலியன்ஸ், கோல் ஜயன்ட்ஸ், அம்பலாந்கொடை ரைடன்ஸ், அம்பலாங்கொடை வெர்ன் ஜர்ஸ், பேருவளை லயன்ஸ்;, பேருவளை புலூஸ், களுத்துறை நைட்ஸ் மற்றும் களுத்துறை ரோயல்ஸ் ஆகிய அணிகள் கலந்து கொண்டன.

அரை இறுதிப் போட்டியில் மாத்தறை மெரீன்ஸ் அணி களுத்துறை நைட்ஸ் அணியை (2-1) கோல் வித்தியாசத்திலும் ஹம்பாந்தோட்டை ஹோறநெட்ஸ் அணி களுத்துறை ரோயல்ஸ் அணியை (4-1) கோல் வித்தியாசத்திலும் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் ஹம்பாந்தோட்டை ஹோறநெட்ஸ் அணி மாத்தறை மெரீன்ஸ் அணியை (32) கோல் வித்தியாசத்தில் வெற்றி கொண்டு டயலொக் கடற்கரை கால் பந்து கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

## ஐ.பி.எல். ஆட்டத்தில் அதிக சிக்சர் விளாசி சாதனை படைக்க வேண்டும் - ஜோஸ் பட்லர்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக விளையாடுவதை மிகவும் ஆவலுடன் எதிர் நோக்குவதாக ஜோஸ் பட்லர் கூறியுள்ளார்.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஜோஸ்



பட்லர் (இங்கிலாந்து) இணைய தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டி வருமாறு:

கேள்வி: நடப்பு ஐ.பி.எல். தொடரில் எந்த அணிக்கு எதிராக விளையாடுவதை மிகவும் ஆவலுடன் எதிர் நோக்குகிறீர்கள்?

பதில்: சென்னை சூப்பர் கிங்ஸ்.

கேள்வி: இந்த ஐ.பி.எல்.ல் உங்களது தனிப்பட்ட இலக்கு என்ன?

பதில்: கோப்பையை வெல்ல வேண்டும்.

கேள்வி: ஐ.பி.எல்.ல் எந்த சாதனையை முறியடிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பதில்: ஒரு ஆட்டத்தில் அதிக சிக்சர் அடித்த வீரர் என்ற சாதனையை (இந்த வகையில் கிறிஸ் கெய்ல் ஒரு இன்னிங்சில் 17 சிக்சர் விளாசியதே சாதனையாக உள்ளது) நிகழ்த்த வேண்டும்.

கேள்வி: ஐ.பி.எல்.ல் உங்களது சிறந்த செயல்பாடு எது?

பதில்: 2018ம் ஆண்டு மும்பை இந்தியன்சுக்கு எதிராக 94 ஓட்டங்கள் விளாசிய இன்னிங்ஸ்.

கேள்வி: கொரோனா தடுப்பு உயிர் பாதுகாப்பு வளையத்திற்குள் இருக்கும் போது கடினமாக நினைக்கும் விஷயம்?

பதில்: அறையில் தனிமையில் முடங்குவதால் எழும் அச்சம்.



## ரி 20யில் 100 வெற்றிகளை பெற்ற முதல் அணி என்ற பெருமையை பெற்றது பாகிஸ்தான்

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் ரி 20 கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் பாகிஸ்தான் அணி 100 வெற்றிகளை பதிவு செய்துள்ளது.

தென்ஆபிரிக்கா பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் ரி 20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று நான்கு போட்டிகள் கொண்ட ரி 20 தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி ரி 20 கிரக்கெட்டில் சூப்பர் ஓவர் வெற்றியைத் தவிர்த்து 100 வெற்றிகள் பெற்ற முதல் அணி என்ற பெருமையை பெற்றுள்ளது.

அந்த அணி இதுவரை 164 போட்டிகளில் விளையாடி 100 வெற்றிகள் பெற்றுள்ளது. 59 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது. மூன்று போட்டிகள் டை ஆகியுள்ளன. இரண்டு போட்டிகள் கைவிடப்பட்டுள்ளன.

இந்தியா 142 போட்டிகளில் 88 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

47 போட்டிகளில் தோல்வியடைந்த நிலையில், 3 போட்டி டையில் முடிந்துள்ளது. நான்கு போட்டிகள் கைவிடப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா 136 போட்டிகளில் 71 வெற்றி, தென்ஆபிரிக்கா 128 போட்டிகளில் 71 வெற்றி, நியூசிலாந்து 145 போட்டிகளில் 71 வெற்றிகள் பெற்று உள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.